REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஏப்ரல் 24 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 - 2021


வரு. 89 இல. 96 | April 24, Saturday, 2021 | 16 பக்கங்கள் | 30/-


## துறைமுக நகர சட்டமூலம்

### எதிரான மனுக்களின் விசாரணை நிறைவு

கொழும்பு, துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

இந்த மனுக்கள் தொடர்பான உயர்நீதி மன்றத்தின் வியாக்கியானம் சபாநாயகருக்கு அனுப்பப்படவுள்ளதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.



அஸ்ட்ராசெனெக்கா – குருதி உறைவு கூடுதல் விசாரணை 02


யாழ். பல்கலை முள்ளிவாய்க்கால் நினைவு தூபி 09



10


வீரர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி 16


## நாட்டை முடக்கும் திட்டமில்லை; கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை

# அத்தியாவசியமற்ற அனைத்து பயணங்களையும் தவிர்க்கவும்

### அரசாங்கம் பொதுமக்களிடம் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டை முழுமையாக முடக்கவோ அல்லது கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தவோ எத்தகைய தீர்மானத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில் மக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டுமென கேட்டுக் கொண்ட இராணுவத் தளபதி அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

நீண்ட விடுமுறை வருகின்ற போது மாவட்டங்களுக்கிடையில் பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்ட அவர், புதுவருட கொண்டாட்ட நிகழ்வுகள், சுற்றுலா பயணங்கள், உற்சவங்கள் மற்றும் விளையாட்டுப்

06



தேவையேற்படின் குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்கு மட்டும் தனிமைப்படுத்தல்

### நாடு திரும்புவோர் தனிமைப்படுத்தல் 7 முதல் 14 நாட்கள்

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவோருக்கான தனிமைப்படுத்தல் காலம் மீண்டும் முன்பு இருந்ததைப் போல 07 முதல் 14 நாட்களாக இருக்குமென இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

## அடிப்படைவாதம் தொடர்பான வகுப்புகளில் பங்கேற்பு;

### பயங்கரவாதி சஹ்ரானின் மாமனார் உட்பட மூவர் கைது

கெக்குணுகொல்லயில் TID பொலிஸார் அதிரடி



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான குற்றவாளியான பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிம் மேற்கொண்ட அடிப்படைவாதம் தொடர்பான வகுப்புகளில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படும் 03 சந்தேகநபர்களை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்

06

## சலுகைப் பொதிகளில் ஊழல் மோசடியா?

### நிரூபித்தால் ஒரு மணி நேரத்தினுள் அமைச்சு பதவியை துறப்பேன்

பாராளுமன்றில் அமைச்சர் பந்துல சூளுரை

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



ச.தொ.ச உட்பட சுப்பர் மார்க்கட்டுகளில் புத்தாண்டு காலப்பகுதியில் மக்களுக்கு பெற்றுக்கொடுத்த சலுகைப் பொதிகளில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக நிரூபிக்கப்பட்டால் அமைச்சுப் பதவியை ஒரு மணி நேரத்தில் துறப்பேன் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை

06

## தகர்க்கப்பட்டு மீளமைக்கப்பட்ட

### முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நேற்று மீள திறப்பு



யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைகழக மாணவர்களாலேயே நினைவுத்தூபி

06


ரமழான் தொழுகை நேரம்

| | |
|---|---|
| திகதி | 19 - 24 |
| சஹர் | 04 - 29 |
| சுபஹ் | 04 - 44 |
| சூ. உதயம் | 06 - 01 |
| லுஹர் | 12 - 11 |
| அஸர் | 03 - 21 |
| ம:ரிப் | 06 - 19 |
| இஷா | 07 - 30 |

DETERGENT POWDER
Hotline: 077 4648855


## அச்சுறுத்தல் நிறைந்த சவாலை எதிர்கொள்ள

### பொது மக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த சவாலை எதிர்கொள்வதற்கு பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியமென ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். கொரோனா வைரஸ் தொடர்பில் உலக நாடுகளின் நிலைமையை கருத்திற்கொண்டு அரசாங்கத்தின்

06



தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்து

### வடக்கில் பொலிஸ் சேவைகள் முழுமையாக தமிழ் மொழியில்!

ஆளணியை அதிகரித்து விரைவில் ஏற்பாடு

03



விமானப் பயணிகளின் மூலமாக

### நாட்டுக்கு வைரஸ் பரவுவதை தவிர்க்க பூரண நடவடிக்கை

விமான சேவைகள் நிறுவன தலைவர் சந்திரசிறி

03

## வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஹரீன் MP;

### ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து வாக்குமூலம் பெற CID அழைப்பு

நேரில் சென்று சஜித் உடல் நலம் விசாரிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திடீர் சுகவீனம் காரணமாக அவர் இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக அறிய முடிகின்றது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவை நேற்று (23) காலை 10 மணிக்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் நடத்தப்படும் விசாரணைகளுக்காக வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியுள்ளதால் திணைக்களத்துக்கு வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

சுகவீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவை

06

### சிறைக்கைதிகளை சந்திக்க இருவாரம் தடை விதிப்பு



கொரோனா தொற்றில் மூன்றாவது அலை நாட்டுக்குள் ஏற்படுமென்ற அச்சம் நிலவும் இந்நிலையில் சிறைக் கைதிகளை பார்வையிடுவதை இன்று 24 ஆம் திகதி முதல் 02 வாரங்களுக்கு தடை செய்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறைச்சாலை வளவுக்கு வெளியிலிருந்து வருபவர்களால் மீண்டும் கொரோனா தொற்று

06

### சுகாதார வழிமுறைகளை பின்பற்ற தவறும் பள்ளிவாசல்கள் மூடப்படும்

நோன்பு காலத்தில் கடும் கட்டுப்பாடு; வக்பு சபை எச்சரிக்கை



கொவிட் 19 செயலணி மற்றும் சுகாதார அமைச்சு வழங்கியுள்ள சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறும் பள்ளிவாசல்களை நோன்பு முடியும்வரை மூடிவிடுவதற்கு வக்பு சபை தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் அநேகமான பள்ளிவாசல்களில் கொவிட் 19 தொடர்பான சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுவதாகவும் பெரும் எண்ணிக்கையானோர் பள்ளிவாசல்களுக்குள் சுகாதார வழிகாட்டல்களை அசட்டை செய்வதாகவும் வக்பு சபைக்கு ஆதாரங்களுடன் முறைபாடுகளை முன்வைத்திருப்பதனாலேயே இவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்ள

06

### காஸ் விலை குறித்த எந்த தீர்மானமும் இதுவரை இல்லை

அமைச்சர் பந்துல பாராளுமன்றில் தெரிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



காஸ் விலை குறைப்பு அல்லது மாற்றம் குறித்து எவ்வித தீர்மானங்களும் இதுவரை எடுக்கப்படவில்லையென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து

06

### ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு கீதா கோரிக்கை

ஜனாதிபதியிடம் முன்வைத்து பாராளுமன்றில் உரை

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை

06

#### விக்கல் வீராச்சாமி



என்ன தலைவர் கப்பல் கவுண்ட மாதிரி சோகமாக இருக்கிறார்....?

இல்ல, பாராளுமன்றத்தில நடந்த அமளி துமளிய ஃபேஸ்புக்ல போட வீடியோ எடுத்தாராம், அது டெலிட் ஆயிட்டுதாம், அது தான் கவலையில் இருக்கிறார்...!!!

# சர்வதேச செய்திகள்

## 15 ஆண்டுகளாக வேலைக்கு செல்லாத ஊழியர் சிக்கினார்




இத்தாலியில் 15 ஆண்டுகளாக வேலைக்குச் செல்லாமல் ஏமாற்றிய மருத்துவமனை ஊழியர் ஒருவர் மீது நீண்ட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு இதுவரை அத்தனை ஆண்டுகள் வேலைக்குச் செல்லாமல் யாரும் ஏமாற்றியது இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால், 15 ஆண்டுகளாக அவர் வேலைக்கான சம்பளத்தைத் தொடர்ந்து பெற்றுள்ளார்.

அவ்வாறு, அவர் பெற்ற மொத்தத் தொகை 530,000 யுரோக்களாகும். அரசாங்க ஊழியரான அவர், கலாபிரியா வட்டாரத்தில் உள்ள மருத்துவமனையில் 2005ஆம் ஆண்டில் பணியமர்த்தப்பட்டார்.

ஆனால், அப்போதிலிருந்தே அவர் வேலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டதாக பொலிஸார் கூறினர். அவருக்கு எதிராகப் புகார் செய்யக்கூடாது என்று தமது முகாமையாளரை அந்த ஆடவர் மிரட்டியுள்ளார்.

அந்த முகாமையாளர் ஓய்வுபெற்றுச் சென்ற பின் அவருக்கு அடுத்து வந்த முகாமையாளர் ஓர் ஊழியர் வராததைக் கவனிக்கவே இல்லை. தற்போது, அந்த ஆடவர் மோசடி, அலுவலகத்துக்கு வராதது ஆகியவற்றுக்காக விசாரிக்கப்பட்டு வருகிறார்.

அவர் வராததைக் கவனிக்கத் தவறியதற்காக மருத்துவமனையில் வேலை செய்யும் 6 முகாமையாளர்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

### 2030 ஆம் ஆண்டுக்குள்:

## வெப்பவாயுவின் வெளியேற்றத்தை பாதியாகக் குறைக்க அமெ. திட்டம்



அமெரிக்கா 2030க்குள் வெப்ப வாயு வெளியேற்றத்தைப் பாதியாகக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது. பாரிஸ் பருவநிலை உடன்பாட்டின் ஓர் அங்கமாக அமெரிக்கா அந்தப் புதிய கடப்பாட்டை நிர்ணயித்துள்ளது.

பருவநிலை மாற்றம் தொடர்பாக இணையத்தில் நடத்தப்படும் இரண்டு நாள் கூட்டத்தில் உரையாற்றியபோது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அது பற்றி உறுதியளித்தார். உலகத் தலைவர்கள் பலரும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

பருவநிலை மாற்ற நெருக்கடிக்குத் தீர்க்கமான முடிவு காண்பதில் நடப்புப் பத்தாண்டு முக்கியமானது என்று பைடன் கூறினார்.

ஆனால், அவர் வழங்கியிருக்கும் உறுதிமொழி, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலக்கை விடக் குறைவானது. 1990 இல் இருந்ததை விட 2035க்குள் நிலக்கரிப் பயன்பாட்டை 78 வீதம் குறைக்க பிரிட்டன் திட்டமிட்டுள்ளது. அதை விடவும் அமெரிக்காவின் இலக்கு குறைவானது.

வெப்ப வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சீனா புதிதாக எந்த உறுதிமொழியும் வழங்கவில்லை. ஆனால், 2025இலிருந்து நிலக்கரி பயன்படுத்துவதைக் குறைக்க அது உறுதியளித்துள்ளது.

ஜப்பான் 2030க்குள் தனது இலக்கை ஒரு மடங்கு கூட்டியுள்ளது.

2050க்குள் வெப்ப வாயு வெளியேற்றத்தைக் கணிசமாகக் குறைக்கப் போவதாக ரஷ்யாவும் தெரிவித்துள்ளது.

## ஆப்கானிஸ்தான் அமைதி பேச்சில் தாமதம்: தலிபான் மீது குற்றச்சாட்டு

அமைதிச் செயற்பாட்டில் தலிபான்கள் தயக்கம் காட்டியதன் காரணமாக துருக்கியின் ஸ்தான்பூல் நகரில் நடைபெறவிருந்த ஆப்கான் அமைதி மாநாடு ஒத்திவைக்கப்பட்டதாக அமைதிக்கான ஆப்கான் இராஜாங்க அமைச்சர் செய்யிது சதாத் மன்சூர் நதரி பாராளுமன்ற கீழவையில் தெரிவித்துள்ளார்.



துருக்கி மாநாடு தள்ளிப்போவதற்கு பிரதான காரணமே தலிபான்கள் என்று அவர் குற்றம்சாட்டினார்.

'அமைதிக்காக ஆப்கான் தரப்பு தயாராகவும் எதிர்பார்ப்புடனும் இருந்தபோதும் தலிபான்கள் தரப்பில் இருந்து அதற்கு எந்த விருப்பும் இல்லை' என்று பாராளுமன்றக் கூட்டத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 24 ஆம் திகதி ஆரம்பிக்கவிருந்த 10 நாள் ஸ்தான்பூல் அமைதி மாநாடு ஒரு மாதத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக துருக்கி அண்மையில் அறிவித்ததை அடுத்தே ஆப்கான் இராஜாங்க அமைச்சு இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

ஆப்கானில் இருந்து அமெரிக்க துருப்புகள் வாபஸ் பெறும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் தலிபான்கள் அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்காது வெளிநாட்டு துருப்புகள் வெளியேறிய பின் நாட்டில் மேலும் வன்முறைகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிடுவதாக குற்றம்சாட்டப்படுகிறது.

தலிபான்களுக்கு எதிராக உறுதியாக இருப்பதாகவும் தலிபான்கள் போரில் வெற்றிபெற மாட்டார்கள் என்று ஜனாதிபதி அஷ்ரப் கனி மற்றும் அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஹம்துல்லா முஹித் உட்பட ஆப்கான் தலைவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

## கிழக்கு ஜெரூசலத்தில் மோதல்: பலரும் காயம்



தீவிர வலதுசாரி யூதச் செயற்பாட்டாளர்கள், பலஸ்தீனர்கள் மற்றும் இஸ்ரேலிய பொலிஸாருக்கு இடையே கிழக்கு ஜெரூசலத்தில் இடம்பெறும் கடும் மோதல்களில் பலர் காயமடைந்துள்ளனர்.

அந்த நகரின் டமஸ்கஸ் வாயில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை 'அரபிகள் ஒழிக' என்று கோசமெழுப்பியடி வந்த நூற்றுக்கணக்காக தேசியவாத யூதர்கள் அங்கிருந்த பலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்களுடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

அதிர்ச்சி அளிக்கக்கூடிய கையெறி குண்டுகள், கண்ணீர் புகைப்பிரயோகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பயன்படுத்திய இஸ்ரேலிய பொலிஸார் இந்த இரு தரப்பினரையும் விலக்கி வைக்க முயன்றனர். இதன்போது பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வன்முறைகளில் குறைந்தது 100 பலஸ்தீனர்கள் காயமடைந்ததாகவும் 21 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டதாகவும் பலஸ்தீன செம்பிறை சங்கம் தெரிவித்துள்ளது.

டமஸ்கஸ் வாயிலுக்கு வெளியே வழக்கமாக இடம்பெறும் தமது ரமழான் மாத ஒன்றுகூடலை பொலிஸார் தடுக்க முயன்றதாக பலஸ்தீனர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

'அனைத்து வகையான வன்முறை மற்றும் கலகங்களுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று இஸ்ரேலிய பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரச்சினையின் மையப்புள்ளிகளில் ஒன்றாக ஜெரூசலத்தின் உரிமை பற்றிய விவகாரம் நீடித்து வருகிறது. இந்த நகரில் குறிப்பாக கிழக்கு ஜெரூசத்தில் யூத, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய புனிதத் தலங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் எல்லையில் உள்ள ரஷ்ய துருப்புகளை வாபஸ் பெற உத்தரவு

### பல வாரங்கள் நீடித்த பதற்றம் தணிவு



உக்ரைன் எல்லையில் ரஷ்ய துருப்புகள் குவிக்கப்பட்டு கடந்த சில வாரங்களாக அங்கு பதற்றம் நீடித்து வந்த நிலையில் அங்கிருக்கும் துருப்புகளின் சில பிரிவுகளை தமது முகாம்களுக்கு திரும்பும்படி ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றிய கிரிமியா மற்றும் உக்ரைன் எல்லையில் 100,000க்கும் அதிகமான ரஷ்ய படையினர் திரட்டப்பட்டிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கணித்துள்ளது.

இந்நிலையில் கிரிமியாவில் உரையாற்றி ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் சொய்கு, பயிற்சியில் உள்ள இராணுவப் பிரிவுகள் தமது முகாமுக்கு திரும்ப வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக போர் வலயத்தில் தம்மை சந்திக்கும்படி உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டிருக்கு அழைப்பு விடுத்திருந்தார். இந்நிலையில் எல்லையில் பதற்றத்தை தணிக்கும் இந்த நடவடிக்கையை அவர் வரவேற்றுள்ளார்.

'நாட்டுக்காக நம்பகமான பாதுகாப்பை வழங்கும் திறனை துருப்புகள் காட்டியுள்ளன' என்று குறிப்பிட்ட ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர், 58 மற்றும் 41 ஆம் இராணுவப் பிரிவுகள் அதேபோன்று பல வான்வழிப் பிரிவுகளும் வெள்ளிக்கிழமை தொடக்கம் தமது நிரந்தர முகாம்களுக்கு திரும்பும்படியும் அந்த நடவடிக்கையை மே 1 ஆம் திகதிக்கு பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தமது நாட்டு எல்லையில் ரஷ்யா துருப்புகளை அதிகரிப்பது பற்றி உக்ரைன் ஜனாதிபதி கடந்த வாரம் ஐரோப்பிய தலைவர்களை அறிவுறுத்தி இருந்தார். ரஷ்ய படைகள் ரொஸ்டோவ், பிரின்ஸ் மற்றும் வொரோனஸ் அதேபோன்று கிரிமியா பிராந்தியங்களை நோக்கி நகர்ந்திருப்பதாகவும் போர் தொழில்நுட்பக் குழுக்கள் எல்லையில் நிலைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் சொய்குவின் உத்தரவைத் தொடர்ந்து நேட்டோ அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில், 'மோதல் நிலையை தவிர்க்கும் எந்த ஒரு நகர்வும் முக்கியமானது' என்று தெரிவித்தது. எனினும் மேற்கத்தேய இராணுவ கூட்டணி இது பற்றி தொடர்ந்து அவதானத்துடன் இருப்பதாகவும் அது தெரிவித்தது.

வரும் ஜூன் மாதத்தில் நடைபெறும் நேட்டோ மாநாட்டில் ரஷ்யா தொடர்பில் முக்கியமாக பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு கிழக்கு உக்ரைனில் மோதல் வெடித்ததை அடுத்து அந்த நாட்டுக்கு சொந்தமான கிரிமியா பிராந்தியத்தை ரஷ்யா தனது ஆட்புலத்திற்குள் இணைத்தது. ரஷ்ய ஆதரவு படையினர் உக்ரைனின் லுஹன்ஸ்க் மற்றும் டொனட்ஸ் பிராந்தியத்தின் பெரும் பகுதியை கைப்பற்றினர்.

கிழக்கு உக்ரைனில் அமுலில் இருக்கும் போர் நிறுத்தம் அண்மைய வாரங்களில் பல முறை மீறப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செல் வீச்சில் உக்ரைன் வீரர் ஒருவர் காயமடைந்தார். இங்கு மோதல் வெடித்தது தொடக்கம் சுமார் 14,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

### அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்து:

## இரத்தம் உறைவு சம்பவங்கள் குறித்து கூடுதல் விசாரணை




அஸ்ட்ராசெனெக்கா நிறுவனத் தடுப்பூசியைப் போட்டுக்கொண்ட சிலரிடம் இரத்தக் கட்டிகள் உருவாவது குறித்து, ஐரோப்பாவுக்கு வெளியிலுள்ள மக்களிடம் இருந்து கூடுதல் விபரங்கள் தேவை என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

தடுப்பூசித் திட்டம் குறித்த, நிறுவனத்தின் உத்தியோபூர்வ ஆலோசனைக் குழு நிபுணர்கள் அதனைத் தெரிவித்தனர்.

அஸ்ட்ராசெனக்கா நிறுவனத் தடுப்பு மருந்தைப் போட்டுக்கொள்வதால் கிடைக்கும் நன்மைகள், அதனால் ஏற்படக்கூடிய அபாயங்களை விட அதிகம் என்று அவர்கள் மீண்டும் வலியுறுத்தினர்.

அந்தத் தடுப்பு மருந்தால், இரத்தக் கட்டி ஏற்படுவது ஓரளவு சாத்தியமே என்றபோதும் அது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை என்றனர் நிபுணர்கள்.

அத்தகைய பெரும்பாலான சம்பவங்கள், பிரிட்டனிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் மட்டுமே பதிவாகியுள்ளதை நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். ஏனைய நாடுகளில் அப்படிப்பட்ட சம்பவங்கள் மிகக் குறைவு.

150 க்கும் மேற்பட்ட நாடுகளிலும் பிரதேசங்களிலும் அந்தத் தடுப்புமருந்து பயன்படுத்தப்படுகிறது.

எனவே, ஐரோப்பிய நாடுகளுக்கு அப்பாற்பட்ட நாடுகளில் இருந்து கூடுதலான தகவல்கள் திரட்டப்பட்டு, அவை தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென நிபுணர்கள் வலியுறுத்தினர்.

## ஸ்பெயினில் தாயைக் கொன்று அவரின் உடலை சாப்பிட்ட மகன்

தமது தாயை கொலை செய்து அவரது உடல் எச்சங்களை வெட்டி சாப்பிட்டதாக ஸ்பெயினில் ஆடவர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

ஆல்பர்டோ சஞ்சேஸ் கோமெஸ் எனும் அந்த நபர் 2019ஆம் ஆண்டு பெப்ரவரியில் கைது செய்யப்பட்டார்.

66 வயதாகும் அவரது தாய் மரியா சோலேடாட் கோமெஸ் நலன் குறித்து அவரது நண்பர் ஒருவர் கவலை எழுப்பி இருந்ததால் அந்த பெண்ணின் வீட்டுக்கு பொலிஸார் சென்று சோதனையிட்டனர்.

அவர் கொல்லப்பட்டது தெரிந்த பின் ஆல்பர்டோ கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட போது ஆல்பர்டோவுக்கு வயது 26.

கைது செய்யப்பட்ட நேரத்தில் அவர் தமது தாயை கழுத்தை நெரித்து கொலை செய்ததாகவும் அவரது உடல் பாகங்களை உண்டதாகவும் பொலிஸாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்று செய்திகள் வெளியாகின.

அவரது தாயின் உடல் பாகங்கள் சிலவற்றை நாய்க்கு உணவாக வீசியதாகவும் அவர் அப்போது தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுக்குமாடி குடியிருப்பு வீடு முழுவதும் அந்த பெண்ணின் உடல் பாகங்கள் சிதறிக் கிடந்ததாகவும் சில உடல் பாகங்கள் சிறு பிளாஸ்டிக் பெட்டகங்களில் அடைத்து வைக்கப்பட்டு இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது கைதுக்கு முன் அவருக்கு மனநல பாதிப்பு மற்றும் போதைப் பொருள் பயன்படுத்தும் பழக்கம் இருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN
2021 ஏப்ரல் 24 சனிக்கிழமை



**தொழுகை நேரம்**

19முதல் 24 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.21 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் சித்திரை 11

ராகுகாலம் : காலை : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 9.00வரை

யோகம்: மரண யோகம்

திதி: துவாதசி

# இரசாயன உர வகைகளின் இறக்குமதி மிக விரைவில் முற்றாக நிறுத்தப்படும்

## அதிக விளைச்சலை விட உயிர்கள் பெறுமதியானவை ஜனாதிபதி



இரசாயன உர வகைகளை இறக்குமதி செய்வது மிக விரைவில் முற்றாக நிறுத்தப்படுமென்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இரசாயன உரவகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சலை பெற முடிந்தாலும் குளங்கள், கால்வாய்கள் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதால் உயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை அந்த இலாபத்தால் ஈடுசெய்ய முடியாது என தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (22) கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க சபைகளின் தலைவர்களுடனான சந்திப்பின் கருத்து கூறிய ஜனாதிபதி தொடர்ந்து தெரிவிக்கையில்,

இரசாயன உர வகைகளின் தாக்கம் சிறுநீரக நோய் உட்பட பல தொற்றா நோய்களுக்கு வழிவகுத்துள்ளது என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். சிகிச்சைக்காக செலவாகும் தொகை மற்றும் உயிர்களுக்கு ஏற்படும் தாக்கம் அதிகம். ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த பிரஜையை உருவாக்குவதற்கு, நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக நாட்டின் விவசாயத்துறையில் சேதன உரவகைகளைப் பயன்படுத்துவதற்கு பழக்கப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாட்டில் சேதன உர உற்பத்தியை அதிகரிக்க அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும். உர மானியத்திற்கு பதிலாக சேதன உரத்தை பெற்றுக்கொடுக்க திட்டமிடுவதாக ஜனாதிபதி தெரிவித்தார். உர இறக்குமதிக்காக ஆண்டுதோறும் செலவிடப்படும் 400 மில்லியன் டொலர்கள் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட முடியுமென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தன்னை அதிகாரத்திற்கு தெரிவு செய்ததன் மூலம் மக்கள் கொள்கை சார்ந்த மாற்றத்தை எதிர்பார்த்தனர். நாட்டிற்காக அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அனைவரின் ஆதரவும் தேவை என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதன்போது, ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித் திட்டத்தால் நட்டத்தில் இயங்கிய பல நிறுவனங்களை இலாபகரமான நிறுவனங்களாக மாற்ற முடிந்தது என்று அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க சபைகளின் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

எத்தனோல் இறக்குமதி முழுமையாக நிறுத்தப்பட்டதன் மூலம் இலங்கை சீனி நிறுவனம் ரூ. 1,100 மில்லியனை இலாபமாக பெற்றுள்ளது. சுமார் 20 ஆண்டுகளாக சாதாரண மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் சுமார் 2,500 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கவும்

06




## பொய் பேசுதலைத் தவிர்ப்போம்

இஸ்லாம் மார்க்கமானது ஈருலக வாழ்வுக்கும் பொறுத்தமான நற்பண்புகள் நிறைந்த தனிமனிதர்களையும் சமூகத்தையும் உருவாக்குவதை இலக்காகவும் நோக்காகவும் கொண்டுள்ளது. இம்மார்க்கத்தின் போதனைகள், வழிகாட்டல்களின் அடிப்படையில் அதன் கடமைகளை நிறைவேற்றும் போது இறையச்சம், இறை நினைவு மேலோங்கும். அது தனிப்பட்ட வாழ்விலும் குடும்ப மற்றும் சமூக வாழ்விலும் ஆக்கபூர்வமான மனிதனாக மிளிர வழிவகுக்கும்.

அந்த வகையில் ரமழான் மாத நோன்பை எடுத்து நோக்கினாலும் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். ஈருலக வாழ்விலும் சுபீட்சம் பெறக்கூடிய வகையில் உடல், உள மற்றும் சமூக வாழ்வில் மாற்றங்களை கொண்டு வரவே நோன்பு எதிர்பார்க்கின்றது. அதனால் நோன்பு நோற்று இறை வணக்கங்களில் ஈடுபடுவதோடு பொய் பேசுதல், பொய்யை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள், 'யார் பொய் பேசுதலையும் அதற்கு ஏற்ப செயற்படுதலையும் விட்டுவிடவில்லையோ அவர் உண்பதையும் பருகுவதையும் விட்டு விட வேண்டுமென்ற தேவை அல்லாஹ்வுக்கு இல்லை' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி)

அதனால் நோன்பு நோற்ற நிலையில் பொய் பேசுதல் நோன்பை முறிக்கும் காரியங்களில் ஒன்றென இஸ்லாமிய அறிஞர்கள் கருதியுள்ளார்கள்.

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அல் அன்ஸாரி (ரலி) அவர்கள், ஒருவர் நோன்பு நோற்றால் அவரது கண், காது, நாவு என்பனவும் நோன்பு நோற்கட்டும். அவற்றுக்கான நோன்பு பொய் பேசுதலையும் அதன்படி செயற்படுதலையும் பாவச்செயல்களையும் தவிர்ந்து கொள்ளுதலாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே நோன்பின் எதிர்பார்ப்புக்கு அமைய பொய் பேசுதலில் இருந்து தவிர்ந்து கொள்வதோடு தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்விலும் ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கு பங்களித்து ஈருலகிலும் விமோசனம் அடைந்திடவும் முயற்சி செய்வோம்.

மர்லின் மரிக்கார் ...

**இராசி பலன்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | பொறுமை |
| ரிஷபம் | - | பாராட்டு |
| மிதுனம் | - | தனம் |
| கடகம் | - | போட்டி |
| சிம்மம் | - | கோபம் |
| கன்னி | - | செலவு |
| துலாம் | - | முயற்சி |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | வெற்றி |
| மகரம் | - | சுகம் |
| கும்பம் | - | மறதி |
| மீனம் | - | நன்மை |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# கடற்றொழிலாளர்களை பாதிக்கும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படாது

- அமைச்சர் டக்ளஸ்



கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு தீரமானங்களையும் நான் மேற்கொள்ளமாட்டேன். என்னுடைய தவறுகளை சுட்டிக் காட்டினால், அதில் உண்மை இருந்தால் நான் மன்னிப்பு கேட்கவும் தயங்க மாட்டேன். ஆனால் பொய்க் குற்றச்சாட்டுக்களை ஒரு போதும் பொருட்படுத்தப் போவதில்லை. அவற்றை உதாசீனம் செய்து விடுவேன்" என்று தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீதிக்கு தான் எப்போதும் தலை வணங்க தயாரெனவும் ஆனால் அநீதிக்கு ஒரு போதும் தலை சாய்க்கப் போவதில்லையென வும் தெரிவித்தார்.

தேசிய மீனவர் மஹா சம்மேளனத்தின் பணிப்பளார் சபைக் கூட்டம் நேற்று (23) கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் சம்மேளனத்தின்

06

# அரச வங்கி முறைமை வலுவாக பராமரிக்கப்பட வேண்டும்

- பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



அரச வங்கி முறைமை வலுவாக பராமரிக்கப்பட வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (23) பாராளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமர் அலுவலத்தில் வைத்து குறிப்பிட்டார்.

பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் அதிகாரிகளுடன் நடைபெற்ற விரிவான கலந்துரையாடலொன்றின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நிலவும் சவால் மிகுந்த சூழ்நிலைக்கு மத்தியில் அரச வங்கி முறையை வலுவாக பராமரித்தல் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இச் சந்திப்பு நடைபெற்றது.

1996ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்ட மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு, 2014ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் மீண்டும் பெற்றுக் கொடுத்தமை

06

# தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்து வடக்கில் பொலிஸ் சேவைகள் முழுமையாக தமிழ் மொழியில்!

## ஆளணியை அதிகரிக்க விரைவில் ஏற்பாடு



வடமாகாண தமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரித்துள்ளார்.

பொலிஸ் சேவைக்கான ஆளணியை அதிகரிப்பது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செயலமர்வின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதனூடாக வடக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகளை தமிழில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டுக்குள் மேலும் 24,000 பேர் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர். தமிழ் மொழி பேசுபவர்களை அவர்களது சொந்த மாவட்டங்களில் கடமையாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென வும் அவர் தெரிவித்தார்.

விமானப் பயணிகளின் மூலமாக

# நாட்டுக்கு வைரஸ் பரவுவதை தவிர்க்க பூரண நடவடிக்கை

## விமான சேவைகள் நிறுவன தலைவர் சந்திரசிறி



விமானப் பயணிகளின் மூலம் கொரோனா வைரஸ் நாட்டுக்குள் நுழைவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமானப் பயணிகள் ஒன்றிணைவதை தடுப்பதற்கான விசேட வேலைத்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சகல விமானப் பயணிகளும் சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவது அவசியமாகும். அத்தியாவசிய விமானப் பணியாளர்களை மாத்திரம் இன்று தொடக்கம் சேவைக்கு அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் விமான

06

கொரோனா தொற்று அச்சுறுத்தல்;

## கொஸ்வத்தை பொலிஸ் நிலையம் தற்காலிகமாக மூடல்

**புத்தளம் மாவட்ட குறூப் நிருபர்**



சிலாபம், கொஸ்வத்தை பொலிஸ் நிலையம் நேற்று தற்காலிகமாக மூடப்பட்டது. இங்குள்ள பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதியானதையடுத்தே கொஸ்வத்தை பொலிஸ் நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை தற்காலிகமாக மூடப்பட்டது.

இப்பொலிஸ் நிலையத்தின் செயற்பாடுகள் கொஸ்வத்தை ஸ்ரீ விஜேவர்தனாராம விகாரைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

06

வேகமாக பரவும் கொரோனா

## ஜம் இய்யத்துல் உலமா விசேட வேண்டுகோள்

நாட்டில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது விடயமாக சுகாதார அமைச்சு வழங்கும் வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்றி, இந்த நோயிலிருந்து தத்தமது குடும்பங்களையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சகலரையும் கேட்டுக் கொள்வதாக அறிவித்துள்ளது.

அதன் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,


முஸ்லிம்கள் ரமழான் காலத்திலும் ஏனைய காலங்களிலும் சுகாதார துறையினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் முழுமையாக பின்பற்றி நடத்தல் வேண்டும். குறிப்பாக முகக் கவசம் அணிதல், கைகளை

06

# அதிகரித்துவரும் கொரோனா பரவலே மே தினத்தை நிறுத்த காரணம்

## அமைச்சர் காமினி லொக்குகே விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா தொற்று வேகமாக பரவி தற்போது கட்டுப்பாட்டை இழந்துள்ள நிலையில், இலங்கையில் இன்று 300 பேர்வரை சராசரியாக கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டதால், மே தினத்தை நிறுத்துவதற்கான தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதென போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நேற்று (23) பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏட்ஜ் விடுதி வளாகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் பேசும் போதே அமைச்சர் லொக்குகே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மே தினம் பற்றிய கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கான அனுமதி

06

# மள்வானை நகரில் திடீர் தீ; 04 கடைகள் எரிந்து நாசம்

**மள்வானை விசேட நிருபர்**



மள்வானை நகர மத்தியில் நேற்று(23) பிற்பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் நான்கு கடைகளும் மூன்று வீடுகளும் முற்றாக சேதமடைந்துள்ளன.

தீ விபத்தின்போது கடைகளிலும் வீடுகளிலும் எவரும் இருக்கவில்லை என்பதால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இத்தீயில் பியகம பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.எஸ் ஹஸனுடைய (ஸ்ரீலங்கா.மு.கா.) வீடு உட்பட மூன்று வீடுகளும் மூன்று புடைவை கடைகளும் ஒரு ப்லாஸ்டிக் கடையும் முற்றாக எரிந்து சாம்பலானதோடு தீயினால் ஏற்பட்ட சேதம் ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய்க்கும் மேல் என கூறப்படுகிறது.

06

# மே மாதம் வரையான புதிய சுகாதார வழிகாட்டல்கள்

## அரசாங்கத்தினால் நேற்று வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் கொரோனா அச்சுறுத்தல் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மக்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் புதிய சுகாதார வழிகாட்டலை சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது.

நேற்றைய தினம் முதல் மே மாதம் 31 ஆம்திகதி வரையிலான காலப்பகுதியில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அதில் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த செயற்பாடுகளுக்காக வீட்டிலிருந்து இரண்டு பேருக்கு மேற்பட்டோர் வெளியில் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ரயில்கள் மற்றும் பஸ்கள் உள்ளிட்ட பொது போக்குவரத்துக்களில் ஆசனங்களுக்கு அமைய மட்டுமே பயணிகள் பயணிக்க முடியும் என்றும் முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் அதிகபட்சம் இரண்டு பேர் மட்டுமே பயணிக்க முடியும் என்றும் அதன் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் அவசியமான ஊழியர்களை மட்டும் சேவையில்

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 149.12 | 155.36 |
| கனடியன் டொலர் | 153.51 | 161.00 |
| யூரோ | 230.25 | 239.49 |
| ஜப்பான் யென் | 1.7949 | 1.8610 |
| சிங்கப்பூர் டொலர் | 144.80 | 151.04 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 267.25 | 277.38 |
| சுவிஸ் பிராங்க் | 209.13 | 218.94 |
| அமெரிக்க டொலர் | 192.51 | 198.48 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 509.11 | கட்டார் ரியால் | 52.70 |
| குவைத் டினார் | 637.02 | சவூதி ரியால் | 51.16 |
| ஓமான் ரியால் | 498.55 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 52.25 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 11ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை

தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை.

## கொவிட்19 தொற்று மேலும் தீவிரமடைய இடமளிக்கலாகாது!

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கொவிட்19 தொற்று பரவுகின்ற வேகம் கடந்த சில தினங்களாக சற்று அதிகரித்திருக்கின்றது. கொவிட்19 தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் திடீரென்று சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளின் வார்ட்டுகளில் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காண முடிகின்றது.

கொரோனா தொற்று பரவலில் எமது நாடு ஏற்கனவே இரண்டு அலைகளைச் சந்தித்திருக்கின்றது. முதலாம், இரண்டாம் அலைகளை நாடு வெற்றிகரமாக முறியடித்துள்ளதென்றே கூற வேண்டும். ஆனால் கொரோனா தொற்று இப்போது மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது.

இன்று உருவாகியிருப்பது மூன்றாவது அலையென்று இன்னுமே தெரியவரவில்லை. அது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பும் இன்னும் வெளியிடப்படவில்லை. மூன்றாவது அலையென இதனை இப்போதைக்குக் கூறவும் முடியாது. நாட்டில் ஆங்காங்கே தோற்றம் பெற்றுள்ள கொவிட் தொற்று தணிந்து போவதற்கும் வாய்ப்பு உள்ளது.

ஆனாலும் மக்கள் அலட்சியமாக இருந்து விட முடியாது. கொவிட் தொற்று தீவிரமடைவதும், அது தணிவதும் மக்களின் கைகளில்தான் உள்ளன. மக்கள் தொடர்ந்தும் அலட்சியத்தைக் கடைப்பிடிப்பார்களானால் கொரோனா மீண்டும் நாட்டில் வேகமெடுக்கக் கூடும். முழுமையான விழிப்புணர்வைப் பேணுவார்களானால் கொவிட் தொற்று பரவும் வேகம் விரைவில் தணிவு நிலைமைக்குச் சென்று விடும். மக்களின் கட்டுப்பாட்டு நடைமுறைகளிலேயே அனைத்தும் தங்கியுள்ளன.

மக்கள் மீண்டும் கடந்த வருடத்தின் ஆரம்ப நிலைமைக்குச் செல்ல வேண்டியது இப்போது அவசியமாகின்றது. அதாவது நாட்டில் முதலாவது கொரோனா அலை உருவெடுத்த போது மக்கள் எவ்வாறு கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பேணி நடந்து கொண்டார்களோ, அவ்வாறே இப்போதும் நடந்து கொள்ள வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வில் நாம் எவருமே தவறிழைத்து விடக் கூடாது.

அதேசமயம், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் அரசாங்க மற்றும் சர்வதேச பாடசாலைகளும் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. கொவிட் தொற்று மீண்டும் அதிகரித்திருக்கும் இந்நிலையில், பாடசாலைகளில் தீவிரமான கட்டுப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும். மாணவர்கள் நீண்ட காலமாக பாடசாலைச் சூழலில் இருந்து அந்நியப்பட்டுப் போயிருந்தனர். சமீப காலமாகவே மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளித்து வழமையான கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் பாடசாலைகள் இயங்காதிருக்கின்ற நிலைமை மீண்டும் உருவாகுவது நல்லதல்ல. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இடையூறின்றித் தொடர வேண்டுமென்பதே அனைவரதும் விருப்பமாகும். ஆகவே மாணவர்கள் கொவிட் பாதுகாப்பு கட்டுப்பாடுகளை உரியபடி பின்பற்றி நடந்து கொள்வதை முதலில் பெற்றோரே உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அதேசமயம் பாடசாலை வளாகத்தினுள் கொரோனா தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். இல்லையேல் பாடசாலைச் சூழல் பாதுகாப்பற்றதாக மாறி விடக் கூடும். அதிபர்கள் இவ்விடயத்தில் மிகுந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளது.

கொவிட் தொற்று அலைகள் மீண்டும் மீண்டும் உருவெடுப்பது இலங்கையில் மாத்திரமன்றி அநேக நாடுகளிலும் காணக் கூடியதொன்றாகும். மேற்கு நாடுகள் பலவற்றில் இவ்வாறு பல தடவைகளில் அலைகள் உருவாகியுள்ளன. அதன் பின்னர் அந்த அலைகள் கட்டுப்படுத்தப்பட்டும் உள்ளன. இரண்டாவது அலைத் தாக்கமானது சற்று வேகமாக உருவெடுப்பதையே காண முடிகின்றது.

இந்தியாவிலும் இப்போது இதே நிலைமைதான் உருவாகியுள்ளது. இந்தியாவில் இப்போது கொரோனாவின் புதிய அலையைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் போராட வேண்டியுள்ளது. ஆனால் சில வாரங்களில் நிலைமை சற்றுத் தணிவதற்கு இடமுண்டு என்பதுதான் மருத்துவ அதிகாரிகளின் நம்பிக்கையாக உள்ளது.

கொவிட் தொற்று உலகில் இருந்து முழுமையாக ஒழிக்கப்படும் வரை அவ்வப்போது இது போன்ற அலைகளை எதிர்கொள்வதை தவிர்க்க முடியாதென்றே மருத்துவ அறிவியலாளர்களும் கூறுகின்றனர். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மூன்றாவது அலைத் தாக்கங்களும் கடந்து போயுள்ளன.


மக்களை நீண்ட காலத்துக்கு வீடுகளில் முடக்கி வைத்திருப்பதென்பது இயலாத காரியமாகும். அவர்கள் தங்களது குடும்ப பொருளாதாரத்துக்கான தொழில்களையும் கவனிக்க வேண்டியுள்ளது. பண்டிகைக் காலத்தில் மக்களை தொடர்ந்தும் முடக்கி வைப்பதென்பதும் சங்கடமான விடயமாகும். மக்களுக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்துகின்ற வேளைகளில்தான் புதிய அலைகளும் உருவெடுக்கின்றன. நாடு மீண்டும் நெருக்கடியில் சிக்க வேண்டியுள்ளது.

இருந்த போதிலும் கட்டுப்பாட்டு நடைமுறைகளை அலட்சியப்படுத்துவதில் ஆபத்துகள் உள்ளனவென்பதை மறந்து விட முடியாது. தொற்றாளர்களின் அதிகரிப்பு குறித்து வீணான அச்சம் கொள்வதில் பயனில்லை. கட்டுப்பாடுகளை உச்ச அளவில் பின்பற்றுவோமானால் எந்தவொரு அலையையும் கட்டுப்படுத்தி விடலாமென்பதே உண்மை.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவில் தற்போது பரவுவது கொவிட் வைரஸின் 3வது திரிபு

2019 டிசம்பரிலிருந்து கொவிட்19 தொற்று உலகில் சுமார் 30,58,500 மரணங்களை ஏற்படுத்தியுள்ளது, இது உலகளவில் 143,588,000 பேரை பாதித்துள்ளது. கொவிட் 19 யாரையும் பாதிக்கலாம், இதனால் இலேசானது முதல் மிகக் கடுமையானது வரை அறிகுறிகள் தோன்றும். சிலருக்கு மற்றவர்களை விட கடுமையான நோய் அறிகுறி ஏற்பட வாய்ப்புள்ளது.



சமீபத்திய அறிக்கைகளின்படி இந்தியாவில் சுமார் மூன்று இலட்சம் தொற்றுகள் மற்றும் 24 மணி நேரத்தில் 2,000 க்கும் மேற்பட்ட இறப்புகள் ஏற்பட்டுள்ளன. இது தொற்றுநோய் வெடித்ததிலிருந்து மிகப் பெரிய அளவாகும்.

இதற்கிடையில், பி 1.618 எனப்படும் SARSCoV2 வைரஸின் புதிய திரிபு இந்தியாவில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் மேற்கு வங்கத்தில் பரவுகிறது. இதனை மூன்றாம் திரிபு என்று மருத்துவர்கள் அழைக்கிறார்கள்.

மூன்றாம் பிறழ்வு(Triple Mutation) என்றால் என்ன? இரட்டை பிறழ்வுக்குப் பிறகு, இது இப்போது மூன்றாவது பிறழ்வு ஆகும். அதாவது, ஒரு புதிய மாறுபாட்டை உருவாக்கும் மூன்று வெவ்வேறு கொவிட் திரிபுகள் இந்தியாவின் சில பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன. மகாராஷ்டிரா, டெல்லி, சத்தீஸ்கர் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த பிறழ்வு இந்தியாவில் காணப்பட்டாலும் அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, பின்லாந்து மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உலகளவில் புதிய எழுச்சிகள் புதிய வகைகளால் இயக்கப்படுகின்றன என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். புதிய மாறுபாடு மிகவும் பரவக் கூடியது. இது நிறைய பேரை மிக விரைவாக நோய்வாய்ப்படுத்துகிறது என்று வைரஸை ஆராய்ச்சி செய்யும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

பிறழ்வுகள் உலகெங்கிலும் புதிய தொற்று அதிகரிப்புகளை அதிகரிப்பதாக வல்லுநர்கள் நம்புகின்றனர். இதை நன்கு புரிந்து கொள்ள, மேலும் ஆய்வுகள் தேவை. இப்போதைக்கு, இந்தியா முழுவதும் பத்து ஆய்வகங்கள் மட்டுமே வைரஸ் மரபணு ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளன.

மூன்றாம் பிறழ்வில் உள்ள மூன்று வகைகளில் இரண்டு நோயெதிர்ப்பு தப்பிக்கும் பதில்களைக் கொண்டுள்ளன. அதாவது, அவை நோயெதிர்ப்புகளை எதிர்க்கின்றன. புதிய மாறுபாடு உடலின் இயற்கையாகவே பெறப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி COVID இலிருந்து தப்பிக்க சில திறன்களைக் கொண்டுள்ளது என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளபடி, ஒரு வைரஸ் எவ்வளவு அதிகமாகப் பரவுகிறதோ, அவ்வளவு அதிகமாக அது நகலெடுக்கிறது, மேலும் அது பிறழ்வடைகிறது.

# ஐயாயிரம் மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாச புத்தகங்கள் வழங்கும் திட்டம்

## வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காக மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அர்சாத் நிஸாம்தீன் ஐந்தாவது வருடமாக முன்னெடுக்கும் பணி

மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்ட முன்னாள் உறுப்பினர் அர்சாத் நிஸாம்தீனின் மாவட்டத்துக்கான கல்வி மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சிந்தனையின் பிரகாரம் 'ஐயாயிரம் மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்கள்' வழங்கும் ஐந்தாவது வருட ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரின் ஐயாயிரம் அப்பியாச புத்தகப் பொட்டலங்களை அன்பளிப்பு செய்யும் வைபவங்கள் கொம்பனித் தெரு பிரதேசத்தில் அமைந்துள்ளஅவரின் பொதுமக்கள் தொடர்பு நிலையம்,மோதர மிஹிஜய செவன வீடமைப்புத் திட்டம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் உறுப்பினர் அர்சாத் நிஸாம்தீன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.அனஸ், அர்சாத் நிஸாம்தீனின் செயலாளர் ரியாஸ் கபூர் உள்ளிட்ட பிரமுகர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றன.





கொழும்பு மாவட்டத்தில் குறைந்த வருமானக் கோட்டின் கீழ் வாழும் வறிய மக்களின் பிள்ளைகளின் கல்விக்காக தன்னால் முடிந்த ஊக்குவிப்புகளை வழங்கி இந்த பிள்ளைகளின் நாளைய எதிர்காலத்தை ஒளிமயமாக்குதல் எனும் நோக்கில் முன்னாள் உறுப்பினரினால் மேற்படி கருப்பொருள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கடந்த வருடங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் (2019/20)இத்திட்டத்தை முன்னெடுப்பது தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அர்சாத் நிஸாம்தீனின் கல்வி ஊக்குவிப்பு வேலைத் திட்டத்துக்கு ஒத்துழைப்பாகவும், கொழும்பு மாநகராட்சி மன்ற பிரிவின் வறிய மாணவர்களுக்கு மேலும் கல்வி ஊக்குவிப்பு செயல்பாடாகவும் மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.அனஸினால் இலவச கற்றல் உபகரணங்களும் நிகழ்வில் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

கொழும்பு மாவட்ட மக்களின் கல்வி கலாசார மற்றும் தேவைகள் தொடர்பில் பொதுவாக குரல் எழுப்பி அர்த்தபூர்வமான கருத்துகளை மாகாண சபையில் முன்வைத்த சிறுபான்மை உறுப்பினர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக அர்ஷாத் நிஸாம்தீன் விளங்குகிறார். தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பௌதிக வளங்கள் குறைபாடுகள் தொடர்பிலும் ஆர்வத்துடன் காணப்பட்ட இவர், முஸ்லிம் பாடசாலைகள் விடயத்திலும் கரிசனையுடன் செயல்பட்டார்.

நாட்டின் போதைப் பொருள் மற்றும் குறிப்பிடத்தக்க விடயங்கள் தொடர்பில் மாகாண சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை சம்பந்தமான விவாதங்களில் தர்க்க ரீதியிலான தூரதிருஷ்டியான கருத்துக்களை சிங்கள மொழியில் சிறந்த முறையில் சபையில் அவர் முன்வைத்தமை நினைவு கூரத்தக்கதாகும்.

கொழும்பு மாவட்ட குறைந்த வாருமானம் கொண்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு சுயதொழில் வாய்ப்பு முயற்சி ஊக்குவிப்பு முயற்சித் திட்டங்களையும் தனது நிதி ஒதுக்கீடு மற்றும் மாகாண சபை ஒதுக்கீடுகளின் மூலம் இவர் முன்னெடுத்தார். இந்த திட்டங்களின் கீழ் தையல் மெஷின்,சிறிய வியாபாவரிகளுக்கு தள்ளு வண்டி என்பவற்றைப் பெற்றுக் கொடுத்ததுடன் அவாரது சிறப்பு ஏற்பாடாக இலகு கடன் அடிப்படையில் முச்சக்கர வண்டிகளையும் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் இவர் மேற்கொண்டார்.

பிளக் ஸ்குயார் விளையாட்டுக் கழக(BLACK Square Sports CLUB) தலைவரான இவர் உதைப்பந்தாட்டம் மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தியில் ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறார். கொழும்பு மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் தொடர்வதாக கருத்து தெரிவித்த அர்சாத் நிஸாம்தீன், முஸ்லிம் பாடசாலைகளில் சமய பாடத்துக்கான மௌலவி ஆசிரியர் மற்றும் சிங்களப் பாடத்துக்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர் பிரச்சினையாக நீடித்துக் கொண்டே வருவதாக கவலை தெரிவித்தார். இக்குறைகளைப் போக்க திட்டமிடப்பட்ட தீர்வுகள் அவசியம் என்றார் அவர்.

மத்ரசா மாணவர்கள் தங்களது சமய கல்வியை பூர்த்தி செய்து பட்டமளிப்புப் பெற சுமார் 11,12 வருட காலம் தேவைப்படுகின்றது. குறிப்பிட்ட பிரதேசங்களில் காணப்படும் முறையான மத்ரசாக்களின் மாணவர்களை பாடசாலைக் கல்விக்காக பிரதேச பாடசாலைகளில் இணைத்துக் கொண்டு செயல்படும் சிறந்த வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துவதன் மூலம் மௌலவி ஆசிரியர் இல்லாமைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என தான் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
*(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*

# அம்பாறை மாவட்டத்தில் பேரீச்சம்பழம் விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

காலத்திக்கேற்ற வகையில் பல்வேறு துறை சார்ந்த சேவைகளைச் செய்து வரும் அமைப்பான 'கல்முனையன்ஸ்' போரம் அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தில் 8.6 தொன் பேரீச்சம்பழங்கள் விநியோகிக்கும் வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்கு புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பேரீச்சம்பழ பொதி வழங்கும் இந்த செயற்றிட்டம் 'கல்முனையன்ஸ்' போரமினால் உத்தியோகபூர்வமாக கல்முனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனையன்ஸ் போரத்தின் செயற்பாட்டாளர் முபாரிஸ் எம். ஹனீபாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத்அலி பிரதம அதிதியாக கலந்துகொண்டு செயற்றிட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

கல்முனையன்ஸ் போரம் விடுத்த வேண்டுகோளுக்கமைய 8600 கிலோ கிராம் பேரீச்சம்பழ தொகுதியினை 'பெஸ்ட் புட் மார்க்கெடிங் பிரைவட் லிமிடெட்' நிறுவனத்தினர் நன்கொடையாக வழங்கியிருந்தனர்.

பேரீச்சம்பழங்கள் அம்பாறை மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புக்களூடாக இணங்காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஆரம்ப நிகழ்வில் முன்னாள் பிராந்திய உணவு மருந்து பரிசோதகர் எஸ்.தஸ்தகீர், அம்பாறை மாவட்ட பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பள்ளிவாசல் நிருவாகத்தினர் மற்றும் கல்முனையன்ஸ் போரத்தின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் இறக்காமம், வாங்காமம், வரிப்பத்தான்சேனை மற்றும் மருதமுனை வரையுள்ள சகல கிராமங்களுக்கும் இந்த பேரீச்சம்பழ விநியோகம் கல்முனையன்ஸ் போரத்தின் செயற்பாட்டாளர்களான முபாரிஸ் எம்.ஹனீபா, நிப்றாஸ் மன்சூர் உள்ளிட்ட போரத்தின் உறுப்பினர்களின் நேரடிக் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டது.

பிரதேசத்தைச் சார்ந்த அமைப்புக்கள் பொது நிறுவனங்கள் மற்றும் பள்ளிவாயல் நிர்வாக பிரதிநிதிகள் ஊடாக பேரீச்சம்பழம் வழங்கப்பட்டு வருகின்றது.

**அஷ்ரப் கான்...**

# இலங்கை–இந்திய நல்லுறவை வலுப்படுத்த அதியுயர் பௌத்த ஆலோசனைச் சபை உதயம்

**இந்திய_ இலங்கை நல்லுறவை பலப்படுத்தும் வகையில் பௌத்த ஆலோசனைச் சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலய நடவடிக்கைகளுக்காக இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட இந்த ஆலோசனைச் சபையை அமைத்துள்ளதோடு, அச்சபை உறுப்பினர்களின் முதலாவது சந்திப்பு அண்மையில் புத்தசாசன அமைச்சுடன் இணைந்ததான சாரிகாராமயில் நடைபெற்றது.**

மகாநாயக்கர் திருக்குணாமலயே ஆனந்த, கலாநிதி நியங்கொட விஜிதசிறி, வஸ்கடுவ மகிந்தவங்ச, பேராசிரியர் கொட்டபிட்டியே ராகுல, நெதகமுவே விஜய மைத்திரி, மெதகம நந்தவங்ச, பலாங்கொட சோபித, தும்புல்லே சிலக்கந்த, இத்ததெமலியே இந்தசார, பல்லேகம ஹேமரத்ன, வல்பொல பியனந்த, கொள்ளுப்பிட்டியே மகிந்த சங்கரக்கித்த, கலாநிதி பன்னில ஆனந்த தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் இந்த அதியுயர் பௌத்த ஆலோசனை சபையில் அங்கம் வகிப்பதோடு மல்வத்து பிரிவின் அனுநாயக்கர் கலாநிதி நியங்கொட விஜிதசிறி தேரர் அதன் தலைமை பதவியை வகிக்கின்றார்.

அங்கு உரையாற்றிய கலாநிதி நியங்கொட விஜிதசிறி தேரர், மிலிந்த மொரகொடவின் உயர்ஸ்தானிகர் நியமனம் குறித்து சிலர் கேள்வி கேட்டதாகவும், சிலர் அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இங்கு இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட அங்கு உரையாற்றுகையில், மாகாண சபை நாட்டுக்கு அநாவசியமான கட்டமைப்பு என்றும் எவ்வாறாயினும் தற்போதுள்ள அரசியலமைப்புக்கு அமைய செயல்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவை வலுப்படுத்துவதற்காக பெரும் சவாலான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி உள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர், இந்நியமனம் விருப்பத்தின் பேரில் ஏற்றுக் கொண்டது அல்லவென்றும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கமைய குறுகிய காலத்துக்கு அதனை ஏற்றுக் கொண்டதாகவும் அவர் மேலும்கூறினார்.

## உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நடவடிக்கை



எவ்வாறான கருத்து வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் கொவிட் 19 தொற்றின் போது இலங்கைக்கு முக்கியத்துவம் வழங்கி தடுப்பூசியை வழங்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளதாக சுட்டிக்காட்டிய உயர் ஸ்தானிகர், இந்தியாவுக்கு உள்ளக மட்டத்தில் தீர்வு காண வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

# புதுவருடத்துடன் புத்தெழுச்சி பெறும் பறங்கியாமடு கிராமம்



**மணலில் அமைக்கப்பட்ட குடிசைகள், ஆங்காங்கே ஒரு சில மலசலகூடங்கள், புதரும் பற்றைகளும் நிறைந்த பிரதேசம் அது. இரவு வேளையில் மக்கள் மண்ணெண்ணெய் விளக்கில் பொழுதைக் கழிக்கும் பிரதேசமாக அது உள்ளது.**

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் காண வேண்டுமானால் அது பறங்கியாமடு கிராமம் ஆகும். 150 குடும்பங்களைக் கொண்ட பின்தங்கிய அந்தக் கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. கிராமம் என்று சொல்லுமளவிற்கு வளர்ச்சி பெறாத அக்கிராமத்து மக்கள் கடற்றொழிலை நம்பி சீவியம் நடத்துகின்றார்கள்.

வாழைச்சேனை– மட்டக்களப்பு பிரதான வீதியில் சந்திவெளியிலிருந்து கிழக்காக 3 கிலோ மீற்றர் தூரம் சென்றதும் இக்கிராமத்தைக் காணலாம்.

இக்கிராமத்தின் அவலம் தொடர்பில், 'புதுவாழ்வும் புனர்வாழ்வும்' அமைப்பின் ஸ்ரீலங்கா தலைவர் எந்திரி ஹென்றிஅமல்ராஜ்ஜிற்கு தகவல் கிடைத்தது. அவர் அங்கு சென்று பார்த்ததும் அதிர்ச்சிஅடைந்தார்.

அவர் உடனடியாக பிரித்தானிய சிறுவர் பட்டினி ஒழிப்பு நிதியத்தை(CHRF_ UK) நாடி அக்கிராமத்தில் கிணறுகள் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவர்களும் இணங்கியதனால் 35 கிணறுகள் முதற்கட்டமாக அமைக்கப்பட்டன.

அத்தோடு நின்று விடாமல் தான் சார்ந்த 'புதுவாழ்வும் புனர்வாழ்வும்' நிறுவனத்தை நாடி அங்கு வீடுகள், மலசலகூடங்கள், வாழ்வாதார உதவிகள் வழங்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

அமைப்பின் சர்வதேச தலைவர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் சகிதம் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் அங்கு சென்று பூரண தகவலைப் பெற்றனர்.

புதுவாழ்வும் புனர் வாழ்வும்(Asst.RR Assist Resettlement and Renaissance) என்ற அமைப்பு பல கோடி ருபா பெறுமதியான பல வாழ்வாதார, வீடமைப்பு, கிணறுஅமைப்பு, மலசலகூட அமைப்பு வேலைத் திட்டங்களை கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொண்டது.

விளம்பரத்தை பெரிதும் விரும்பாமல், மக்கள் சேவையை அடிநாதமாகக் கொண்டு இவ்வமைப்பு இயங்கி வருகிறது. இந்திய வைத்திய நிபுணர்களைக் கொண்டு கல்முனை ஆதாரவைத்தியசாலையில், கண் சிகிச்சை முகாமையும் நடத்தியுள்ளனர். பல் சிகிச்சைக்கான பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளது.

அமைப்பின் சர்வதேச தலைவர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன், ஸ்ரீலங்கா தலைவர் எந்திரி ஹென்றிஅமல்ராஜ் ஆகியோரே பிரதான சேவையாளர்களாக ஆற்றிய உதவிகளை இவ்விடத்தில் மறக்க முடியாது.

குறித்த கிராமத்தில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்களில் பெரும்பாலானோருக்கு படுத்துறங்குவதற்கு பாய் கூட இல்லை. மேலும் குடிசைகள் மணலில் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் வாழுமிடம் மண்தான். குடிநீர் பெற கிணறு இல்லை. மாறாக பூவலில்(தோண்டப்பட்ட சிறு தண்ணீர் ஊற்று) தண்ணீர் எடுப்பதற்கு கயிறும் சேலையும் பாவிக்கப்படுகின்றன.

இவர்களில் 43 குடும்பங்கள் வெறும் குடிசைகளில் வாழ்வதால் அவர்களுக்கு வீடு அமைக்க வேண்டியதேவை ஏற்பட்டது., மேலும் 44குடும்பங்களுக்கு மலசலகூட வசதி இல்லை. அவர்கள் அருகிலுள்ள மறைவான பற்றைகளுக்குள் இயற்கைக் கடனை கழிக்க வேண்டியுள்ளது.

28 குடும்பங்கள் விதவைகள் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஆகும். அவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்க வேண்டிய தேவையிருந்தது. மேலும் 122 குடும்பங்கள் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டாலும் யாருக்கும் அதற்கான அடிப்படை வசதி இல்லாமையினால் கூலிக்கு உடப்பு, புத்தளம் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்கின்றனர். அதனால் இவர்களுக்கு மீன்பிடி உபகரணம் வழங்க வேண்டிய கட்டாயமுள்ளது.

இத்தகைய பூர்வாங்க மதிப்பீடுகளைப் பெற்றுக் கொண்ட இவ்வமைப்பு, உதவி வழங்கும் நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்தது.

அதன் பலனாக மலேசியா தமிழர் பேரவை மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார ஸ்தாபனம் 43குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்க முன்வந்தது. ஒவ்வொன்றும் மூன்றரை இலட்ச ரூபா செலவில் நிருமாணிக்கப்பட்டன.

பறங்கியாமடுவில் மண்குடிசைகளில் அடிப்படை வசதிகளற்று வாழ்ந்து வந்த 43 குடும்பங்களுக்கு வீடுகளையும், மலசலகூடம், மின்னிணைப்பு, வாழ்வாதார வசதிகளையும் செய்து கொடுத்தனர். அமைப்பின் வேலைத் திட்டங்களை குமார் மேற்கொண்டு வந்தார்.

அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட 43 வீடுகள் புதுவருட பிறப்பையடுத்து வந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக திறந்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.



திறப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்டு வீடுகளைத் திறந்து வைத்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசமொன்றுக்கு உதவிக் கரம் கொடுக்கும் 'புதுவாழ்வும் புனர்வாழ்வும்'அமைப்பு



அந்த வீடுகளின் திறப்பு விழா 'புதுவாழ்வும் புனர்வாழ்வும்' அமைப்பின் இலங்கைக்கான தலைவர் எந்திரி ஹென்றிஅமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் 'புதுவாழ்வும் புனர்வாழ்வும்' அமைப்பின் சர்வதேசத் தலைவர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில், கிரான் பிரதேச செயலாளர் ரி.ராஜ்பாபு உள்ளிட்டோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

"சிறுசிறு உதவிகளைச் செய்து விட்டு பெரிய விளம்பரம் தேடுவோர் வாழும் இவ்வுலகில் பாரிய உதவியை செய்துள்ள புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பினரைப் பாராட்டுகிறேன்" என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

"மனிதனின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றுமில்லாமல் இன்னும் அநேகமான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த அடிப்படை வசதிகளற்று இன்றும் பல பிரதேசங்கள் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்றன.

பறங்கியாமடு பிரதேச மக்கள் காலாகாலமாக மணல் குடிசையோடு, கடலை நம்பி அடிப்படை வசதிகளற்று வாழ்ந்துவந்தவர்கள். அதனை இனங்கண்டு இவ்வமைப்பினர் இன்று எவ்வித விளம்பரமுமில்லாமல் செய்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படைச் சேவைக்காக மாவட்டத் தலைவர் என்ற வகையில் மனதாரப் பாராட்டுகிறேன்.

இதற்கு கைமாறாக இக்கிராம மக்கள் செய்யவேண்டியது என்ன? நீங்கள் முதலில் உங்கள் காணியைச் சுற்றி வேலி அமைத்து வாழை நடுங்கள். பூக்கன்றுகள் நடுங்கள். அப்போது உங்கள் கிராமம் சிரிக்கும். உங்கள் வாழ்க்கைப் பாங்கு அடுத்த கட்டத்திற்கு நகரும்.

பறங்கியாமடுக் கிராமத்திற்கு இச்சேவை பாரிய திருப்புமுனையாக அமையும். மக்களின் வாழ்வியல் ஒழுங்கு மாறும். இதற்காக தங்களை முழுமையாக உண்மையாக அர்ப்பணித்த சர்வேஸ்வரன், ஹென்றிஅமல்ராஜ் உள்ளிட்ட குழுவினரை வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்" என்றார்.

விழாவில் பயனாளிகளின் வீடுகள் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டன. அதற்கான திறப்புகள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. பொதுமக்கள் இவ்வமைப்பின் அர்ப்பணிப்பான சேவைக்காக அதன் பிரதிநிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

மிக விரைவில் இவர்களுக்கான கடற்கலங்கள் அதற்கான சகல வசதிகளோடும் வழங்கி வைக்கப்படவுள்ளன. மேலும் 06 பயனாளிகளுக்கு வீடுகள் அமைக்கவும் பாடசாலை மாணவர்கள் நீண்ட தூரம் சென்று கல்வியைத் தொடர துவிச்சக்கரவண்டிகளை வழங்கவும் இணக்கம் காணப்பட்டது.

பறங்கியாமடு பாரதி வித்தியாலயம் என்றொரு ஆரம்பப் பாடசாலையுள்ளது. பிரதான வீதியில் மற்றுமொரு 1சி பாடசாலை உள்ளது. மேற்படிப்படிப்பிற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டும் என்பதால் இடைவிலகல் நிறையவுள்ளது. அதற்கான தீர்வாக துவிச்சக்கர வண்டி வழங்கப்படவிருக்கிறது.

மொத்தத்தில் இக்கிராமம் வரலாற்றில் புதுவருடத்துடன் புத்தெழுச்சி காணவிருக்கிறது.

**வி.ரி.சகாதேவராஜா...**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

# மட்டக்களப்பில் குறுந்திரைப்பட பயிற்சிப் பட்டறை



**கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முதன் முதலாக 2021ஆம் ஆண்டுக்கான குறும்பட பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பு பிள்ளையாரடி விதாதா வள நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.**

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் மட்டக்களப்பு மாவட்ட குறுந்திரைப்பட செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த குறும்பட பயிற்சிப்பட்டறை திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் ஆரம்பமானது. மேற்படி பயிற்சிப் பட்டறையில் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.சுஜாதா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டதோடு, இந்நிகழ்வில் முதல் நாளன்று ஒன்பது ரூபா நோட்டு, தென்றல், ஆடுகளம், வடசென்னை போன்ற இந்திய திரைப் படங்களின் உதவி இயக்குநர் ஏ.எல். ஹசீன், கிழக்கின் பிரபல எழுத்தாளர் உமா வரதராஜன் ஆகியோரின் விரிவுரை நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.



குறுந்திரைப்பட பயிற்சிப் பட்டறையின் இரண்டாம் நாள் அமர்வின் வளவாளர்களாக 'உரு' திரைப்படம் மற்றும் புங்குடுதீவு ஆவணப்பட இயக்குநர் காசிநாதர் ஞானதாஸ் மற்றும் இந்தியாவில் சினிமாத் துறையில் பட்டப்படிப்பை (ஒளிப்பதிவு) மேற்கொண்ட பிரதீபன் செல்வன் ஆகியோர் பங்கேற்றனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் உலகில் பல்வேறு மொழிகளிலும் முக்கியமான குறும்படங்கள் சில திரையிடப்பட்டதோடு, எமது கலைஞர்களின் குறும்படங்களும் திரையிடப்பட்டன. மேலும் விரிவுரைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன் 2ம் நாள் நிகழ்வு முடிவில் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன.இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி திருமதி பாரதி கெனடி கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வின் போது மட்டக்களப்பு திரைப்படக் கலைஞர்களுக்கான சங்கமும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.எதிர்வரும் காலங்களில் கிழக்கிலிருந்து பல சிறந்த குறுந்திரைப் படங்கள் வெளிவர களமாக இப்பயிற்சிப் பட்டறை அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**யு.எல்.எம்.ஹரீஸ்...**
**(வாழைச்சேனை விசேட நிருபர்)**

## அத்தியாவசியமற்ற...

போட்டிகளை நடத்துவதை தவிர்த்து முடிந்தளவு வீடுகளிலேயே தங்கி இருக்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார்.

நாட்டில் கொரோனா வைரஸ் நோயாளிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் எதிர்வரும் நாட்களில் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென குறிப்பிட்ட அவர், நாடு முடக்கப்படாது எனினும் வைரஸ் தொற்று நோயாளிகள் அதிகமாகக் காணப்படும் பிரதேசங்கள் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்களான கெஹெலிய ரம்புக்வெல்ல பவித்ரா வன்னியாராச்சி, ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, மருத்துவ நிபுணர்கள் உட்பட துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் அது தொடர்பில் மேலும் தெரிவித்த இராணுவத் தளபதி,

புதுவருட பண்டிகைக்கு முன்பதாக நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்திருந்த நிலையில் நாளாந்தம் 150க்கும் 200 க்கும் இடையிலான நோயாளிகளே புதிதாக இனங்காணப்பட்டு வந்தனர்.

எனினும் புத்தாண்டுக்கு பின்னர் தற்போது அந்த எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. நேற்று முன்தினம் அது 650 ஆக அதிகரித்தது.

அதற்கிணங்க குளியாப்பிட்டி,கணேவத்த, வத்தளை,திவுலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் பெருமளவு புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதேபோன்று ஒப்பீட்டளவில் கொழும்பு, கம்பஹா, குருநாகல், களுத்துறை, காலி, கண்டி, புத்தளம், யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. புத்தாண்டு காலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் அதிகளவு மக்கள் கூடியமையே இந்த அதிகரிப்புக்குக் காரணம்.

உலக நாடுகளோடு ஒப்பிடுகையில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பில் இலங்கை முன்னணியில் உள்ளது.இதுவரை காலமும் பொதுமக்கள் வழங்கிய பூரண ஒத்துழைப்பே அதற்கு முக்கிய காரணம். இந்த விடுமுறை காலங்களிலும் இனிவரும் காலங்களிலும் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றி மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எதிர்வரும் ஒருமாத காலம் மிக எச்சரிக்கை மிகுந்த காலமும் சுகாதாரப் பிரிவினர் கூறுவது போன்று அச்சுறுத்தல் நிறைந்த காலமாகவும் அமையலாம். அரசாங்கம் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக முன்னெடுக்கும். எனினும் மக்கள் தம்மை வைரஸ் தொற்று நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டை முடக்கி மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பின்னடைவு செய்வதற்கான எத்தகைய எதிர்பார்ப்பும் அரசாங்கத்திற்கு கிடையாது. அன்றாடம் தொழில் செய்து பிழைப்பவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். சட்டங்களை நடைமுறைப்படுத்தி செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது. எமது நாட்டு மக்கள் மிகவும் புத்திசாதுரியமானவர்கள்.

அதனை ஏற்கனவே நிரூபித்துள்ளார்கள். தொடர்ந்தும் அச்சுறுத்தல் நிலைமைகளை உணர்ந்து மிகவும் பாதுகாப்புடன் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

நாட்டில் புதிய வகை வைரஸ் இனங்காணப்பட்டுள்ளது.

முதலாவது இரண்டாவது வகை வைரசை விட இது வித்தியாசமானது. அவற்றின் தன்மை தொடர்பில் விரைவில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும்.

எமது அயல் நாடான இந்தியாவில் மிக மோசமான கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழலை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அது போன்ற நிலைமை எமது நாட்டுக்கும் வந்து விடக் கூடாது என்பதில் நாம் அனைவரும் கவனமாக செயல்பட வேண்டும். அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். மக்கள் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றி அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ஸ)

## ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு...

அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். ரஞ்சன் ராமநாயக்க என்பவர் எம்மை போன்ற ஒரு கலைஞர் என்ற ரீதியில் அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பை வழங்க வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் நான்கு வருட கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு பொது மன்னிப்பை வழங்க வேண்டுமென பல தரப்பினரும் வலியுறுத்தி வரும் சூழலிலேயே ஆளுங்கட்சி எம்.பி கீதா குமாரசிங்கவும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால்...

திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, கடந்த ஜனவரி மாதம் 08ஆம் திகதி இரவு, பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தகர்க்கப்பட்டது. இதையடுத்து மாணவர்கள், அரசியல் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் கண்டனம் வெளியிட்டனர்.இதேநேரம், பல்கலைக்கழக மாணவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இவ்வாறாக கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட நிலையில், தகர்க்கப்பட்ட இடத்திலேயே நினைவுத் தூபியை மீள அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் இணங்கியது.

## சிறைக்கைதிகளை...

ஏற்படக்கூடுமென்ற அச்சம் காரணமாகவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் (நிர்வாகம் மற்றும் புனர்வாழ்வு) சிறைச்சாலை பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

என்றாலும் குடும்ப உறுப்பினர்களால் சிறையிலுள்ளவர்களுக்குத் தேவையான பொருட்களை அந்தந்த சிறைச்சாலைகளிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளில் பணம் செலுத்துவதன் மூலம் முன்பிருந்த நடைமுறையின் படியே பெற்றுக் கொடுக்க முடியும். கடந்த சில தினங்களாக சிறைச்சாலைகள் சிலவற்றில் கொரோனா தொற்றுள்ள கைதிகள் நீதிமன்றத்தினூடாக உள்ளே வருவதால் மீண்டும் சிறைச்சாலைகளுக்குள் கொரோனா அலை தலைதூக்காதிருக்கும் வகையிலேயே சிறைச்சாலை திணைக்களம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## காஸ் விலை குறித்த...

உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். நளின் பண்டார எம்.பி தமது கேள்வியில்,

12 கிலோ நிறைகொண்டு கேஸ் சிலிண்டர் ஒன்று தற்போது 9.5 கிலோவாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்காக 100 ரூபா விலை குறைப்பை போலியாக செய்துவிட்டு உண்மையாக 250 ரூபாவை அதிகரித்துள்ளனர்.

இந்த விலை சூத்திரம் தொடர்பில் அரசாங்கம் விளக்கப்படுத்த வேண்டும். 4 சிலிண்டர்களில் செய்த பணியை தற்போது 5 சிலிண்டர்களில் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

கேஸ் சிலிண்டர்களின் நிறையை குறைப்பதும் அதன் விலையை குறைப்பதும் நான் அல்ல. இலங்கையில் கேஸ் உற்பத்தி செய்யும் இரண்டு தரப்பினர் உள்ளனர். அரசு மற்றும் தனியார் தரப்பினர் கேஸ் உற்பத்தியை செய்கின்றனர். இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பது நுகர்வோர் அதிகாரசபையும் உரிய அமைச்சருமாகும். கேஸ் என்பது மக்கள் பயன்படுத்தும் பொருளாகும். அந்த அதிகார சபையும் நிறுவனங்களும் இது குறித்து தீர்மானிக்கும். இங்கு ஏதும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருந்தால் எமக்கு அறிவியுங்கள். ஆனால், கேஸ் விலை குறைப்பு குறித்து தீர்மானிக்கவில்லை என்றார்.

## ஏப்ரல் 21 தாக்குதல்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சந்தித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோவின் உடல்நலம் தொடர்பில் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் கேட்டறிந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவும் உடன் சென்றிருந்தார்.

## ஜம் இய்யத்துல் உலமா... (03ஆம் பக்கத் தொடர்)

அடிக்கடி கழுவிக் கொள்ளுதல், 01 மீட்டர் இடைவெளியை பேணுதல், சன நெரிசலான இடங்களைத் தவிர்த்தல் போன்ற விடயங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதன் அவசியத்தை உலமாக்கள் பொது மக்களுக்கு தொடர்ந்தும் அறிவுறுத்தி, தங்களது மார்க்க சொற்பொழிவுகளில் இதனை ஞாபகமூட்ட வேண்டும்.

கூட்டாக அமல்கள் நடைபெறும் சந்தர்ப்பங்களிலும் ஏனைய நேரங்களிலும் மஸ்ஜித்களும் மேற்படி விடயத்தில் சுகாதார அதிகாரிகள் மற்றும் வக்ப் சபையினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

## அரச வங்கி முறைமை... (03ஆம் பக்கத் தொடர்)

தொடர்பில் பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்தனர்.

ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பில் தொடர்ந்து நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பது குறித்தும் இதன்போது பிரதமரின் கவனம் செலுத்தப்பட்டது.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரச வங்கிகளில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இக் கலந்துரையாடலில் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, பிரதமரின் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க, பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் நிசாந்த சமரசிங்க, தலைமை செயலாளர் ஏ.கே.பண்டார உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கொரோனா தொற்று... (03ஆம் பக்கத் தொடர்)

இப் பொலிஸ் நிலையத்தின் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றுக்குள்ளான இப் பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக கொழும்பு பொலிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பீ. சீ. ஆர் பரிசோதனையிலேயே அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பயங்கரவாதி சஹ்ரானின்...

மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிமின் மாமனார் (மனைவியின் தந்தை) உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 40, 52, 55 வயதுடைய இச் சந்தேகநபர்கள் தற்போது பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து வரப்பட்டு, பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கமைய இத் தாக்குதல் மற்றும் அதற்கு முன்னர் இடம்பெற்ற பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வரும் விசாரணைகளுக்கமைய, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான குற்றவாளியான பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிமினால், கடந்த 2018ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அடிப்படைவாதம், கடும்போக்குவாதம் தொடர்பான வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவித்த அவர், அவ்வாறான வகுப்புகளில் கலந்து கொண்ட மற்றும் அதனை ஒழுங்கு செய்த பல சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான அடிப்படைவாத, கடும்போக்குவாத வகுப்புகளில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படும் பயங்கரவாதி சஹ்ரான் ஹாசிமின் மாமனார் உட்பட சந்தேகநபர்கள் மூவர் (22) குருணாகல் மாவட்டத்திலுள்ள குளியாபிட்டி, கெக்குணுகொல்ல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாக, பிரதி பொலிஸ் மாஅதிபர்அஜித் ரோஹண தெரிவித்தார்.

## மே மாதம் வரையான புதிய... (03ஆம் பக்கத் தொடர்)

ஈடுபடுத்துமாறும் ஏனையோர் வீடுகளிலிருந்து பணிபுரிவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று 23ஆம் தேதி முதல் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி வரை நடைமுறைக்கு வரும் வகையில் மேற்படி வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே அதில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## மள்வானை நகரில்...(03ஆம் பக்கத் தொடர்)

ஆரம்பத்தில் ஒரு வீட்டின் நடுப்பகுதியில் உள்ள அறையொன்றில் தீ ஏற்பட்டு பின்னர் அருகிலுள்ள கடைகளுக்கும் வீடுகளுக்கும் பரவியுள்ளதாக கூறப்படுகிறது.

இலங்கை முதலீட்டு சபையின் பியகம வர்த்தக வலயத்தின் தீயணைப்பு படையினராலும் கம்பஹா மாநகர சபையின் தீயணைப்பு படையினராலும் பியகம பொலிஸாரினதும் பிரதேச மக்களினதும் பாரிய ஒத்துழைப்புடன் தீ மேலும் பரவாமல் அணைக்கப்பட்டது.

பிற்பகல் ஒரு மணியளவில் ஏற்பட்ட இத் தீவிபத்து கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் தீ நீடித்தது. தீக்கான காரணம் மின்சார கசிவு என சந்தேகிக்கப்படுகிறது.

## அதிகரித்துவரும் கொரோனா பரவலே... (03ஆம் பக்கத் தொடர்)

இதற்கு முன் வழங்கப்பட்டது. எனினும் இதனிடையே கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி செயலணி அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சு நடத்தியது. அதில் அனைவரும் பங்கேற்றனர். சிங்கள தமிழ் புத்தாண்டிற்கு முன், பின்னர் உள்ள நிலைமையை இராணுவத் தளபதி தெளிவுபடுத்தினார். இறுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை அறிவுறுத்தி தீர்மானத்தை எடுக்கும்படி கூறியபோது ஜனாதிபதி செயலணி இறுதிமுடிவை எடுக்கும்படி கோரப்பட்டது. அதன்போது கொரோனா தொற்று வேகமாக பரவிவருவதால் இந்தியாவை ஒப்பீடு செய்து தற்போது கட்டுப்பாட்டை இழந்த நிலையில், இன்று இலங்கையில் 300 பேர்வரை சராசரியாக இனங்காணப்பட்டதால், மே தினத்தை நிறுத்துவதற்கான தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் ஐக்கிய தேசியக்கட்சி பொதுச் செயலாளர், அரச தலையீட்டினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். அன்று ஜனாதிபதி செயலணி எடுத்த முடிவின் பின்னர் இன்று கட்டுப்பாட்டை இழந்து செல்கிறது. தற்போதுவரை குருநாகலில் சில இடங்கள் மூடப்பட்டுள்ளதோடு எதிர்வரும் நாட்களில் மேலும் சில நகரங்கள் மூடப்படலாம். யதார்த்தத்தை ஊடகங்கள் வாயிலாக அரசாங்கம் அறிவிக்கின்றது என்றார்.

## இரசாயன உர... (03ஆம் பக்கத் தொடர்)

பதவி உயர்வு மற்றும் போனஸ் ஆகியவற்றைப் பெறவும் முடிந்தது என்று இலங்கை சீனி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

நிறுவனங்கள் அடைய வேண்டிய இலக்குகள் தொடர்பில் “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கை திட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அமைச்சரவை, இராஜாங்க அமைச்சுகளுக்கு தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் அடைய வேண்டிய முன்னேற்றம் ஆகியவை பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

கூட்டுப் பொறுப்புடன் பணியாற்றி மக்கள் விரும்பும் கொள்கை மாற்றத்தை அடைய அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதி தலைவர்களிடம் கூறினார்.ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பொது மக்களின்...

நடவடிக்கைகளுக்கு அனைத்து மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

இந்த வாரத்தின் இறுதி நாட்கள் மிகவும் எச்சரிக்கை மிகுந்த நாட்களாக உள்ளன. அந்த சவாலை வெற்றி கொள்ள வேண்டியுள்ளது. சர்வதேச நாடுகளில் நிலைமை மிக மோசமானதாக காணப்படுகிறது. நிலைமையை கருத்திற் கொண்டு உற்சவங்கள், கூட்டங்கள், பயணங்கள் மற்றும் கொண்டாட்ட நிகழ்வுகளை தற்காலிகமாக நிறுத்துவது அவசியமாகும்.

மிக அத்தியாவசியமான காரணங்கள் தவிர்ந்த பயணங்களை தவிர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. அச்சுறுத்தல் மிகுந்த இக்காலத்தில் பொது மக்களின் முழுமையான ஒத்துழைப்பை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. எமது புத்திசாலித்தனமான மக்கள் என்ற வகையில் அவர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

அரசாங்கம் அதன் இலக்கை கைவிடவில்லை. தடுப்பூசிகள் வழங்கும் செயற்திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படும்.

மக்கள் சுயமாக தம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவதுடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## கடற்றொழிலாளர்களை பாதிக்கும்... (03ஆம் பக்கத் தொடர்)

தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரதி தலைவரும் இராஜாங்க அமைச்சருமான கஞ்சன விஜேசேக்கர தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாகவும் அவர்களுக்கு சாதமாக நான் செயல்படுவதாகவும் ஒரு சில அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் எனக்கெதிராக ஆதாரமற்ற தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

புலிகள் இருந்த காலத்திலும் இவ்வாறான போலிப் பிரசாரங்கள் இவ்வாறான சில ஊடகங்களினால் மேற்கொள்ளப்பட்டன.

இந்திய தரப்பில் முன் வைக்கப்பட்ட சில ஆலோசனைகள் தொடர்பாகவே நான் கருத்து தெரிவித்திருந்தேன். அதற்கு கண், காது மூக்கு வைத்து திரிபுபடுத்தி குறிப்பிட்ட சில ஊடகங்கள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. இந்திய தரப்பிலும் எமது தரப்பிலும் முன் வைக்கப்பட்ட விடயங்கள் ஆலோசனை மட்டத்திலேயே உள்ளன.

இறுதி தீர்மானம் எதுவும் இதுவரை எட்டப்பட வில்லை. எமது கடற்பரப்பில் அத்துமீறும் இந்திய மீன்பிடி படகுகளை கைப்பற்றுமாறு நான் தொடர்ந்து எமது கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கி வருகின்றேன்.

இப்பிரச்சினை இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். இதனை இராஜதந்திர முறையிலேயே தீரக்க வேண்டும். நான் ஒரு தமிழ் அமைச்சராக இருந்த போதும் ஜனாதிபதியும் பிரதமரும் என் மீது நம்பிக்கை வைத்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சினை வழங்கியுள்ளனர்.

ஆகவே அனைத்து இனங்களுக்கும் நான் எவ்வித பாகுபாடும் காட்டாமல் சேவை புரிவேன். என்னை எந்நேரமும் சந்திக்கலாம். குறிப்பாக யாரையும் ஏமாற்றும் நோக்கம் எனக்கு கிடையாது.

இங்கு கடற்றொழிலாளர்கள் முன்வைக்கின்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை நான் நிச்சயம் பெற்றுக் கொடுப்பேன்" எனவும் தெரிவித்துள்ளார்.

## நாட்டுக்கு வைரஸ்... (03ஆம் பக்கத் தொடர்)

நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிரூபித்தால் ஒரு மணி...

அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

உலக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பரிமாற்றங்கள் வீழ்ச்சியடைந்திருந்த நிலையில் புத்தாண்டு காலப்பகுதியில் பொது மக்களுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் 12 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய சலுகை பொதியொன்று ச.தொ.ச உட்பட சுப்பர் மார்க்கட்டுகளில் பெற்றுக்கொடுத்தோம். ஆனால், இந்த பொதியில் தரமற்ற பொருட்கள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களை கைது செய்துள்ளதாகவும் கூறுகின்றனர்.

இந்த சலுகைப் பொதியின் பெறுமதி 1,400 ரூபாய் என்றாலும் 1,000 ரூபாவிற்கே மக்களுக்கு இதனை பெற்றுக் கொடுத்தோம். சலுகை பொதி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சில தனியார் சுப்பர் மார்க்கட்டுகளில் பொருட்களில் விலைகள் குறைக்கப்பட்டதால் சலுகை பொதியை 1,301 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்தது. மற்றுமொரு சுப்பர் மார்க்கட்டில் 1,333 ரூபாவுக்கு இந்த சலுகை பொதி பெற்றுக்கொடுக்கப்பட்டது. குறைந்தபட்சம் 300 ரூபாவேனும் மக்களுக்கு இலாபம் கிடைக்கும் அடிப்படையில்தான் சலுகை பொதி மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இவ்வாறு மக்களுக்கு சலுகைகள் கிடைக்கும்போது அதற்கு ஒத்துழைப்புகளை வழங்காவிடினும் குற்றச்சாட்டுகளை முன்வைக்காதிருக்க வேண்டும். குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலம் அவர்களுக்கு கிடைக்கும் நன்மை என்னவென தெரியவில்லை. சலுகை பொதியில் இருந்த முகக் கவசமானது 14 ரூபாவாகுமென்றும் இதனை மொத்த சந்தையில் 07 ரூபாவுக்கு பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் கூறியுள்ளனர். முகக் கவசத்தில் 100 சதவீதம் இலாபத்தை பெற்றுள்ளதாக குற்றம் சுமத்துகின்றனர். 40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முகக் கவசத்தையே அதில் 14 ரூபாக்கு பெற்று உள்ளடக்கியுள்ளோம். இலங்கையில் எஸ்.எல்.எஸ். சான்றிதழ் உள்ள ஒரே முகக் கவசம் இதுவாகும். அத்துடன், பொதியில் உள்ள தேயிலை தூளில் நிறமூட்டிகள் கலக்கப்பட்டுள்ளதாகவும் சேறு பூசுகின்றனர்.

மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் சலுகைகளுக்கு அபக்கீரித்தியை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக சமூக நீதிக்கான இயக்கம் கொம்பனிவீதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது. முறைப்பாடுகளை செய்தது நாம் அல்ல. அத்துடன் சதொச நிறுவனத்தின் தலைவர், கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர், தேயிலை வழங்குனர் சபையும் கொம்பனிவீதி பொலிஸில் இதுதொடர்பில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார். எனக்கு தனிப்பட்ட ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அபகீர்த்திகளுக்கு எதிராக எனது சட்டத்தரணிகள் ஊடாக அழைப்பாணை அனுப்ப சொல்லியுள்ளேன்.

சலுகை பொதியில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருப்பது நிரூபிக்கப்பட்டால் ஒரு மணி நேரம் கூட பாராளுமன்றத்தில் இருக்க மாட்டேன் என்பதுடன் பதவியை இராஜனாமா செய்துவிட்டு செல்வேன். மனசாட்சிக்கு உட்பட்டு அர்ப்பணிப்புடன் நாம் செயறபடுகின்றோம். ஆகவே, நான் எவரையும் கைதுசெய்யுமாறு கூறவில்லை என்றார்.

## சுகாதார வழிமுறைகளை...

வேண்டியேற்பட்டுள்ளதாக வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்துள்ளார்.


நாட்டில் மீண்டும் கொவிட் 19 தொற்றுப் பரவல் உருவாகும் சாத்தியம் உருவாகியிருப்பதாக சுகதார அமைச்சு எச்சரித்திருக்கிறது. அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் இரண்டு முஸ்லிம் கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

வக்பு சபையின் தலைவர் சப்ரி ஹலீம்தீன் மேலும் தெரிவிக்கையில் “அண்மையில் சுகாதார அமைச்சு நோன்பு காலத்தில் பள்ளிவாசல்களில் சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் சுற்றிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அவ்வறிக்கையில் பள்ளிவாசல்களில் ஜமாஅத் தொழுகைகளில் 100 பேருக்கு உட்பட்டவர்களே தொழ முடியும். ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து முஸல்லாக்களை எடுத்து வர வேண்டும். வீடுகளிலே வுழூச் செய்து வர வேண்டும். ஒவ்வொருவரும் மாஸ்க் அணிந்திருக்க வேண்டும்.ஒரு மீற்றர் இடைவெளி பேணப்படவேண்டும். பள்ளிவாசலுக்குள் நுழையும் ஒவ்வொருவரதும் உடல் உஷ்ண நிலை சோதிக்கப்படவேண்டும் என்பன உட்பட பல நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இவைகளில் எவையும் பின் பற்றப்படுவதில்லை என வக்பு சபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கஞ்சி விவகாரமும் சுற்றறிக்கையின்படி பேணப்படுவதில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கஞ்சி பள்ளிவாசலுக்கு வெளியே வழங்கப்படவேண்டுமென சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரமும் பின்பற்றப்படாது அலட்சியம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்கள் புகைப்படங்கள் மூலம் வக்பு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் நாட்டில் கொவிட் 19 மூன்றாவது அலை உருவாக முஸ்லிம் சமூகம் காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்படலாம். அதனால் பள்ளிவாசல்கள் நோன்பு காலத்தில் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை முழுமையாக கண்டிப்பாக பின்பற்றவேண்டும். பள்ளிவாசல்களில் சுகாதார வழிகாட்டல்கள் மீறப்படுகின்றமைக்கு பள்ளிவாசல் நிர்வாகங்களே பொறுப்புக் கூறவேண்டும். இவ்வாறான நிலையில் வக்புசபை குறிப்பிட்ட பள்ளிவாசல்களை மூடாமல் இருப்பதற்காக வக்பு சபைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

## மலைச்சாரல்



# அரச பெருந்தோட்டங்களில் 1000 ரூபா சம்பள உயர்வு

### இ.தொ.கா நடவடிக்கை



அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கண்டி, மாத்தளை மாவட்டங்களில் இயங்கும் 16 தோட்டங்களில் 1000 ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்கு இ.தொ.காவின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுகுறித்து நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீமால் முன்னெடுத்து வந்த பேச்சுவார்தை வெற்றியளித்துள்ளது.

அதற்கமைய கடந்த மாதத்தில் இணைக்கப்பட வேண்டிய நிலுவைப் பணம் நேற்று தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கீழ் இயங்கும் கம்பனிகளில் 1000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என தொழிலாளர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர். இந்த விடயம் தொடர்பில் செந்தில் தொண்டமான் உடனடியாக அரசின் கீழ் இயங்கும் மூன்று கம்பனிகளின் பிரதானிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தார்.

கடந்த சில தினங்களாக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதானிகளுடன் முன்னெடுக்கப்பட்டுவந்த பேச்சுவார்த்தையின் பிரகாரம் இந்நிறுவனத்துக்கு சொந்தமான தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வை வழங்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வழங்கப்பட வேண்டிய நிலுவை பணமும் நேற்று தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# பசறை-13ஆவது மைல் கல் விபத்து; பஸ் சாரதி பிணையில் விடுதலை



**பதுளை தினகரன் விசேடநிருபர்**

பசறை-13ஆவது மைல் கல்லருகே விபத்திற்குள்ளான தனியார் பஸ்சின் சாரதி 33 தினங்களுக்குப் பின்னர் பத்து இலட்ச ரூபா இரு சரீரப்பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பசறை – நீதவான் நீதிமன்றத்தில் நேற்று பிற்பகல் இதுதொடர்பான வழக்கு, நீதிபதி சமிந்த கருணாதாச முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.


இவ்வழக்கை பரிசீலனை செய்த நீதிபதி, தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவிற்கமைய, விபத்துக்குள்ளான பஸ்சின் சாரதியை பத்து இலட்சம் ரூபாவிற்கான இருசரீரப் பிணைகளில் விடுவிப்பதாக உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் அடுத்த மாதம் 20ஆம் திகதி மீளவும், பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 20ஆம் திகதி காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 14 பேர் பலியானதுடன், 32 பேர் காயங்களுக்கு உட்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய மாகாணத்தில் இதுவரை 8262 பேருக்கு கொரோனா

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**



மத்திய மாகாணத்தில் இதுவரை 8262 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் கண்டியில் 5293 பேரும் மாத்தளையில் 1322 பேரும் நுவரெலியாவில் 1647 பேரும் அடங்குவர்.

கடந்த 24 மணித்தியாலயத்தினுள் கண்டியில் 19 தொற்றாளர்களும், மாத்தளையில் 12 பேரும் நுவரெலியாவில் 12 தொற்றாளர்களுமாக மொத்தம் 43 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கண்டியில் 65 மரணங்களும், மாத்தளையில் 11 மரணங்களும், நுவரெலியாவில் 12 மரணங்களுமாக மொத்தம் 88 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கண்டியில் கடைசியாக 63 வயதுடைய ஆண் கொரோனா தொற்றாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் தெல்தெனியா வைத்தியசாலையில் மாற்றப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார். இவர் ஈரல் நோய், நுரையீரல் நோயில் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கண்டி பள்ளேகல மைதானத்தில் தற்காலிகமாக பணியாற்றி வரும் நபர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

22 ஆம் திகதி மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவருடன் நெருங்கி பழகிய மைதான ஊழியர்கள் பத்து பேர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை மற்றும் பங்காளதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பார்வையாளர்கள் இன்றி நடைபெற்று வருகின்றது. எனினும் இரு அணிகளிடமும் தொற்றாளர் நெருங்கி பழகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# போபத் எல்ல நீர்வீழ்ச்சி பிரதேசத்தை சுற்றுலா வலயமாக மாற்ற நடவடிக்கை

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி போபத் எல்ல நீர்வீழ்ச்சி பிரதேசத்தை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ எடுத்துள்ளார்.

போபத் எல்ல நீர்வீழ்ச்சி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (22) மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளுநர் தலைமையிலான குழுவினர் நேற்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு நிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது போபத் எல்ல பிரதேச வீதியின் இரு புறங்களிலும் முறையற்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைத்தொகுதிளை அப்புறப்படுத்துவதற்கும் முறையற்ற விதத்தில் குப்பைகளை போடுவதை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மேலும் அப்பிரதேசத்தில் மலசலகூட வசதிகள் இல்லாமை உட்பட பல பிரச்சினைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது. இது குறித்து கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர், போபத் எல்ல பிரதேசத்தின் வீதி மற்றும் மலசலகூடம் உட்பட ஏனைய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் பெற்றுக் கொடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இவ்விஜயத்தில் குருவிட்ட பிரதேச செயலாளர் திலினி தர்மதாச உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



சித்திரை புத்தாண்டை முன்னிட்டு வோல்ட்றிம் தோட்டத்தில் தேயிலை செழிப்புடன் வளரவும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு வளம்பெறவும் இறையாசி வேண்டி பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. படம்: சுபா

### ரூ.1000 சம்பள விவகாரம்

# தொழில் சுமை அதிகரிக்க முயற்சி

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரத்தில் கம்பனிகள் தொழில் சுமையை அதிகரிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அழுத்தம் கொடுத்து வருவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று (23.04.2021) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும், உயர்நீதிமன்ற தீர்ப்பு வெளியான பின்னர் தொழில் உரிமைகள் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்தது. அதுமட்டுமல்ல தொழில் சுமைகள் எதுவும் அதிகரிக்கப்படாமலேயே ஆயிரம் ரூபா சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டது எனவும் அறிவிப்பு வெளியானது.



ஆனால் சம்பள உயர்வு விவகாரத்தில் இன்று சூழ்ச்சி இடம்பெற்றுவருகின்றது.

ஒரு நாள் பெயருக்கு 18 கிலோ கொழுந்தே பறிக்கவேண்டும். அந்த அளவை 20 கிலோவாக அதிகரிப்பதற்கு கம்பனிகள் முயற்சித்துவருகின்றன. தொழிலாளர்களையும் வற்புறுத்துகின்றன.

நீதிமன்ற தீர்ப்பு வெளியான பின்னர் மேலதிக கொழுந்துக்கான கொடுப்பனவு குறித்து முடிவு எடுக்கப்படும் என தோட்டக்கம்பனிகள் கூறின. இன்று மாறுபட்ட கருத்தை முன்வைத்துவருகின்றன. 20 கிலோ கொழுந்தை பறிக்குமாறு தொழிலாளர்களை கம்பனிகள் நிர்ப்பந்தித்துவருகின்றன. இதனால் மக்களும் குழம்பிபோயுள்ளனர். அடுத்த மாதம் 5 ஆம் திகதி நீதிமன்ற தீர்ப்பு வெளிவரவுள்ளது. அதன்பின்னர் நாம் அடுத்தக்கட்ட நடவடிக்கையை எடுப்போம்.

தற்போது எடுக்கப்படும் 18 கிலோவுக்கு மேல் கொழுந்து பறிக்கவேண்டாம் என தொழிலாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். தொழிலாளர்களுக்காக அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைய வேண்டும்." என்றார்.

# எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை இரத்தொட்டை பொலிஸ் பிரிவில் ரத்வத்த பொலிஸ் பிரிவில் எரிந்த நிலையில் பெண்ணொருவரின் சடலமொன்று நேற்றுமுன்தினம் (22) இரத்தொட்டை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

உடற்பாகங்கள் எரிந்த நிலையில் சடலமொன்று ரத்வத்த தொம்பகொட பகுதியில் காணப்படுவதாக பொது மக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலொன்றின் அடிப்படையில் சடலத்தை பொலிஸார் அங்கு சென்று மீட்டனர்.

மீட்கப்பட்ட சடலத்தின் தலை மற்றும் உடற்பாகங்கள் சிலவற்றில் தீக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக இரத்தொட்டைபொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் 10 வீதி விபத்து மரணங்கள்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 17 பொலிஸ் பிரிவுகளிலும் கடந்த ஒருமாத காலத்துக்குள் 10 வீதி விபத்து மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

அதற்கிணங்க கடந்த மார்ச் மாதம் 9 வீதி விபத்து மரணங்களும் ஏப்ரல் மாதத்தில் ஒரு வீதி மரணமும் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக இரத்தினபுரி வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 13 ஆம் திகதி இரத்தினபுரி பதுல்பான என்ற இடத்தில் வீதியைக் கடக்க முயற்சித்த வயோதிப பெண்மணியொருவர் மோட்டார் சைக்கிளில் மோதி பரிதாபமாக மரணித்துள்ளார். வாகனச் சாரதிகள், பாதசாரிகளினது கவனயீனம், சாரதிகளின் அலட்சியம் போன்ற காரணங்கள் இத்தகைய திடீர் விபத்துகளுக்கு காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் நல்லத்தம்பி நெடுஞ்செழியனின் முதலாவது சிரார்த்த தினம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

ஊடகத்துறையில் தனக்கென ஒரு தனி முத்திரை பதித்து வாழ்நாள் முழுவதும் ஊடகத்துறைக்கு தன்னை அர்ப்பணித்த உன்னதமான ஊடகவியலாளர் நல்லத்தம்பி நெடுஞ்செழியனின் முதலாவது சிரார்த்த தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

சிறுவயது முதலே இலக்கியம், எழுத்துத் துறையிலும்,சமூக செயற்பாட்டிலும் ஈடுபாடு அதிகம் காட்டினார். மலையக மக்கள் முன்னணியிலும், சிறிது காலம் முழு நேர ஊழியராக செயற்பட்டார். அதனை தொடர்ந்து தனது ஊடக பயணத்தை தினபதி மற்றும் சிந்தாமணியின் ஊடாக ஆரம்பித்தார்.

தினபதி பத்திரிகையின் தலவாக்கலை நிருபராக தனது ஊடக பணியை தொடங்கினார். பின்னர் லேக்ஹவுஸ் பத்திரிகையின் வெளியீடான தினகரன் பத்திரிகையின் தலவாக்கலை நிருபராகவும் இருந்துள்ளார்.



சுமார் 4 வருடங்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப் பிரிவில் கடமையாற்றியுள்ளார். அதன்பின்னர் இவர் சக்தி ஊடக நிறுவனத்தின் செய்தி ஆசிரியராக ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக பணியாற்றினார். பின்பு வீரகேசரி நிறுவனத்தின் வாரவெளியீட்டுப் பிரிவின் மலையக பகுதிக்கு பொறுப்பாசிரியராக இருந்தார். அதனை தொடர்ந்து சூரியகாந்தி பத்திரிகைக்கு பொறுப்பாக ஹற்றன் கிளை காரியாலயத்தில் கடமையாற்றி வந்தார். 2018 ஆம் ஆண்டு ஹற்றன் டி.கே.டபள்யு மண்டபத்தில் நடைப்பெற்ற மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் நல்லத்தம்பி நெடுஞ்செழியனுக்கு சாகித்திய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதேபோல் மலையக அபிவிருத்தி மன்றத்தின் ஆண்டு விழாவிலும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மலையகத்தை நேசிக்கும் ஒவ்வொரு மனிதனின் நெஞ்சத்தில் மறைந்த நல்லத்தம்பி நெடுஞ்செழியன் வாழ்ந்துக் கொண்டே இருப்பார்.

# 'குன்றிலிருந்து கோட்டைக்கு' நூல் அறிமுகவிழா

பதுளை மாவட்ட கலை, இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்திருந்த மலையகத்தின் மூத்த கல்விமான் எம். வாமதேவன் எழுதிய குன்றிலிருந்து கோட்டைக்கு' நூல் அறிமுகவிழா பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (25) முற்பகல் 10.00மணிக்கு நடைபெறவுள்ளது.

சரஸ்வதி அதிபரும் பதுளை மாவட்ட கலை இலக்கிய வட்டத்தின் உபதலைவருமான கே. திருலோகசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் ஊவா பல்கலைக்கழக முதுநிலைவிரிவுரையாளரும், பொதுசன நிர்வாகத்துறை தலைவருமான மார்கண்டன் ரூபவதனன் நூல் ஆய்வுரையை ஆற்றவுள்ளார்.

கருத்துரைகளை பண்டாரவளை மாநகரசபை ஆணையாளர் த. கஜேந்திரகுமார், பண்டாரவளை வலயக்கல் விக்காரியாலய ஆசிரிய ஆலோசகர் என். மனோகரன், ஹாலிஎல தமிழ்வித்தியாலய ஆசிரியை இரா. சுகந்தினி ஆகியோர் நிகழ்த்துவர்.

# கிழக்கின் குரல்



# இன, மத, மொழி பேதம் பார்ப்பவர்களால் மனித சமூகத்திற்கு சேவையாற்ற முடியாது

### கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் தௌபீக்

**அம்பாறை மாவட்ட குறுப் நிருபர்**



இனவாதம், மதவாதம் மற்றும் மொழிவாதத்தை முன்னுரிமைப்படுத்தி சேவையாற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் மனித சமூகத்திற்கு சேவையாற்ற முடியாது என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தௌபீக் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் வியாழக்கிழமை (22) நடாத்திய பிரியாவிடை மற்றும் வரவேற்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணம் பல்லின மக்களும் இரண்டறக் கலந்து வாழும் ஒரு மாகாணமாகும். இம்மாகாணத்தில் சேவையாற்றுவது மிகவும் சவால் மிக்கதொரு பணியாகும். ஏதாவது ஒரு இனத்தை சேர்ந்தவருக்கு நாம் உதவி செய்தால் அதனை மற்ற இனத்தவர் விமர்சிக்கும் ஒரு கலாசாரம் மிகையாகக் காணப்படும் ஒரு பிரதேத்தில் கடமையாற்ற கிடைத்தமையினை நான் மனதார ஏற்றுக் கொள்கின்றேன்.

ஏனெனில் சவால் மிக்கதொரு பிரதேசத்தில் கடமை புரிவதென்பது சிறந்த அனுபவத்தினை எமக்குள் உருவாக்கும். நான் ஒவ்வொருவரையும் ஒரு மனிதனாகவே பார்க்கிறேன். இறைவன் படைத்த படைப்புக்களுக்கு பணிபுரியவே நாம் பொறுப்பான பணிகளுக்கு நியமிக்கப்படுகின்றோம். எனது பணியும் மனிதம் நோக்கியதாகவே அமையும்.

நான் கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு, றாகம மற்றும் வெலிசற போன்ற பிரதேசங்களில் பல வருடங்கள் சேவையாற்றியுள்ளதோடு எனது 33 வருட சேவைக் காலத்தில் பெரும் பகுதினை மேல் மாகாணத்தில் சேவையாற்றியுள்ளேன். இந்த மாகாணம் நான் பிறந்த மாகாணம். எனது சேவைக்காலத்தின் இறுதிக் காலப்பகுதியிலாவது இங்கு பணியாற்ற கிடைத்தமை இறைவனின் நியதியாகும். இந்த மாகாணத்திற்கு என்னால் முடிந்தளவு சேவையினை வழங்க தயாராகவுள்ளேன்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் ஜீ. சுகுணன் தலைமையில் நடாத்தப்படும் இந்நிகழ்வு எனக்கு மகிழ்ச்சியினை தருகின்றது. இதற்காக அர்ப்பணிப்பு நல்கிய அனைத்து சுகாதார அதிகாரிகள், ஊழியர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் ஒரு சிறந்த துடிப்புள்ள இறுக்கமான நிர்வாகியாக தனது கடமையினை கடந்த ஒரு வருட காலம் இப்பிரதேசத்திற்கு வழங்கியதன் மூலம் இப்பிராந்தியம் உட்பட இம்மாகாணம் கொரோனாவின் கோரப்பிடியிலிருந்து பாதுகாத்துக் கொண்டது எனலாம். வைத்தியர் அழகைய்யா லதாகரன் பல சவால்களை வெற்றிகரமாக வெற்றி கொண்டவர். அவரது எதிர்காலம் சிறக்க வாழ்த்துகிறேன் என தெரிவித்தார்.

# கந்தளாயில் ஒன்பது பேருக்கு கொரோனா தொற்று உறுதி

**கந்தளாய் தினகரன் நிருபர்**

கந்தளாயில் வங்கி ஊழியர்கள் உட்பட ஒன்பது பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் வியாழக்கிழமை (22) மாலை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் மூலமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொவிட்டுக்கு பொறுப்பான வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதைவேளை அனைத்து வங்கி ஊழியர்களுக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தவர்களை சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்த உள்ளதாகவும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கந்தளாய்பேராறு பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், தொடர்ச்சியாகத் திருகோணமலை மாவட்டத்தில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திருகோணமலை சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

# பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி செயலமர்வு

**மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான இயலளவு விருத்தி தொடர்பான பயிற்சி செயலமர்வின் இரண்டாம் கட்ட செயலமர்வானது நேற்று (23) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவினால் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பதவி நிலை உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் சமகால போக்கு எனும் முழு நாள் பயிற்சி செயலமர்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இச் செயலமர்வில் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், நிருவாக உத்தியோத்தர்கள், மேலதிக மாவட்ட பதிவாளர்கள் அடங்கலாக மேலும் பல பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவியில் 17 வேலைத் திட்டங்கள் நிறைவேற்றம்

### கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மணிவண்ணன்

**புளியந்தீவு குறுப் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் உலக வங்கியின் 93 மில். ரூபா நிதி உதவியில் மக்களின் தேவைகளை முதன்மைப்படுத்திய 17 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சிச் சபைகளின் வேலைத்திட்டங்கள் பற்றிய மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பு உள்ளூராட்சி வளநிலையத்தில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பிரசாத் தலைமையில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் பிரதம கணக்காளர் ஏ.உதயராஜன் மற்றும் இம் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும், செயலாளர்களும் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் எஸ்.ராஜகோபாலசிங்கம் இதில் கலந்து கொண்டு திட்டங்களின் செலவினங்களை நெறிப்படுத்தினார்.

இங்கு தொடர்ந்து உரை நிகழ்த்திய உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சிச் சபைகள் தமது பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் வேலைத்திட்டங்களை தேர்ந்தெடுப்பது மிகவும் பிரதானமானது. செலவிடும் நிதிக்கும், அதனால் வழங்கப்படும் நன்மைகளுக்கும் இடையில் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.

திட்டங்களின் தெரிவு பொருத்தமானது என்பதற்கு அவை சான்றுபகிர வேண்டும். பல கட்டடங்களை மில்லியன் கணக்கில் செலவு செய்து அவை பிரயோசனமற்று கிடப்பதை நடைமுறையில் காண்கிறோம். அப்படியொரு நிலைமையை உள்ளூராட்சிச் சபைகள் எதிர்காலத்தில் ஏற்படுத்திவிடக் கூடாது.

இவைபற்றிய சுற்று நிருபங்கள் எம்மால் அனுப்பபட்டுள்ளன அவைகளை கவனத்தில் எடுக்க வேண்டும் என்றார்.

# திருமலையில் கொரோனா அச்சம்: இரு பாடசாலைகளுக்கு பூட்டு

### திருமலை மாவட்ட பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**(ரொட்டவெவ குறுப் நிருபர்)**



திருகோணமலையிலுள்ள இரு பாடசாலைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து, பாடசாலை மூடப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி. பிரேமானந்த் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 மணி நேரத்தில் 46 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறு அவர் மக்களை வலியுறுத்தியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, திருகோணமலையில் கடந்த ஒரு மாத காலப்பகுதியில், அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாதத்தில் மாத்திரம் இதுவரை 310 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக உப்புவெளி மற்றும் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்திலுள்ள 2 பாடசாலைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகையினால் அப்பாடசாலைகளில் மாணவர்களது வருகை குறைவாக காணப்படுவதால், குறித்த பாடசாலை நிர்வாகத்தினரால் மூடப்பட்டுள்ளது.

தொற்றாளர்களுடன் தொடர்பை பேணியவர்களுக்கு அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

விபத்துக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காத்தான்குடியைச் சேர்ந்த நபர் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை (22) உயிரிழந்துள்ளார்.

கர்பலா பிரதேசத்தில் வசிக்கும் முகம்மட் சிறாஜ் (49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 13.04.2021 அன்று கரடியனாறு பிரதேசத்தில் குடும்பத்துடன் (மனைவி, இரண்டு குழந்தைகள்) முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவர் கர்பலா ஜாமிஉல் மனார் ஜும்ஆ பள்ளிவாசலின் முன்னாள் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆரையம்பதியில் இடம்பெற்ற இளைஞர் யுவதிகளுக்கான பிரதேச தொழிற்சந்தை



**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்**

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கான நேர்முகப் பரீட்சையினூடாக வேலை வாய்ப்பினையும், பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்குமான பிரதேச தொழிற்சந்தை வியாழக்கிழமை (22) நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.நமசிவாயம் சத்தியானந்தியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ஜீ.சிவாணி தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வினை, உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. எஸ்.லோகினி கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

இதன்போது தொழிற் சந்தையில் பல்வேறு தொழில் வழங்குனர்கள் கலந்துகொண்டதுடன், அதிகளவிலான இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடுகள் ஆரம்பம்



**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

ரமழானுக்காக கல்முனை வலய முஸ்லிம் பாடசாலைகள் மூடியிருக்கும் நிலையில் கடந்த வியாழக்கிழமை முதல் தமிழ் பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீடுகள் ஆரம்பமாகியுள்ளன.

நிந்தவூர் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் ஆரம்பமான முதல்நாள் மதிப்பீட்டில் கல்வி முகாமைத்துவத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எச்.பௌஸ் தலைமை தாங்கினார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், மதிப்பீட்டில் பாடசாலை கற்றல், கற்பித்தல், நிர்வாகம், முகாமைத்துவம் முகாமைத்துவ பண்புசார் விருத்தி தொடர்பில் மேற்பார்வையில் ஈடுபட்டு பாடசாலைக்கான உயர் பண்புசார் புள்ளியையும் வழங்கினர்.

கொவிட் 19 பின் இழந்த கல்வியை மீட்டெடுக்கவும் இணைப்பாடவிதான செயல்பாடுகளுக்கு புத்துயிரழிக்கவும், வெளிவாரி மதிப்பீடுகள் ஆக்கபூர்வமாக இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# முகக்கவசம் அணியாதோருக்கு அன்டிஜன் பரிசோதனை



**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

கிண்ணியாவில் முகக் கவசம் அணியாதவர்களை கைது செய்து அவர்களுக்கான அன்டிஜன் பரிசோதனை நடத்தும் நிகழ்வு நேற்று (23) இடம் பெற்றது.

கிண்ணியா மாவட்ட சுகாதார வைத்திய அலுவலகமும் மற்றும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து அவர்களை கைது செய்து அன்டிஜன் பரிசோதனையை கிண்ணியா மீன் சந்தைக்கு அருகாமையில் நடத்தினார்.

முதற்கட்டமாக நேற்று 30க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்காரன அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

# வீதிகளில் மாணவிகளுக்கு தொந்தரவு செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

**(ஒலுவில் விசேட நிருபர்)**

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுக்கு வீதிகளில் தொந்தரவு செய்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, திருக்கோவில் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

திருக்கோவில்,தம்பட்டை மற்றும் விநாயகபுரம் ஆகிய பிரதேச பாடசாலைகளில் குறிப்பாக பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரங்களில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் மாணவிகளுக்குப் பின்னால் கூட்டமாகச் சென்று தொந்தரவு செய்வதோடு, தொலைபேசியில் புகைப்படம் எடுப்பதாகவும் பெற்றோர்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனால் பெண் மாணவிகள் பல்வேறு அசௌகரிங்களை எதிர்கொள்வதோடு சில மாணவிகள் இடைநடுவில் கல்வியை கைவிட்டுள்ளதாக சுட்டிக்காட்டபட்டுள்ளது. குறித்த பெண் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களில் குறிப்பாக உள் வீதிகளில், பாடசாலை ஆரம்பிக்கும் முடிவடையும் நேரங்களில் விசேட போக்குவரத்து பொலிஸாரை சிவில் உடையில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.






## யாழ். பல்கலை முள்ளிவாய்க்கால் நினைவு தூபி

# மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்பட்டு திறப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் உடைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தூபி மீண்டும் அதே இடத்தில் அமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த ஜனவரி மாதம் 8ம் தேதி இரவு, பல்கலைக்கழக நிர்வாகத்தினால் உடைக்கப்பட்டது. இதையடுத்து மாணவர்கள், தமிழ் உணர்வாளர்கள் அரசியல் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டதோடு பல்கலை. மாணவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் குதித்தனர்.

மாணவர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து மீண்டும் நினைவுத் தூபியை அதே இடத்தில் அமைப்பதற்கு முன்வந்த பல்கலை நிர்வாகம் கடந்த ஜனவரி 11ஆம் திகதி காலை துணைவேந்தரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையில் நினைவுத் தூபி கட்டுமானம் நிறைவுக்கு வந்த நிலையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அதேவேளை இன்று (நேற்று) தூபி திறந்து வைக்கப்படவிருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு துணைவேந்தர் மாரடைப்பு காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தொடர்ந்து வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் ஒருவர் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் 42 வயதுடைய நபர் ஒருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) நேற்று முன்தினம் (22) கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் பெயரில் அடையாள அட்டை மற்றும் போலியான கடவுச்சீட்டுக்களை தயாரித்து நபர்களை வெளிநாடுக்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்தே இந் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவுப் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் விழா;

## சுகாதார கட்டுப்பாடுகள் தீவிரம்; வெளி மாவட்டத்தவர்களுக்கு தடை

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாக பொங்கல் நிகழ்வு தொடர்பான முன்னாயத்த கூட்டம் மாவட்ட செயலத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சிவகணேசன் மற்றும் தொற்று நோயியல் தடுப்புவைத்திய அதிகாரி வி.விஜிதரன், படை அதிகாரிகள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயம் மற்றும் வற்றாப்பளை ஆலய நிர்வாகத்தினர், பொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவர்கள், பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலய பொங்கல் விழாவிற்கு ஒரு மாத காலம் இருப்பதனால் அத்தியாவசிய முடிவுகள் எட்டப்பட்டதுடன் மேலும் இரு வாரங்களினுள் அடுத்த கலந்துரையாடலில் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆராயப்படவுள்ளது. பொது சுகாதார நடைமுறைகளுடன் நடாத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் காவடி எடுத்தல் முதலான நேர்த்திக் கடன்கள் தற்போதைய நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது.

அடியவர்கள் ஆலய வழிபாட்டிற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டு தேவையற்ற விதத்தில் ஒன்று கூடுதல்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் கருத்து தெரிவிக்கையில்,

பக்தர்களை மட்டுப்படுத்தும் ரீதியில் நேர்த்திக்கடன், காவடி எடுப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. வீதி கடைத்தொகுதிகள் தடைசெய்யப்பட்டுள்ளன, சுகாதார ஆலோசனைக்கு அமைவாக முகக் கவசம் இல்லாமல் கோவிலுக்குள் வருபவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்களை பதிவு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாகவும் தீர்மானித்துள்ளோம்.

# காக்கைதீவு மீன் சந்தையில் வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணம் இரு மடங்காக அதிகரிப்பு

**மானிப்பாய் தினகரன் நிருபர்**

## 'கூடுதலான கட்டணம் அறவிடப்படுமானால் சந்தை குத்தகை இரத்து செய்யப்படும்'

காக்கைதீவு மீன் சந்தையில் அறவிடப்படும் வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணத்தை இரு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்று சில உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையை நிராகரித்த தவிசாளர் இவ்விடயம் குறித்து அடுத்த வருடம் ஆராயலாம் என்றும் ஒப்பந்தத்தை மீறி கூடுதலான கட்டணம் அறவிடப்படுமானால் சந்தை குத்தகையை இரத்து செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் காக்கைதீவு இறங்குதுறையில் இயங்கும் பகல் நேர மீன் சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணத்தை இரு மடங்காக அறவிட்டு வருகின்றார்.

இச் செயற்பாடு குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்தது மட்டுமல்லாமல் பிரதேச சபை உறுப்பினர்களும் மாதாந்த கூட்டங்களில் சுட்டிக்காட்டியதுடன் சந்தை குத்தகைக்காரர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறவிடப்படும் பாதுகாப்பு கட்டணம் பற்றி சந்தையில் விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் தவிசாளரிடம் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் 28 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் சபையில் 8 உறுப்பினர்கள் இணைந்து வாகனங்களுக்கான பாதுகாப்பு கட்டணத்தை இரு மடங்காக அதிகரிக்க வேண்டும் என்று எழுத்து மூலம் கோரியிருந்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த உப தவிசாளர் ஆ.சி.கணேசவேல்,..

பாதுகாப்பு கட்டணம் இரு மடங்காக அதிகரிக்குமானால் பொதுமக்கள் பாதிக்கப்படுவர் என்பதுடன் ஏனைய சந்தைகளும் இதனை பின்பற்ற வேண்டிய நிலை வரலாம் என்றார்.

பாதுகாப்பு கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற உறுப்பினர்களின் கோரிக்கையை பரிசீலித்த தவிசாளர் இது தொடர்பில் அடுத்த வருடம் ஆராயலாம் என்றும் ஒப்பந்தத்திற்கு மாறாக அதிகரித்த கட்டணம் அறவிடப்படுமானால் சந்தை குத்தகையை இரத்து செய்ய வேண்டிய நிலை வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸார் துரத்திச் சென்ற டிப்பர் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்து

## ஆசிரியை வைத்தியசாலையில் அனுமதி, பொலிஸார் பாராமுகம்

**யாழ். விசேட நிருபர்**

பொலிஸார் துரத்திச் சென்ற டிப்பர் வாகனம் ஆசிரியை ஒருவரை மோதி தள்ளிக்கொண்டு தப்பி சென்ற போதிலும், விபத்துக்குள்ளான ஆசிரியையை மீட்காது பொலிஸாரும் அவ்விடத்திலிருந்து தப்பி சென்ற சம்பவம் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சி திக்கம் பகுதியில் கடந்த 21ஆம் திகதி மாலை 4 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த CCTVயில் சம்பவம் முழுமையாக பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சப்ரகமுவ மாகாண பதிவில் உள்ள LM 5114 எனும் இலக்கமுடைய டிப்பர் வாகனம் பொலிஸாரின் கட்டளையை மீறி சென்ற போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் மூன்று பொலிஸார் (இருவர் சீருடை) அதனை துரத்தி சென்றுள்ளனர்.

அதன் போது டிப்பர் சாரதி வாகனத்தை திக்கம் பகுதியில் உள்ள சிறிய வீதிகளின் ஊடாக மிக வேகமாக ஓட்டி தப்பி சென்றுள்ளார்.அவ்வாறு தப்பி செல்லும் போது சிறிய வீதி வளைவில் வாகனத்தை திருப்பும் போது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த ஆசிரியையை மோதி தள்ளியுள்ளார்.

டிப்பர் வாகனத்தை துரத்தி வந்த பொலிஸார் விபத்துக்குள்ளான ஆசிரியையை மீட்காது, தொடர்ந்தும் டிப்பர் வாகனத்தை துரத்தி சென்றுள்ளனர். அதனால் வாகன சாரதி வேகமாக வாகனத்தை ஓட்டி சென்றுள்ளார்.

விபத்துக்குள்ளான ஆசிரியையை அப்பகுதியைச் சேர்ந்த மக்களே மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக ஆசிரியை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை விபத்து நடைபெற்ற இடத்திற்கு இரண்டு நாட்கள் கடந்த நிலையிலும் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவில்லை எனவும்,விபத்துக்குள்ளான ஆசிரியையின் மோட்டார் சைக்கிள் விபத்து நடைபெற்ற பகுதியிலுள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தப்பியோடிய டிப்பர் வாகனத்தை இரண்டு நாட்கள் கடந்த நிலையிலும் பொலிஸார் மீட்கவில்லை என்றும், சாரதி தப்பித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தை புனரமைக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தினை புனரமைத்து சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், அதனை புனரமைப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அப்போதைய வடக்கு ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரின் முயற்சியினால், நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இயங்கிய 'நாளைய இளைஞர்கள்' அமைப்பின் நிதிப் பங்களிப்பில் குறித்த நீச்சல் தடாகம் உருவாக்கப்பட்டது.



சுமார் இருபது மில்லியன் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக 2013 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்ட நீச்சல் தடாகம், ஆட்சி மாற்றங்களை தொடர்ந்து சீராக பராமரிக்கப்படாமல் காணப்படுகின்றது.

இது தொடர்பாக, சமூக ஆர்வலர்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், அமைச்சரினால் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மேலும் பதினாறு பேருக்கு கொரோனா தொற்று

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம் என்பவற்றில் 396 பேரின் மாதிரிகள் நேற்று முன்தினம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன அதில் 16 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், (4 பேரும் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள்) யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 5 பேரும்,யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட மூவருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும் (அவர்களில் இருவர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள், ஒருவர் அரச திணைக்களம் ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கைதடியைச் சேர்ந்தவர்) கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் என 16 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# வவுனியாவில் அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் டக்ளஸூடன் கலந்துரையாடல்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தலைமையில் கடற்றொழில் அமைச்சிற்கு வருகை தந்த வவுனியா மாவட்ட ஈ.பி.டி.பி. கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.



இச் சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது வவுனியாவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள கட்சி மாநாடு தொடர்பாகவும், மாவட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டியவேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா சமூகத்தில் 12 புதிய தொற்றாளர்கள்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் 12 பேருக்கு கோரோனா தொற்று இருப்பது நேற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா கற்பகபுரம் பகுதியில் இரு குடும்பங்களை சேர்ந்த 9 பேருக்கும், சிறைச்சாலையில் ஒருவருக்கும், யாழில் இருந்து வருகைதந்த 2 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


சித்திரை வருடப்பிறப்பினை கொண்டாடுவதற்காக திருகோணமலையில் இருந்து வவுனியா கற்பகபுரத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு வருகைதந்த நபர் ஒருவருக்கு, திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் வருகை தந்த வவுனியா கற்பகபுரம் பகுதியில் உள்ள சிலருக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தது. அதன் முடிவுகள் நேற்று கிடைக்கப்பெற்றது.

கலைக் கதம்பம்

## "தோள் தோள் காதலர் பிரிக்கும் வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே"

# புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுளில் புனைந்து காட்டும் குறுந்தொகையின் சிறப்பு



எட்டுத்தொகை நூல்களுள் செறிவும் இனிமையும் மிக்கது குறுந்தொகை. ''புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுட்களில் புனைந்து காட்டும் ஆற்றலினும் அகத்தே தோன்றும் கருத்துக்களை உணர்ச்சியும் மெய்ப்பாடும் புலப்பட உரைக்கும் ஆற்றல் சிறந்தது" என்று குறுந்தொகையின் சிறப்பினை எடுத்துரைக்கிறார் உ.வே. சாமிநாதர்.

அகமனப் புரிதல்களுக்கு இடமளிக்கும் பாடல்கள் பலவற்றைக் கொண்டது குறுந்தொகையாகும். இக் குறுந்தொகையில் இருபத்தோரு பெண்பாற் புலவர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் எழுதிய குறுந்தொகைப்பாடல்கள் மொத்தம் எழுபத்தைந்து என்ற அளவினை எட்டுகிறது.

குறுந்தொகை அகம் சார்ந்த பாடல்களின் தொகுப்பாகும். இவ் வகப்பாடல்களில் செவ்விய நிலையில் காதல் வெளிப்படுத்தப்பெற்றுள்ளது. செவ்விய நிலைக் காதல் என்பது ஒருவகையில் பெண்களுக்கு தடைப்படுத்தும் நிலையையும் தருகின்றது. மற்றொரு வகையில் அதுவே விடுதலையையும் தருவதாக உள்ளது.

பெண்கள் தாங்களாகவே காதல் இன்பத்தில் ஈடுபடுதல், அல்லது ஆடவரால் வீழ்த்தப்படுதல் என்ற நிலைகளில் திருமணம் என்ற எல்லைக்குச் சென்று குடும்பம், பிள்ளை, இல்லறம் என்ற பிணைப்பு நிலைக்கு ஆளாகின்றனர். அதே நேரத்தில் காதலித்ததன் காரணமாக சிலவகை உரிமைகளையும் பெண்கள் பெறத் தகுதி உடையவர்களாக உள்ளனர்.

தானே தேர்ந்து கொண்ட கணவன் அல்லது காதலன் என்ற அடிப்படையில் ஆண்களிடத்தில் அவர்கள் தனக்கு வேண்டுவனவற்றை, அல்லது தான் விரும்புவனவற்றைப் பெற்றுக்கொள்ளும் உரிமை பெற்றவர்களாக விளங்குகின்றனர். இதில் கட்டுண்ட நிலை, அல்லது விடுதலை நிலை என்ற நிலைப்பாட்டில் ஏதேனும் ஒன்றைப் பெண்கள் தங்களுக்கு ஏற்ற நிலையில் அமைத்துக் கொள்ளத்தக்கவர்களாக ஆகின்றனர்.

விரும்பி மணந்த காதலன் தன்னுடன் உடன் உறைந்து, தன்னையும் வளப்படுத்தி அவனையும் வளப்படுத்தி வாழும் வாழ்க்கை பெற்ற தலைவியர் மகிழ்ச்சியான வாழ்க்கை பெற்றவர்களாகின்றனர். இவ்வுரிமை நிலையைப் பெறாதவர்கள் துன்ப வாழ்க்கை வாழ வேண்டியவர்களாகின்றனர்.

செவ்விய நிலைக் காதல் என்பது உரிமைகள் பலவற்றை வழங்குவது என்று பெண்ணியவாதிகள் கருத்துரைத்துள்ளனர்.

''தகர்க்க இயலாத சமுதாயச் சுமைகளை உடைக்கும் தன்மை வல்லமை பெற்றது செவ்விய காதல். பெண்கள் சமத்துவ வாழ்வைப் பெறவும், விடுதலை மிக்க வாழ்வைப் பெறவும், அதிகாரத்தைப் பெறவும் காதல் வழி வகுப்பதாக பெண்ணியத் தத்துவவாதிகளும், சமுதாயவியல் அறிஞர்களும் கருதுகிறார்கள். இதுவே உண்மையுமாகும். செவ்விய நிலைக் காதல் என்பது பெண்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பெறக் குறிக்கத்தக்கப் புள்ளியாகும். இந்நிலையானது பெண்களைப் பேரிழப்பு, நரகம், தியாகம் போன்றவற்றில் இருந்து விடுவிக்கிறது.

செவ்விய காதல் என்பது பெண்கள் உரிமை பெறுவதற்கான வழிவகைகளுள் ஒன்று என்பது தற்போதைய பெண்ணியவாதிகளின் கருத்தாகின்றது.

இவ்வகையில் செவ்விய காதல் என்பது உரிமையின் வாசல் எனப் பெண்ணியவாதிகள் கருதுவதை ஏற்கமுடிகின்றது.

இக்கருத்துகளை அடியொற்றிக் குறுந்தொகையில் பெண்பாற்புலவர்களின் பாடல்களை நோக்கும்போது, உரிமை பெறும் இன்பத்தையும் காணமுடிகிறது. உரிமை மறுக்கப்படும் துன்பத்தையும் காணமுடிகிறது.

தலைவனும் தலைவியும் காதலித்து மணம் புரிந்து வாழ்கின்றபோது பல உரிமைகளைத் தலைவிக்குத் தலைவன் நல்கி வாழும் வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை ஆகின்றது. ஆனால் இவ் வெற்றிகரமான வாழ்க்கை மிகக் குறைந்த நிலைப்பாடு உடையனவாகவே குறுந்தொகைச் சூழலில் உள்ளன. தேடிக்கண்டு பிடிக்க வேண்டிய நிலையில் அவை உள்ளன.

தலைவன் தலைவியை விட்டுப் பிரிகிறான். நீண்ட நாள்கள் ஆகியும் அவன் வந்து சேரவில்லை. தோழி தலைவனின் வாரா இயல்பை எண்ணிக் கவலை கொள்கிறாள். அந்நேரத்தில் தலைவி ''தலைவர் தனக்குத் தந்தையும் தாயும் போன்ற இயல்பினை உடையவன். அவன் நிச்சயம் நம்மை நாடி வருவார்" என்று கூறித் தோழியைத் தேற்றுகிறாள்.

தன்னுடைய தந்தை, தாய் ஆகியோரை ஒரு நாள் பொழுதில் மறந்துவிட்டுத் தலைவனுடன் இல்லறத்தைத் தொடங்குகிறாள் தலைவி. தந்தை, தாய் ஆகியோர் இருந்தால் எவ்வாறு தலைவியை வருத்தப்படாமல் காப்பார்களோ அதுபோல இனித் தலைவன் தலைவியைத் தாங்கவேண்டும். தந்தையையும், தாயையும் தன் அன்பால், தன் அரவணைப்பால் சமப்படுத்த வேண்டும். இதனைச் செய்யும் தலைவன் வெற்றி பெறுகிறான். தலைவி மகிழ்ச்சியடைகிறாள்.

**''நம் நலம் தொலைய நலம்**
**மிகச் சாஅய்**
**இன்உயிர் கழியினும் உரையல்**
**அவர் நமக்கு**
**அன்னையும் அத்தனும் அல்லரோ**
**புலவி அஃது எவனோ**
**அன்பிலங்கடையே"**

என்ற பாடலில் அன்பின் காரணமாகவே புலவி தோன்றுகிறது என்று தலைவி பேசுகிறாள்.இருப்பினும் தலைவன் வராத குறை இங்கு இருக்கத்தான் செய்கிறது.

அள்ளூர் நன்முல்லையாரின் பாடல் ஒன்றில் தலைவி தலைவனுடன் இணைந்து இருக்கும் இரவுப் பொழுது கழிய மெல்ல வைகறை வந்து விடுகிறது.

அவ் வைகறை வாள் போல் தோன்றி இருவரையும் பிரித்தது என்று தலைவி எண்ணுகிறாள்.

**''குக்கூ என்றது கோழி.**
**அதன் எதிர்**
**துட்கென்றது என் தூஉ நெஞ்சம்**
**தோள் தோய் காதலர் பிரிக்கும்**
**வாள் போல் வைகறை**
**வந்தன்றால் எனவே"**

இப்பாடலில் தோள் தோய் காதலர் என்பது தலைவன் தலைவியின் நெருக்கத்தைக் காட்டும் பகுதியாகும்.

வாள் என்பது இருவரின் இணைவைப் பிரிக்கும் வைகறையாகின்றது. இரவு முழுவதும் தலைவனும் தலைவியும் மகிழ்ந்து இருந்தனர் என்பதை இப்பாடல் காட்டுகிறது. இப்பாடலைத் தலைவியின் பூப்புடன் தொடர்புபடுத்தி உரையாசிரியர்கள் உரை காணுகின்றனர்.

அதற்கான எக்குறிப்பும் இல்லாத நிலையில் இந்தப்பாடல் அந்த உள் கருத்து உடையது என்று வலிந்து நோக்க இயலவில்லை. தலைவனும் தலைவியும் தோள் தோய்ந்து இன்பம் கொண்டனர் என்பதற்கு இப்பாடல் சான்றாகின்றது.பெண்பாற் புலவர்களின் பாடல்களில் ஓரிரு பாடல்கள் மட்டுமே தலைவனுடன் தலைவி கொண்ட இன்பத்தின் சான்றினைக் காட்டும் பாடல்களாக விளங்குகின்றன. மற்றவை வருத்தமிகுதியைக் காட்டும் பாடல்களாகவே உள்ளன.

எல்.எஸ்...




## இரு நூல்களின் அறிமுகவிழா

நண்பர்கள் வட்டம் நடாத்தும் வி.மைக்கல் கொலினின் 'சிலுவைகளே சிறகுகளாய்' 'வீணையடி நீ எனக்கு' ஆகிய இரு நூல்களின் அறிமுகவிழா ehis திங்கள் பௌர்ணமி தினத்தில் மாலை 5.00 மணிக்கு திருகோணமலை சண்சைன் ஹோட்டலில் ஆய்வாளர் திருமலை நவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டச் செயலாளர க. மகேசன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் நிகழ்வில் சிறப்பதிதிகளாக கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் அருட்பணி அகுஸ்தின் நவரட்ணம், பேராசிரியர் வ. கனகசிங்கம், பாலையூற்று அஷ்ரபா நூர்தீன், மலைமுரசு பத்திரிகை ஆசிரியர் இரா. ஸ்ரீ ஞானேஸ்வரன் ஆகியோரும்

கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கவிதை நூல், நாவல் ஆகியவைகளின் முதல் பிரதியை முறையே திருமதி அன்னலட்சுமி பேரம்பலம், திருமதி ராஜேஸ்வரி ராமநாதன் ஆகியோரும் பெற்றுக்கொள்ள நூல் தொடர்பான விமர்சனத்தை கவிஞர் திருமலை. சி. காண்டீபனும், கவிஞர் லலிதகோபனும் ஆற்றவுள்ளனர்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக புல்லாங்குழல் இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.வரவேற்புரையை கவிஞர். தி.பவித்திரனும் நன்றியுரையை நூலாசிரியர் மகுடம் வி.மைக்கல் கொலினும் ஆற்றவுள்ளனர். (ஸ)

## 'முடக்கத்தான்' கவிதை நூல் தனித்துவமும் முதிர்ச்சியும் மண் வாசனையும் கொண்டது







ஒலுவில் வஹாப்தீனின் நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் செ.யோகராசா

பிரதேச இலக்கியங்கள் சிறுகதை, நாவல்கள் பற்றியே பேசுவதுண்டு அவற்றில்தான் பிரதேச மண் வாசனை அதிகமாக வெளிப்படக்கூடிய இயல்பு காணப்படுகின்றது என பேராசிரியர் செ.யோகராசா தெரிவித்தார்.

ஒலுவில் ஜே.வஹாப்தீன் எழுதிய முடக்கத்தான் கவிதை நூல் வெளியீடும் கவிதை உரை நிகழ்வும் ஒலுவில் கிறீன் வாசலில் மூத்த கவிஞர் சோலைக்கிளி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முடக்கத்தான் நூல் பற்றி பேராசிரியர் செ.யோகராசா, பேராசிரியர் றமீஸ் அப்துல்லா ஆகியோர் உரையாற்றினார்கள்.

கலாநிதி யூ.எம்.மஜீட், கலாநிதி எஸ்.எம். ஐயூப், எழுத்தாளர் எம்.அப்துல் றஸாக், ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். எழுத்தாளர் உமா வரதராஜன், கலாநிதி ஹனிபா இஸ்மாயில் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்ட இந் நிகழ்வில் பேராசிரியர் செ.யோகராசா தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

முடக்கத்தான் கவிதைத் தொகுதி பற்றிய மனப் பதிவுகளை இரண்டு அடிப்படைகளில் பகிர்ந்து கொள்ளமுடியும், .ஒன்று வஹாப்தீன் முன்பு வெளியிட்ட கவிதைத் தொகுப்புகளில் இருந்து இந்தத் தொகுப்பு எந்தஅளவுக்கு வித்தியாசப்படுகின்றது என்பதை கோடிட்டுக் காட்டுதல், இரண்டாவது சமகால ஏனைய கவிதைச் செல்நெறிகளில் இருந்து இந்தக் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் எவ்வாறு வித்தியாசப்படுகின்றன. என்பதைப் பற்றி கூறுவது.

வஹாப்தீனுடைய ஆறாவது கவிதைத் தொகுப்பு இது..அவரது முதலாவது கவிதைத் தொகுப்பு வேரில்லா பூச்சியங்கள் வழமைபோல ஏனைய கவிஞர்களுடைய முதல் தொகுப்பைப் போல பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இளங்கவிஞனின் முதல் தொகுப்புக்குரிய சிலசில குறைபாடுகளைக் கொண்டதாக வெளிவந்தது. அவருடைய இரண்டாவது கவிதைத் தொகுப்பு அஷ்ரப் எனும் தீ, மூன்றாவது வெட்டுக்கற்கள், குறும்பா கவிதைத் தொகுப்பு, நான்காவது கண்ணாடிக் குளத்தில் என்ற கவிதைத் தொகுப்பு சற்று வித்தியாசமாகவும் கனதியாகவும் வெளிவந்திருக்கின்றது..ஐந்தாவது வெயிலில் ஒரு வீரப்பழம் தொகுப்பில் உள்ள கவிதைகள் பிரதேச மணம் கமளுகின்ற ஒரு கவிதைத் தொகுப்பு.

அவ்வ்வறு அழுத்திக் கூறுவதற்குக் காரணம் பொதுவாக பிரதேச இலக்கியங்கள் சிறுகதை,நாவல்கள் பற்றித்தான் பேசுவதுண்டு. அவற்றில்தான் பிரதேச மண் வாசனை கூடுதலாக வெளிப்படக்கூடிய இயல்பு காணப்படுகின்றது.

ஆனால் கவிதைகளில் பிரதேச மண் வாசனை காணப்படுவதில்லை.அப்படிப்பார்க்கும் போது வெயிலில் ஒருவீரப்பழம் என்ற தொகுப்புதான் முழுமையான நிலையைக் காட்டுகின்றது. அது முதல் முறையாக ஒலுவில் பிரதேச மண்வாசனையின் முழுமையான நிலையை வெளிஉலகத்திற்குக் காட்டுகிறது. அந்த பின்னணியில் தற்போது வெளிவந்துள்ள முடக்கத்தான் கவிதைத் தொகுப்பு வேறு இரு தளங்களிலே முதிர்ச்சிமிக்கதாக வெளிப்படுகின்றது. அந்த வகையில் முடக்கத்தான் கவிதைத் தொகுப்பு பல்வேறு தளங்களிலே வித்தியாசமாக தனித்துவம் மிக்கதாகவும் முதிர்ச்சி மிக்கதாகவும் ஒலுவில் பிரதேசத்திற்கு பெருமை சேர்ப்பதாகவும் ஒருநல்ல கவிஞனை இனங்காட்டுவதாகவும் அமைந்திருக்கின்றது. இந்த தொகுப்பு இரு வேறு தளங்களிலே இயங்குகிறது..ஒன்று நாம் எல்லோரும் அறிந்த கொரோனா வைரசும் அதனால் ஏற்பட்ட பல்வேறு விளைவுகளையும் காட்டுகின்றது..

இன்னொரு பகுதி கொரோனா வைரசைப் போல பயங்கரமான கொடுமையான வைரசாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு பாதிப்புத்தராத வேறு வைரசுகளைப் பற்றிய கவிதைகள் உள்ளடங்கிய பகுதியாக தென்படுகின்றது.

அந்தவகையில் முன்னைய கவிதைத் தொகுப்புகளில் உள்ள கவிதைகளை விட சற்று வித்தியாசப்பட்டதாக பிரமிப்பை ஏற்படுத்துவதாக அது நல்ல வீச்சோடு வெளிப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதக்கது.

பி.எம்.எம்.ஏ.காதர் ...
(படங்கள்; மருதமுனை தினகரன் நிருபர்)

## மணிக்கவிதைகள்



### நேசிக்க மட்டுமே...

உன்னை நேசிக்க
ஆரம்பித்த நிமிடம்
எனக்குத் தெரியாது!
ஆனால் இனி
வாழப்போகும்
நொடிகள் அனைத்தும்
உன்னை நேசிக்க மட்டும்தான்
என்பது தெரியும்!
**- கவிதா**

### கண்ணீரால் மட்டுமே...

பிடித்தவர்களின்
உதாசீனத்தை
வார்த்தைகளால்
விளக்க முடியாது
கண்ணீரால் மட்டுமே
விபரிக்க முடியும்
**- புவனா**

### வலிகள்

சில வலிகளை
வார்த்தையில் விபரித்து
புரிய வைக்க இயலாது!
அதை மீறி புரியவைக்க
முற்படும்போது
வார்த்தைக்கு அங்கே
இடமிருக்காது.
**- பாலு**

### வேஷங்களோடு....

தேடிப்பார்க்கிறேன்
உன்னையும் என்னையும்!
விருப்பமின்றி விலகி
அழுகையை மறைத்து
சிரிப்பதாய் நடித்து
இன்னும் எத்தனை நாட்கள்
வேஷங்களோடும்
வலிகளோடும்
இந்த வாழ்க்கை
தொடருமோ?
**- பாமிஸா**

## இலங்கை முதலீட்டுச் சபை (BOI)

# பெறுகை அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பெறுகைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பானது 2021 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் என்பதுடன் www.investsrilanka.com என்ற முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

**இலங்கை முதலீட்டு சபைக்காக 30 மடிக்கணனிகளின் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான விலைமனுக்களுக்கான அழைப்பு**

**ஒப்பந்த இல.: BOI/ADMN/S&S/Q/59/2021**

இந்த பெறுகை தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணமானது ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.investsrilanka.com) காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரத்திற்கமைவாக செயற்படலாம்.

011 2543041/ 011 2427365 ஆகிய இலக்கங்களினூடாக நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவலை விலைமனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

# MULTI FINANCE PLC

## மீட்கப்படாத தங்க நகைகளுக்கான ஏலவிற்பனை

கீழே குறிக்கப்பட்டுள்ள திகதியில் எமது கிளைகளில் மீட்கப்படாத அடகு நகைகள் விற்பனைக்கான அறிவித்தல் குறித்து அனைத்து தங்க நகைகளும் கீழே குறிக்கப்பட்ட திகதியில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 1.00 மணிவரை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

**2020-04-30 வரை அடகு வைத்து மீட்கப்படாத நகைகள்**

**கிளைகள்: அநுராதபுரம், கம்பஹா, கண்டி, குருநாகல், மரதானை, இரத்தினபுரி, மாத்தறை**
**ஏலத்திலிடும் திகதி : 2021-05-07**

முன்னறிவித்தலின்றி இந்த ஏலத்தினை நிறுத்துவதோ, ஒத்திவைப்பதோ, மீள்அறிவித்தல் அல்லது இடத்தினை மாற்றுவதோ மல்டி பினான்ஸ் பிஎல்சீ நிறுவனத்திற்கு உரிமை உள்ளது.

MULTI FINANCE

முகாமையாளர் (அடகு சேவை)
மல்டி பினான்ஸ் பிஎல்சீ, (அடகு சேவை பிரிவு)
த பெயார்வேஸ்
இல. 100, புத்கமுவ வீதி, ராஜகிரிய,
தொலைபேசி: 011 4645 555

skills

# அறிவித்தல்

## பன்வில பிரதேச சபை - பன்வில

பன்வில பிரதேச சபைக்கு உரித்தான ஹுளுகங்க நகர சந்தை வளாகத்திலுள்ள முதலாம் மாடியின் 05 கடை அறைகளை, குத்தகையாளர்களிடமிருந்து முழுத்தொகையையும் அறவிட்டு நிர்மாணிப்பதற்காக விலைமனுக்கோரப்படுகின்றது.

| கடை அறை இலக்கம் | விஸ்தீரணம் | ஆகக்குறைந்த கேள்வி |
|---|---|---|
| 01 | 14'-16"x10'-11" | 1,470,695.34 |
| 02 | 14'-9"x10'-11" | 1,496,052.16 |
| 03 | 17'-2"x9'-11" | 1,581,039.30 |
| 04 | 14'-9"x10'-11" | 1,496,052.16 |
| 05 | 14'-6"x10'-11" | 1,470,695.34 |

மேற்படி கடை அறைகளை நிர்மாணித்து குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2021.04.27 முதல் 2021.05.19 வரை விலைமனுக் கோரப்படுகின்றது. 2021.04.27 முதல் 2021.05.19 வரை அலுவலக நேரங்களில் (மு.ப.8.30 - பி.ப.4.00) பின்வரும் கட்டணங்களைச் செலுத்தி, வார வேலை நாட்களில் இவ்வலுவலகத்தில் அதற்கான படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட நகல் பிரதிகளுடன் கூடிய விண்ணப்பங்கள், "செயலாளர், பன்வில பிரதேச சபை, பன்வில" என்று தனித்தனியாக முத்திரையிட்டு, 2021.05.19 அன்று மு.ப.10.00 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது சபையின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். விலைமனுத்திறத்தல் 2021.05.19 அன்று மு.ப.10.30 இற்கு நடைபெறுவதுடன், விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடதுபக்க மேல் மூலையில் உரித்தான குத்தகை ஆதனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு, மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு இரண்டு பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுப்படிவக் கட்டணம் - ரூபா 500.00
மீளளிக்கப்படாத வைப்புத்தொகை - ரூபா 3500.00
மீளளிக்கப்படும் வைப்புத்தொகை - ரூபா 5000.00
விசாரணைகள் தொ.பே இல - 0812472028

**செயலாளர்**
**பன்வில பிரதேச சபை**
**பன்வில**

# பெறுகை அறிவித்தல்

## கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத்திணைக்களம்
## தென் மாகாண சபை

## கெகணதுர கால்நடை பண்ணைக்கு கால்நடை உணவு கொள்வனவு செய்தல்

தென் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு உரித்தான கொகணதுர கால்நடை பண்ணைக்கு 2021ஆம் ஆண்டின் ஜுன் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை தேவையான கால்நடை உணவு வகைகளை ஏற்றி இறக்கி விநியோகிப்பதற்கு தென் மாகாண கடற்றொழில் கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக் கோரப்படுகின்றது.

அதன் அடிப்படையில் பின்வரும் கால்நடை உணவு வகைகளை மாதமொன்றிற்கான அளவுகளில் இரண்டு முறைகளில் என்றவாறு கெகணதுர கால்நடை பண்ணைக்கு ஏற்றி இறக்கி வழங்குதல் வேண்டும்.

| மாதம் | மாதமொன்றில் வழங்கப்பட வேண்டிய கால்நடை உணவு வகைகளின் அளவு (கிலோ கிராம்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாட்டு உணவு | மசிக் ஸ்டார்டர் | கா.ஃப் ஸ்டார்டர் | குரோவர் ஃபீட் | லேயர் ஃபீட் | கெல்சயிட் |
| ஜுன் | 3000 | 50 | 50 | 2100 | 8800 | - |
| ஜுலை | 3150 | 50 | 50 | - | 12250 | - |
| ஆகஸ்ட் | 3150 | 550 | 50 | - | 12000 | - |
| செப்டம்பர் | 3000 | 900 | 50 | 250 | 12050 | 1500 |
| ஒக்டோபர் | 3150 | 50 | 50 | 1450 | 12500 | - |
| நவம்பர் | 3000 | 50 | 50 | 1500 | 12100 | - |
| டிசம்பர் | 3150 | 50 | 50 | 900 | 13900 | - |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் உரித்தான மாதிரிப்படிவங்கள் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவற்றை மீளளிக்கப்படாத ரூபா 1000/- இற்கான தொகையை தென் மாகாண கடற்றொழில் கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சு அலுவலகத்தில் செலுத்தி 2021 மே மாதம் 07ஆம் திகதி வரை வார வேலை நாட்களில் பி. ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2002 மே மாதம் 10ஆம் திகதி பி. ப. 4.30 இற்கு முன்னர் 'தலைவர், பெறுகைக் குழு, தென் மாகாண கடற்றொழில் கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சு, 2ஆம் மாடி 'தக்ஷிணபாய' லபுதுவ' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம் என்பதுடன் அன்றைய தினம் உடனடியாக அதேநேரம் அவை திறக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை தென் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென்மாகாண கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி அமைச்சு,**
**2ஆம் மாடி, 'தக்ஷிணபாய',**
**லபுதுவ, காலி.**
**தொ. பே. இல. 091 2246621**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
LAKE HOUSE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

திகதி 22.04.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4459
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,617,310.00
ஆங்கில எழுத்து: X | வெற்றி இலக்கங்கள்: 8 2 3 9 2 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,539,164.00

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2754
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,693,940.00
ஆங்கில எழுத்து: O | வெற்றி இலக்கங்கள்: 05 32 40 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,780,817.20

**Mega POWER மெகா பவர்** கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 818
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,115,040.00
ஆங்கில எழுத்து: T | சுப்பர் இலக்கம்: 07 | வெற்றி இலக்கங்கள்: 33 43 46 57
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 129,993,685.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 496
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,882,880.00
ஆங்கில எழுத்து: V | வெற்றி இலக்கங்கள்: 17 38 39 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,851,465.20

**செவண**
சீட்டிழுப்பு இலக்கம் : 331
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,347,200.00
ஆங்கில எழுத்து: F | வெற்றி இலக்கங்கள்: 22 39 49 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

22.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 714,014
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.28,656,370.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 01 ரூ. 100,000.00 பரிசுகள் 32

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## உற்பத்திக் கைத்தொழில் நிறுவனங்களை பதிவு செய்வது தொடர்பான அரசாங்க அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில்துறை ஊக்குவிப்புச் சட்டத்தின் பிரிவு 2 ற்கு அமைய அனைத்து உற்பத்திக் கைத்தொழில் நிலையங்களும் கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்படுவது அவசியமாகும். இதற்கமைய உற்பத்திக் கைத்தொழிலினை ஆரம்பித்து **03 மாதங்களிற்குள்** கைத்தொழில் நிலையம் அமைந்துள்ள இடத்தினை அமைச்சின் கீழ் பதிவு செய்ய வேண்டும் (இவை BOI உரிமைதாரர்களுக்கு பொருந்தாது)

**உற்பத்திக் கைத்தொழில் நிலையங்களை இவ் அமைச்சின் கீழ் பதிவு செயயும் கைத்தொழிலாளர்கள் கீழ்வரும் நன்மைகளை அல்லது சலுகைகளை பெற்றுக் கொள்ள முடியும்.**

- அரச அங்கீகாரம் பெற்ற உற்பத்திக் கைத்தொழில் முயற்சியாளராக இனங்காணப்படல்.
- அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட கைத்தொழில் பேட்டைகளில் காணிகளை நீண்ட கால நியாயமான குத்தகை அடிப்படையில் பெறுவதற்கான தகுதியைப் பெறல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்காக வழங்கப்படும் வரி சலுகை முறை (TIEP) இன் கீழ் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான வட் வரி சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளைப் பெறல்.
- கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு வெளிநாட்டு ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெறுவதற்குத் தேவையான வெளிநாட்டு நிபுணர்களுக்கான வருகை மற்றும் வதிவிட விசாக்களை (Entry &Residence) பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகளைப் பெறல்.
- உளளூர் பெறுமதி சேர் வாகன (Assembling Vehicle) மற்றும் மின் உதிரிப்பாக தயாரிப்பாளர்கள் வரிச்சலுகைகளைப் பெறல்.
- உற்பத்திக் கைத்தொழில் துறையாக பதிவு செய்வதனூடாக மாதாந்த மின்சார கட்டணத்திற்கான சலுகை கட்டண உரிமைகளைப் பெறல்.
- சர்வதேச தரப்படுத்தல் சான்றிதழ்களைப் பெறுவதற்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் முயற்சியாளர்கள் கடன் வசதிகளைப் பெறல்.
    - SMILE III – RF (உச்சத்தொகை ரூபா 25 மில்லியன், வட்டி வீதம் 8%)
    - E – Friends II –RF (உச்சத்தொகை ரூபா 30 மில்லியன், வட்டி வீதம் 6.5%)
- திடீர் அனர்த்தங்களின் போது கைத்தொழிலினை மேற்கொண்டு நடாத்துவதற்காக உரிய அரச நிறுவனங்களின் மூலம் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் உதவிகளைப் பெறல்.
- கைத்தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தி அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டறிய அமைச்சின் உதவியை பெறல்.
- நவீன தொழில்நுட்ப அறிவு மற்றும் தேர்ச்சியினை வழங்கும் நோக்குடன் அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்படும் பயிற்சிநெறிகளில் பங்குபற்றல்.

இதற்கான விண்ணப்பங்களை கைத்தொழில் அமைச்சின் வலைத்தளத்திலிருந்து www.industry.gov.lk (IRA) அல்லது கைத்தொழில் அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள பிராந்திய கைத்தொழில் சேவை மையங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 30/05/2021 ற்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| பா.குணாளினி (உதவிப்பணிப்பாளர் )<br>கைத்தொழில் பதிவு பிரிவு<br>கைத்தொழில் அமைச்சு<br>73/1, காலி வீதி, கொழும்பு 03 | தொலைபேசி 0112542708/0112431670<br>தொலைநகல் 0112542708<br>மின்னஞ்சல் industry.regist@gmail.com<br>ad_ir@industry.gov.lk |

மேலதிக தகவல்களை பெற
அமைச்சின் கீழுள்ள பிராந்திய கைத்தொழில் சேவை மையங்களினை தொடர்பு கொள்ளவும்.. பிராந்திய கைத்தொழில் சேவை மையங்களின் முகவரியினை அமைச்சின் வலைத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

செயலாளர்
கைத்தொழில் அமைச்சு.

**கிராமிய மற்றும் பிரதேச நீர் வழங்கல் திட்ட இராஜாங்க அமைச்சு**

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

## பெறுகை ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியை நீடித்தல்

2021.03.29ம் திகதி பிரசுரமான பெறுகை அறிவித்தலில் பெறுகை ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :- 2021.05.05 மு.ப. 10.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நிபந்தனைகள் மற்றும் விதிகள் மாற்றமின்றி காணப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
**இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி,**
**தலவத்துகொட.**

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மட்டக்களப்பு ஏறன்ஸ் ஒழுங்கை இல. 18, நாகப்பர் முருகுப்பிள்ளை கந்தசாமி என்பவருக்கு வத்தளை, ஹெந்தல, நாயககந்த, புனித மேரிஸ் ஒழுங்கை, இல. 12/7B தற்காலம் 6415, 23rd Avenue, Montreal (Quebec), HIT 3N2, Canada **நாகராஜா விவேகானந்தராஜா** ஆகிய என்னால் 3250 கிழக்கு ஜீன்-ரொலனி, மொன்ரியல், கியுபெக் (east Jean-Taloni, Montreal quebec Canada) கனடா H2A 1W1 இல் வசிக்கும் **MARYSE PAQUIN NOTARY** அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட 27.03.2017ம் திகதி கொண்ட மட்டக்களப்பு கிழக்கு வலயப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 05.05.2017ம் திகதி 300ம் தொடர் இலக்கத்தில் 25ம் புத்தகத்தில் 18ம் பக்கத்தில் பதியப்பட்டதுமான விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்கின்றேன் என்பதனை இலங்கை அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இனி இவரால் புரியப்படும் எந்த ஒரு செயலுக்கும் நான் பொறுப்பானவர் அல்ல என்றும் அறிவிக்கின்றேன்.

**நாகராஜா விவேகானந்தராஜா**

The Housewives' companion
Classifieds on
Daily News

### மீட்டுக்கொள்ளப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

வ/ப வயம்ப (வடமேல் மாகாணம்) கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தின் அடகு முகவர்களான வ/ப சிலாபம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின்,

**அம்பகந்தவில/வெல்ல/மயிக்குளம்/வெலிஹேன/தினபொல/ஜயபிம/முகுனுவட்டவன/முன்னேஸ்வரம்/குமாரகட்டுவ/பங்கதெனிய/சிலாபம்/மாதுவங்கம,**

கிளைகளில் 2019.12.31ஆம் திகதியுட்பட அன்றுவரை அடகுவைத்து, எனினும் 2021.05.21 வரை மீட்டுக்கொள்ளப்படாத நகைகள், 2021 மே மாதம் 22 சனிக்கிழமை மு.ப.9.00 முதல் வ/ப சிலாபம் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கூட்டுறவாளர், பொது முகாமையாளர்**
**வ/ப சிலாபம் பலநோக்குக் கூட்டுறவு சங்கம்**
**இல.41, கொழும்பு வீதி, சிலாபம்**
**தொ.பே - 0322222364**

### பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டம் ஜிந்துபிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில் இல. 90/11 விவேகானந்த வீதி, கொழும்பு -13 என்ற முகவரியில் வசிக்கும் **ஆனந்தன் ஜெயபிரபா** ஆகிய நான என் மகனான **ஹரித பிரசாத்** என்பவர் இன்று முதல் **கலைச் செல்வன் ஹரிபிரசான்** என்று அழைக்கப்படுவார் என்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**தாய்-ஆனந்த ஜெயபிரபா**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனியின் பெயர்:
**நொய்லென் ஓவர்சீஸ் இம்போர்ட் என்ட் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்:
**PV 00236964**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: **22.03.2021**

பதிவு முகவரி:
**இல.54, ஸ்டேசன் வீதி, வத்தள**

**செயலாளர்**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**எக்ஸ்பெர்ட் லெப்ஸ் (பிவீடி) எல்டிடீ**

பதிவிலக்கம்: **PV 00237715**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: **05.04.2021**

பதிவு முகவரி:
**இல.724/4, மெதவெல வீதி, எரவல்ல, பன்னிபிட்டிய**

**கம்பனி செயலாளர்**

### பெயர் மாற்ற அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளின் கீழான அறிவித்தல்.

கம்பனியின் பழைய பெயர்:
**டைனமிக் மோட்டர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**

கம்பனி பதிவு இல.: PB 4803 PV

கம்பனி பதிவு முகவரி :
**இல. 273/5, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.**

கம்பனியின் புதிய பெயர்:
**பிரீமியர் பிசிஸியன்ஸ் மெடிகள் குரூப் (பிறைவட்) லிமிட்டட்**

**சபை கட்டளைப் பிரகாரம்**
**மெக்லரன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் - செயலாளர்கள்**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென்ற அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

**எஸ்.எல்.ஆர்.டி ரேடர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
PV 00212284
03.06.2019
279/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

**ரெஜீ மீடியா (பிரைவட்) லிமிட்டட்**
PV 00214014
27.07.2019
145, கடுவான கைத்தொழில்பேட்டை, கடுவான, வீதி, ஹோமாகம.

**சாவொஸ் தியரி (பிரைவட்) லிமிட்டட்**
PV 00216044
02.10.2019
444/C, நிவந்தம வீதி, ஜா-எல.

**எஸ் என் மார்க்கட்டிங் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
PV 00216718
18.10.2019
09, பாடசாலை ஒழுங்கை, பிலியந்தல.

**இமெட் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
PV 00223795
05.07.2020
18, வலகம்பா மாவத்தை, பொருபண வீதி, இரத்மலானை.

**கம்பனி செயலாளர்கள்**

**கீமெனேஜ்மன்ட் கன்சல்டன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு**

### சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

### சிறிய குளங்கள் மற்றும் பணியாளர் குழாம் மற்றும் பூங்காவிற்கு வருகைதருபவர்களின் நீர் வழங்கலுக்காக ''யாலவில்'' 4" பிவிசி குழாய் பதித்தல் (I ஆம் மற்றும் II ஆம் கட்டம் - 20 கி.மீ.)

**ஒப்பந்த இலக்கங்கள்.: LK-ESCAMP-DWC-117577-CW-RFB**
**LK-ESCAMP-DWC-124033-CW-RFB**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பத்தரமுல்ல, 82 ஆம் இலக்கத்திலுள்ள வனசீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு அமைச்சின் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

   அளவை அளவையிடலின் பிரகாரம் இப்பணியானது நீண்ட குழிகளின் அகழ்வு, பிவிசி குழாய்வரிசை பதித்தல், ஆள்செல் துவாரங்கள் அமைத்தல் மற்றும் நீண்ட குழிகளை மூடுதல் ஆகியனவாகும்.

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பில் சி-4 அல்லது மேற்பட்ட தரத்தில் CIDA (முன்னைய ICTAD) உடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

3. ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்வதற்கான தகமைக்காக தேவைப்படும் தகைமை தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு.

   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பின் வருடாந்த சராசரி பெறுமதி ஆகக் குறைந்தது 130 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த 05 வருடங்களில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வேலைகளுக்கு நிகரான இவ்வாறான தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடன் ஆகக் குறைந்தது இரு ஒப்பந்தங்களை நிர்மாணித்த அனுபவம் (இந்த தேவைப்படுத்தலுக்கு அமைந்தொழுகுவதற்காக மேற்கோள் காட்டப்படும் வேலையானது ஆகக் குறைந்தது 70% பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
   - பணிக்காக ஒதுக்கப்படும் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ பணிக்குழுவினர் பின்வருமாறு: சிவில் பொறியியலில் பெற்ற விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது NDT அல்லது நிகரான வேலைகளில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்துடன் நிகரான 5 வருட அனுபவம்
   - ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகள் நீங்கலாக ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவிற்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் தரவின் 4.3 வழங்கப்பட்டுள்ள மிக அவசியமான உபகரணங்களின் பட்டியல் (சொந்தமான, குத்தகைக்கு, வாடகைக்கு இன்னும் பலவும்) ஒன்றைக் கொண்டிருத்தல் அல்லது /மற்றும் சரியான நேரத்தில் சுவீகரிப்பு மற்றும் உரிமையாக்கல் முன்மொழிவுகள்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை, ESCAMP, செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 011 2888428 தொலைநகல்: 011 2888577) 2021 மே 20 ஆம் திகதி வரையும் வார நாட்களில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், 2021 மே 20 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு, ESCAMP, பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2021 மே 21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

7. அனைத்து விலைமனுக்களும் 1,600,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. தள பரீட்சித்தலானது 2021 மே 10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு யால தேசிய பூங்காவில் வனசீவராசிகள் அலுவலகத்தில் நடைபெறுவதுடன் விலைமனு முன்கூட்டமானது 2021 மே 11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும்.

9. விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களுடன் பிசிஏ-3 படிவத்தை (1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்டம்) சமர்ப்பித்தல் வேண்டும். **(http://www.drc.gov.lk/)**

10. எந்தவொரு பெற்றுக் கொண்ட விலைமனுவையும் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை கொண்டுள்ளதுடன் இது தொடர்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முகவரி பின்வருமாறு:**

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு – ESCAMP,**
**மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு,**
**இல.: 82, ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011 2888426/011 2888427**
**தொலைநகல்: 011 2888577**
**திகதி: 2021 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று.**

**இலங்கை துறைமுக அதிகார சபை**

## கேள்வி அறிவித்தல்

### பாவித்த/மேலதிகமான பண்டங்கள், உபகரணங்கள் மற்றும் பாவித்த வாகனங்களின் விற்பனை

### ஏலவிற்பனைத் திகதி: 06-05-2021

**ஏலவிற்பனை மற்றும் கேள்வி இலக்கம்: 440 மற்றும் 440A**

கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி துறைமுக முற்றவெளிகள் மற்றும் பண்டகசாலையில் உள்ள பின்வரும் பாவித்த மேலதிகமான பண்டங்கள் மற்றும் பாவித்த வாகனங்களை கொள்வனவு செய்து அகற்றுவதற்கான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

**ஏலவிற்பனை இல. 440 (மேலதிகமான பண்டங்கள், உபகரணங்கள்)**

கப்பல் உதிரிப்பாகங்கள் கடைசல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
மின்விசிறிகள் (கூரை மற்றும் மேசை) உதிரிப்பாகங்கள்
இயந்திராதிகள் உதிரிப்பாகங்கள்
மின்சாரப் பொருட்கள்

பாவித்த படகுகள்
பாவித்த புகைப்படப் பிரதி இயந்திரங்கள்
பாவித்த அலுவலகக் கதிரைகள், மேசைகள் மற்றும் கெபினெட்டுகள் உபகரணங்கள் மற்றும் ஏனையவை
பாவித்த தட்டச்சுப் பொறிகள் (ஆங்கிலம் மற்றும் சிங்களம்)
பாவித்த மின்சார கேத்தல்கள்
நானாவிதப் பொருட்கள் மற்றும் பல

**ஏலவிற்பனை இல. 440A (பாவித்த வாகனங்கள்)**

பாவித்த கார்கள்
பாவித்த லொறிகள்
பாவித்த அம்பியூலன்ஸ்கள்

பாவித்த மோட்டார் சைக்கிள்கள்
பாவித்த முச்சக்கர வண்டிகள்
பாவித்த டபள் கெப்கள்
பாவித்த டெய்லர்கள்

இயைபுடைய நிபந்தனைகள் மற்றும் கேள்விப் பட்டியலை மீளளிக்கப்படாத 250.00 ரூபா(+VAT) கட்டணம் செலுத்தி கெனல் முற்றவெளி, இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கல் பிரிவின், விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2021-04-27ஆம் திகதி 10.00 மணித்தியாலம் முதல் 2021-05-04ஆம் திகதி 14.30 மணித்தியாலம் வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு (www.slpa.lk) இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
**24-04-2021**

**இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**லொஜிஸ்டிக் பிரிவு,**
**இல. 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு - 01.**

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை தேசிய வைத்தியசாலை

**(சுகாதார அமைச்சு)**

### துணிவகைகளைக் கொள்வனவு செய்தல்

01. 2021-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் துணி வகைகளை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| உருப்படி இல. | உருப்படி | குறிப்பீட்டி இலக்கம் | உருப்படி களின் அளவு | 1-4 வரையான உருப்படி களுக்கான மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | 36" அகலமான வெள்ளை காரிக்கன் துணி | SF/01/2021 | 5000 மீற்றர்கள் | 3000.00 |
| 2. | 72" அகலமான நீல நிற காரிக்கன் துணி | | 10000 மீற்றர்கள் | |
| 3. | 72" அகலமான வெள்ளை நிற காரிக்கன் துணி | | 10000 மீற்றர்கள் | |
| 4. | 58" பச்சை நிற ஷீடிங் துணி | | 5000 மீற்றர்கள் | |

02. இலங்கையினுள் துணிகளை உற்பத்தி செய்யும் மற்றும் இலங்கைச் சந்தைக்கு துணிவகைகளை வழங்கும் அதிகாரபூர்வமான முகவர்கள் மட்டுமே இவ்விலைமனுக் கோரலில் பங்குபற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

03. விலைமனு ஆவணங்களை வாரத்தின் வேலை நாட்களில் 2021-04-27ஆம் திகதி முதல் 2021-05-13ஆம் திகதி வரை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. இல. 011-2691111 நீடிப்பு-2722)

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல்களை 2021-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு ஒப்படைப்பதானால் இலங்கை தேசிய வைத்தியசாலையின் தலைமைக் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து அவை திறக்கப்படும்.

**மருத்துவர் டபிள்யூ.கே. விக்கிரமசிங்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு 10.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk



கொழும்பு கொட்டாஞ்சேனை பிரிவு 306 பி 1 லயன்ஸ் கழகத்தின் 48ஆவது வருட பூர்த்தி விழா கொழும்பு, வித்யா வீதியில் அமைந்துள்ள பிரிவு 306 பி சர்வதேச லயன்ஸ் கழக செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட லயன் செல்வத்தம்பி துரைராஜா, லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பியலா, லயன் அல்ஹாஜ் எம். ஐ.எம். ரஸீக் மற்றும் ரிஸானா, லயன் சுனில் வட்டவல, லயன் சாய் ஜெயராம், லயன் பாலநாதன், லயன் தில்லைநாதன், லயன் பி. ராதாகிருஷ்ணன், லயன் சிவபாதசுந்தரம் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# கோணக்கலையில் குளவி கொட்டியதில் நால்வர் பாதிப்பு

பதுளை தினகரன் விசேட நிருபர்

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த நான்கு தொழிலாளர்கள் குளவிகொட்டுக்கு இலக்காகி பசறை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் பசறை கோணக்கலை பெருந்தோட்டத்தின் பசறைப் பிரிவில் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது.

தேயிலை மலையில் மரமொன்றிலிருந்த குளவிக்கூடு கலைந்து தொழிலாளர்ளை தாக்கியுள்ளது. மூன்று பெண் தொழிலாளர்களும், ஆணொருவருக்குமே பாதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து ஏனைய தொழிலாளர்கள் நெருப்பு புகையை ஏற்படுத்தியதனால் ஏற்படவிருந்த பெரும் பாதிப்புக்கள் குறைந்துள்ளன.

பாதிக்கப்பட்டதொழிலாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கிளன்டவன் தோட்டத்தில் தொழிலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



நுவரெலியா, இராகலை மாகுடுகல கிளன்டவன் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முற்பகல் நுவரெலியா – உடபுஸ்ஸலாவ பிரதான வீதியில் இராகலை சூரியகாந்தி சந்தியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத மலையக அரசியல் வாதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துமே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவற்றை வலியுறுத்தும் வகையிலான பதாதைகளையும் தோட்டத் தொழிலாளர்கள் ஏந்தியிருந்தனர்.

உரிய பராமரிப்பின்மையால் மாகுடுகல கிளன்டவன் தோட்டம் காடாக மாறியுள்ளது. இதனால் தேயிலை பயிர்ச்செய்கை அழிவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, காட்டை சுத்தப்படுத்தி தருமாறும், நிர்வாகத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தொழிலாளர்கள் கடந்த இரு மாதங்களாக பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் இத்தோட்டங்களுக்கு சென்ற பல அரசியல் பிரமுகர்களும், உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதியளித்தனர். அந்த உறுதிமொழி இன்றளவிலும் நிறைவேற்றப்படவில்லை. தோட்டத்தை பொறுப்பேற்றுள்ள புதிய நிர்வாகமும் அசமந்தமாக செயற்படுகின்றது.

இந்நிலையிலேயே தமக்கு விரைவில் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாகவும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# குகுலே கங்க வனத்தில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 9 பேர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

வனபரிபாலன திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள கலவான குகுலே கங்க வனத்தில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்ந்த 9 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குகுலேகங்க வனப்பிரதேசத்தில் வேட்டையாடுவதில் ஈடுபடுவோருக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக வனத்தில் தேடுதல் நடத்திய போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினக்கல் அகழ்வதற்கு பயன்படுத்திய ஓட்சிசன் உபகரணங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் கூடைகள், மண்வெட்டிகள் போன்ற உபகரணங்களும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் வனப்பாதுகாப்பு அதிகாரிகளிடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.





KOREA CAVITATION நிறுவனத்தின் பூரண அனுசரணையில் கொட்டாஞ்சேனை பகுதியிலுள்ள குறைந்த வருமானம் பெறும் கும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை KCC மொட்ரோ லின்க் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி பி.ஆர்.எல்.மயிக்கலின் நிதி அனுசரணையில் வழங்கி வைக்கப்பட்டது.நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனும் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்த போது பிடிக்கப்பட்ட படங்கள்....


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

SPHR - 3043, KIA Sephia Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770 10 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 030323

SP CAV-4249 TATA NANO Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0 7 7 010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030355

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

WP KC-2908 Maruti Suzuki Alto Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030373

**113 சுசூகி கார்கள் விற்பனைக்கு**

WP CAI-0453 Suzuki Stingray Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030366

**117 வேன்கள் விற்பனைக்கு**

WP HC-4111 Mazda Bongo Van அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030368

590914 Nissan Caravan Van அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030325

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

EP DAC-3040 TATA XENON Light Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030332

NPDAE - 3752 Mahindra Bolero Maxi Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 030321

NPPS-1316 Mahindra Maxximo Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030344

NWLE - 5330 mitsubishi Canter Carrier அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030350

SG NA-0286 Lanka Ashok Leyland Bus அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030353

SP PX-3286 TATA Super Ace Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030358

UP LM-0848 Lanka Ashok Leyland அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030363

WP NC-4546 Lanka Ashok Leyland Viking அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030379

61-8278 Isuzu Journey Bus அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030326

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

EP BIE-8394 TVS Apache 160 4V அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030328

EP BIU -7832 Hero HF Deluxe அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030329

EP BIW -2220 TVS Wego அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030331

NC BIQ-7201 Hero Pleasure Motor Bike அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030334

NC BIS-0142 Hero Maestro Edge Motor Bike அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030339

NC BIX -1181 Hero Aprilia Motor Bike அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030341

NWLB - 5499 Lanka Ashok Leyland - E Comet அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030346

**124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு**

NCRF - 4361 Massey Ferguson Tractor அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030320

NWRF - 4298 Massey Furguson Tractor அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 030351

### வேலைவாய்ப்பு

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

உணவக சேவையாளர் வெற்றிடம்

பேலியகொட மெனிங் மார்க்கெட் புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியின் உணவகத்திற்கு கீழ்க்காணும் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளல். உள்ளூர் உணவுகள், இந்தியன், சைனீஸ், ரைஸ், கொத்து, சோடீஸ், பேஸ்ட்ரி தயாரிக்க பயிற்சி பெற்ற அனுபவமுள்ள பாஸ்மார் நேர்முகத் தேர்விற்கு வார நாட்களில் மத்திய பஸ் நிலைய மேதா கட்டிடம் முதலாம் மாடி, இல. 101 அறைக்கு வாருங்கள். தொடர்பு 0777971196, 0777958149. 029192


# கண்டியில் நிவாரண பொருட்கள் வழங்கல்

மாவத்தகம தினகரன் நிருபர்



கண்டியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவி மற்றும் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

லண்டனிலுள்ள மஸ்ஜிதுல் ஜன்னா மற்றும் கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் அனுசரணையுடன் கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் கண்டி மாவட்ட ஜம்மிய்யத்துல் உலமா சபை மற்றும் கண்டி கட்டுக்கலை பள்ளிவாசல் , மிஸ்க் இளைஞர் அமைப்பு முதலியவற்றின் ஏற்பாட்டில் கண்டியில் கடந்த 15.04.2021 அன்று கடுமையான மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட சிங்கள, முஸ்லிம், தமிழ் குடும்பங்களுக்கு உலருணவு நிவாரணப் பொதிகளுடன் தலா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ரூபா 5,000 நிதி உதவியும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த வெள்ளத்தினால் சுதுஹூம்பொல, தெய்யனவல பகுதிகளில் பாதிக்கப்பட்ட சிங்கள, முஸ்லிம், ,தமிழ் ஆகிய 200 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கண்டி கட்டுக்கலை பள்ளிவாசல் நிர்வாக உத்தியோகஸ்தர்கள், கட்டுக்கலை மிஸ்க் வாலிப சங்கத்தினர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



டவர் ஹோல் நிதியத்தின் அரங்க மன்றம் நடாத்தி வரும் நாடக அரங்க கற்கைக்கா 2021 ம் வருடத்துக்கான புதிய மாணவர்களை சேர்த்து கொள்ளும் நிகழ்வு எல்பின்ஸ்டன் கலையரங்கில் புதன்கிழமை (21) மாலை நடைபெற்ற போது அமைச்சின் செயலாளர் திருமதி கே.ஏ.டி.நிசாந்தி ஜயசிங்க மங்கள விளக்கேற்றுவதையும் டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசிம் உமர் மாணவி ஒருவருக்கு சீருடை வழங்குவதையும் நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஜீ.டீ.ஜினதாச, பேராசிரியர் திருமதி குக மூர்த்தி, கொழும்பு மாநகர ஆணையாளர் ரோசி திசாநாயக்க ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# கல்முனையில் மீண்டும் கொரோனா அபாயம்

## கல்முனைப் சுகாதார பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன்

(காரைதீவு குறூப் நிருபர் சகா)



கல்முனையில் மீண்டும் கொரோனா தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கல்முனைப் பிராந்தியத்தில் 1497 பேருக்கு இதுவரை கொரோனா தொற்று இனங்காணப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நீண்டநாட்களுக்குப் பிறகு நேற்றைய தினம் (23) அட்டாளைச்சேனையில் ஏழு பேரும் பொத்துவிலில் இரண்டு பேரும் புதிதாக இனங்காணப்பட்டிருக்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் 372 பேரும் கல்முனை தெற்கில் 349 பேரும் அட்டாளைச்சேனை 126 பேரும் பொத்துவில் 96 பேரும் சாய்ந்தமருது 99 பேரும் காரைதீவு 93 பேரும் ஆலையடிவேம்பு 52 பேரும் சம்மாந்துறை 68 பேரும் இறக்காமம் 37 பேரும் நிந்தவூரில் 65 பேரும் கல்முனை வடக்கில் 82 பேரும் நாவிதன்வெளி 32 பேரும் திருக்கோவில் 26 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

# காணவில்லை



மொறட்டுவை, மொல்பே இல. 379 ஏ த சொய்சா வீதி முகவரியில் வசிக்கும் பிரியங்க புத்திக என்பவர் கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளாரென மொறட்டுவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரை இறுதியாக பார்த்தபோது அவர் கறுப்பு நிற கோடுகள் கொண்ட சட்டையும், கறுப்பு காற்சட்டையும் அணிந்திருந்தார். இவர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரியுமானால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 0761503280, 0701709198, 0777609262 மற்றும் 0754428916 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கோ தொடர்பு கொள்ளுமாறு அல்லது லீலானந்த என்பவருக்கு தகவல் தெரிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# இந்திய செய்திகள்



# தமிழகத்தில் மே 2 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை

தமிழக சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் மே 2ம் திகதி காலை 8 மணிக்கு எண்ணப்படும் என தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார். தமிழகத்தில் மொத்தமுள்ள 234 சட்டசபை தொகுதிகளிலும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

அதேபோன்று கன்னியாகுமரி மக்களவை தொகுதிக்கும் இடைத் தேர்தல் நடைபெற்றது. 234 தொகுதிகளில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, அமமுக, மநீம, நாம் தமிழர் கட்சி மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 3,998 பேர் போட்டியிட்டனர்.




தமிழகத்தில் மொத்தமாக 88,937 வாக்குப்பதிவு நிலையங்களிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலமே வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்துக்கு அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது. பின்னர் துணை இராணுவ வீரர்கள் பாதுகாப்புடன் வாகனங்களில் ஏற்றி வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

அங்கு தயாராக இருந்த பாதுகாப்பு அறைகளில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மட்டும் 75 வாக்கு எண்ணும் நிலையங்கள் உள்ளன. அங்கு பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை எதிர்வரும் மே 2ம் திகதி நடைபெற உள்ளது. இந்நிலையில் தமிழக தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது; வாக்கு எண்ணிக்கைக்கான மேசைகளை குறைப்பது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை.

வாக்கு என்னும் அறை சிறியதாக இருந்தால் 2 அறைகளில் எண்ணிக்கை நடைபெறும். ஒரு அறைக்கு 7 மேசைகள் என்று 14 மேசைகளில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும். முகவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்வது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். 72 மணி நேரத்துக்கு முன் கொரோனா பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்பதால் விரைவில் அறிவிக்கப்படும்.

அனைத்து தொகுதிகளிலும் மே 2ம் திகதி காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும். காலை 8 மணிக்கு தபால் வாக்குகளும், 8.30 மணிக்கு இயந்திரத்தில் பதிவான வாக்குகளும் எண்ணப்படும் எனவும் கூறியுள்ளார்.

## தமிழகத்தில் இன்று இரவு 10 மணியில் இருந்து 30 மணி நேரம் வெளியில் செல்ல தடை



தமிழகத்தில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து உள்ளதை அடுத்து பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 20ந்திகதி முதல் தினமும் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. நேற்று 3வது நாளாக இரவு நேர ஊரடங்கு கடைபிடிக்கப்படுகிறது.

தினமும் இரவு நேர ஊரடங்கு கடைப்பிடிக்கப்படும் நிலையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முழு ஊரடங்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முழு ஊரடங்கின்போது அவசர தேவைகளுக்காக மட்டுமே பொது மக்கள் வெளியே வர வேண்டும் என்றும், தேவை இல்லாமல் யாராவது வெளியில் சுற்றினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று இரவு (சனிக்கிழமை) 10 மணியில் இருந்து 4வது நாளாக இரவு நேர ஊரடங்கு கடைபிடிக்கப்படும் நிலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கும் கடைபிடிக்கப்படுகிறது.

இரவு நேர ஊரடங்கின் போது இரவு 10 மணியில் இருந்து மறுநாள் அதிகாலை 4 மணி வரை பொதுமக்கள் வெளியில் வருவதற்கு தடை உள்ளது.

இதனுடன் சேர்ந்து ஞாயிற்றுக்கிழமை முழுவதுமாக 24 மணி ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் பொதுமக்கள் இன்று இரவு 10 மணியில் இருந்து திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை வெளியில் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் 30 மணி நேரம் தொடர்ச்சியாக வீட்டுக்குள்ளேயே முடங்கி இருக்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

முழு ஊரடங்கின் போது அத்தியாவசிய தேவைகளுக்கான வாகனங்கள் மட்டும் அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு இந்தியாவில் கொரோனா

### ஜெட் வேகத்தில் தொற்று பரவுவதால் வெளிநாடுகள் இந்தியாவுக்கு செல்ல அச்சம்; விமான சேவைகள் ரத்து



கொரோனா நோயாளிகள் அதிகரித்ததை அடுத்து அரச மருத்துவமனைகளில் படுக்க வைக்க இடமில்லாததால் ஒரு படுக்கையில் இருவர் உள்ளனர். பீகார் மருத்துவமனை கட்டிலில் இருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்

இந்தியாவில் கொரோனா தொற்று உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு கட்டுக்கடங்காமல் மிக அதிவேகமாக பரவி வருகிறது. கொரோனா பாதிப்பில் முதலிடம் வகித்து வந்த அமெரிக்கா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடம் பிடித்துள்ளது.

இந்தியாவில் நேற்று மாலை வரை 24 மணி நேரத்தில் மட்டும் 3.32 இலட்சம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 2263 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் தொற்று ஜெட் வேகத்தில் பரவி வருவதால் பல்வேறு நாடுகள் இந்தியாவுக்கு காலடி எடுத்து வைக்கவே பதறுகின்றன. இந்தியாவின் பெயரை கேட்டாலே மற்ற நாட்டு மக்கள் அஞ்சும் நிலையில்தான் இந்தியாவின் நிலைமை இருக்கிறது. இந்தியா இங்கிலாந்து இடையிலான விமான சேவை இன்று முதல் ரத்து செய்யப்படுவதாக ஏர் இந்தியா கூறியுள்ளது.

இந்தியாவுடனான விமான சேவையை மே 3ம் திகதி வரை ஹொங்கொங் ரத்து செய்துள்ளது. நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளும் இந்தியாவுக்கான விமான சேவையை ஏற்கனவே ரத்து செய்துள்ளன. இந்த நிலையில் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து விமானங்கள் வர கனடா அரசு அதிரடியாக தடை விதித்துள்ளது. அடுத்த 30 நாட்களுக்கு இந்தியாவுக்கு விமானங்கள் இயக்கப்படாது என்று கனடா கூறியுள்ளது.

# மகாராஷ்டிரா கொரோனா சிகிச்சை நிலையத்தில் தீ; 13 நோயாளிகள் பலி

மகாராஷ்டிராவில் கொரோனா சிகிச்சை மையத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 13 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் கொரோனா தாக்குதல் மிக மோசமாக இருக்கிறது. நேற்று மட்டும் 67 ஆயிரம் பேர் புதிதாக தொற்றுக்கு ஆளாகி இருக்கிறார்கள். 568 பேர் உயிர் இழந்துள்ளனர்.

அனைத்து ஆஸ்பத்திரிகளும் நிரம்பி வழிகின்றன. போதிய ஒட்சிசன் மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமல் தொடர்ந்து பலரும் பலியாகி வருகின்றனர். எங்கு பார்த்தாலும் மரண ஓலமாக இருக்கிறது. இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன்பு மகாராஷ்டிரா மாநிலம் நாசிக்கில் கொரோனா ஆஸ்பத்திரியில் ஒட்சிசன் கசிவு ஏற்பட்டு 24 பேர் உயிர் இழந்தனர். இந்த சோகம் மறைவதற்குள் மற்றொரு ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட தீ விபத்தில் 13 கொரோனா நோயாளிகள் உயிர் இழந்து இருக்கிறார்கள்.




மகாராஷ்டிரா தலைநகரம் மும்பைக்கு அருகே பல்கார் மாவட்டம் உள்ளது. இங்குள்ள விரார் நகரில் விஜய் வல்லாப் என்ற தனியார் ஆஸ்பத்திரி செயல்பட்டு வந்தது. இங்கு கொரோனாவுக்காக சிறப்பு சிகிச்சை அளித்து வந்தனர்.

90 கொரோனா நோயாளிகள் சிக்சை பெற்று வந்தார்கள். அவர்களில் உடல் நிலை மோசமாக இருந்த 16 பேர் தீவிர சிகிச்சை வார்ட்டில் (ஐ.சி.யூ.) அனுமதிக்கப்பட்டு இருந்தனர். இந்த வார்ட் 2வது மாடியில் இருந்தது.

நேற்று அதிகாலை 3.15 மணிக்கு அந்த வார்ட்டில் திடீரென தீப்பற்றியது. அப்போது 2 தாதிகள் மட்டும் பணியில் இருந்தனர். தீ பிடித்ததும் அவர்கள் வெளியே ஓடி வந்தார்கள்.

அதற்குள் வார்ட் முழுவதும் தீ மளமளவென பரவியது. படுக்கையில் இருந்த நோயாளிகள் சிக்கிக் கொண்டனர். ஏற்கனவே உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நிலையில் இருந்த அவர்களால் உடனே எழுந்து வெளியே ஓட முடியவில்லை.

அவர்கள் அனைவரையும் தீ சூழ்ந்து கொண்டது. மேலும் வார்ட் முழுவதும் புகை பரவியது. அதில் சிக்கிக் கொண்ட 13 நோயாளிகள் தீயில் கருகி உயிரிழந்தனர். 3 பேர் மட்டும் உயிர் தப்பினார்கள்.

## இந்தியாவுக்கு உதவ தயாராக இருப்பதாக பிரான்ஸ் தெரிவிப்பு



இந்தியாவில் கொரோனா தொற்று பாதிப்பு உச்சத்தில் உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் ஒருநாளில் ஏற்பட்ட கொரோனா பாதிப்பு 3.30 இலட்சத்தை தாண்டியது.

கொரோனா பரவலை கட்டுப்படுத்த மத்திய மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. தடுப்பூசி போடும் பணியும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. எனினும் கொரோனா பரவல் கட்டுக்குள் வர மறுக்கிறது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு மாநிலங்களில் கட்டுப்பாடுகளும் கொண்டு வரப்பட்டன.

இந்த நிலையில், பிரன்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் கொரோனாவுக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக்கு உதவ தயாராக இருப்பதாக கூறியதாக இந்தியாவுக்கான பிரான்சு தூதர் தெரிவித்துள்ளார்.

பிரான்சு தூதர் இமானுவேல் லெனைன் தனது டுவிட்டரில் கூறியிருப்பதாவது: கொரோனாவுக்கு எதிரான இந்த போராட்டத்தில் பிரான்ஸ் உங்களுடன் இருக்கிறது.

எங்களின் ஆதரவை அளிக்க தயாராக இருக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்திற்கு 20 இலட்சம் கொரோனா தடுப்பூசி தேவை

### பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்




கொரோனா சிகிச்சையில் அத்தியாவசிய மருந்தான ரெம்டெசிவிர் விநியோகத்திற்கு கட்டுப்பாடுகள் விதிக்கக்கூடாது என்று பிரதமருக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதி உள்ளார். தமிழகத்தில் தடுப்பூசிக்கு சில இடங்களில் பற்றாக்குறை உள்ள நிலையில் பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதி உள்ளார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

★ தமிழகத்திற்கு 20 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளை விரைந்து வழங்க வேண்டும். தினமும் 2 இலட்சம் தடுப்பூசி போட திட்டம் உள்ளதால் 10 நாட்களுக்குத் தேவையான தடுப்பூசியை அனுப்புங்கள்.

★ குறைந்தபட்சம் 10 நாட்களுக்குத் தேவையான 20 இலட்சம் கொரோனா தடுப்பூசி உடனே வழங்க வேண்டும்.

## கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டு முதல்-மந்திரி எடியூரப்பா வீடு திரும்பினார்




கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டதை அடுத்து முதல்மந்திரி எடியூரப்பா வீடு திரும்பினார். முன்னதாக அவர் வைரஸ் பரவல் தடுப்பு கட்டுப்பாடுகள் மேலும் தீவிரமாக்கப்படும் என்று கூறினார்.

முதல்மந்திரி எடியூரப்பாவுக்கு கடந்த 16ந் திகதி 2வது முறையாக கொரோனா பாதிப்பு ஏற்பட்டு இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவருக்கு லேசான நோய் அறிகுறிகள் இருந்ததை அடுத்து பெங்களூர் எச்.ஏ.எல். ரோட்டில் உள்ள மணிப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அவரது உடல்நிலை இயல்பான நிலையில் இருந்ததால், அவர் அந்த மருத்துவமனையில் இருந்தபடியே காணொளி மூலமாக பல்வேறு ஆலோசனை கூட்டங்களை நடத்தினார்.

இந்த நிலையில் எடியூரப்பா கொரோனா பாதிப்பில் இருந்து பூரண குணம் அடைந்து மீண்டதை அடுத்து அவர் 6 நாட்கள் சிகிச்சைக்கு பின் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மணிப்பால் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

# இந்திய பெண்ணுக்கு அமெரிக்காவில் பதவி



அமெரிக்காவின் இணை சட்டமா அதிபராக இந்தியாவை பூர்வீகமாக உடைய வனிதா குப்தாவை (45) நியமிக்க, பாராளுமன்ற செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட வனிதா குப்தா, சமூக உரிமைகள் தொடர்பான விஷயத்தில், அமெரிக்காவில் தலைச்சிறந்த வழக்கறிஞர். ஒபாமா அதிபராக இருந்தபோது, உதவி சட்டமா அதிபராக பணியாற்றியுள்ளார். ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் அதிபராக பதவியேற்ற பின், நீதித் துறையில் மூன்றாவது உயரிய பதவியான, இணை சட்ட மாஅதிபராக வனிதா குப்தாவை நியமித்தார்.

அவரது நியமனத்தை உறுதி செய்வதற்காக செனட் சபையில் வாக்கெடுப்பு நடந்தது. மொத்தம், 100 உறுப்பினர்கள் உள்ள செனட் சபையில், ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசு கட்சிக்கு தலா, 50 உறுப்பினர்கள் உள்ளனர். குடியரசு கட்சியின் லிசா முர்கோவ்ஸி ஆதரித்து வாக்களித்ததால், 51 - 49 என்ற வாக்கு விகிதத்தில், வனிதா குப்தா நியமனத்துக்கு, செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

# கனிக்கூட்டங்கள் ஏந்திய உன்வருகை



எனக்கென நீவிட்டுச் சென்ற
ஒவ்வொரு ணங்களும்
ஒரு கோடைக்கும்,மாரிக்கும்
இடைப்பட்ட காலத்து மழைபோல்
மிகப் பெறுமதி வாய்ந்தவை

போனமுறைக்கும்
இம்முறைக்கும் நடுவே
நிறையவே நிகழ்ந்து விட்டன
இதில் நான் எங்கு இருக்கிறேன்
என்று தேடும் அளவு அது

நீ
வளங்களைவாரி
வழங்கும் வரம் என்பதால்
சொப்பனங்களை அண்மித்த
என்வாழ்க்கையை மீளமை
ஏப்பமிடும் பகல்களை சிறை பிடி
விழித்திருந்து என்னுடன்
பிரார்த்திக்கத்தகு
இரவுகளை விரும்புவதால்
பிறை கூட்டங்களுடன்
இலங்கும் வானமே
உன் பொன்னந்திகளைத்தா

எதிர்பார்க்கும் நிமிசத்தில்
வந்த மர்ந்து ஒட்டிக் கொள்கின்றன
உன் பேரீத்தம் பழபிரியங்கள்
“இஃப்தார்”என்ற இதமாய்
இனிக்கும் மதுரங்களை
நாவாசிக்க
மனஆடையை
வெள்ளா விவைத்து வெளுக்க
என் இடை மூட்டைகளை
துலாம்பார்க்க
உன்னிடமே ஒப்படைக்க வேண்டியுள்ளன.

“ஸஹர்” சமவெளியில்
வேரினை விட்ட இடத்திலிருந்து தொடங்க
நிரந்தர திசைக்கான என் இருப்பை
ஆளப்பதிக்க
இறைபிரியத்தின் அதி உச்சகிளைகளை
நான்மேலே பரப்ப
குர்ஆனிய பூக்கள் குரல் வழிபூக்க
புனிதமிகு “ரமழானே”
கனிக் கூட்டங்கள்ஏ ந்திய
உன்வருகையுடன்
சுவனத்தை விட்டுச் செல் என்னிடம்.

ரோஷான்ஏ.ஜிப்ரி
கட்டாரிலிருந்து....

# அழகான பாசக்காரி...



அன்பின் பிறப்பே
கருணையின் உயிர்பே
உன்னைப் பிரிந்துவிட
என்னாலோ முடியாது
காரணமே இன்றி
கண்ணீரும் வடிப்பேன்
காலத்தை உணவாக்கி
காற்றோடு கலப்பேன்

நீஎன்னை அழைத்திடும்
வார்த்தைகள் அமுதமோ
எப்போதும் தித்திக்கிறதே
நாவினில் அல்ல என்செவிதனில்
உருக்கொடுக்கிறேன் அவைக்கு
உருகியும் போகிறேன் அவைக்கு

ஏது வேண்டும் என நீஉரைக்க
அன்புகாட்ட நீதான் வேண்டும்
என்று நானுரைக்க முடியவில்லை
நாவோதடம் புரண்டு வேறுவழி
வருகிறது உன்னை காயமும்
நித்தம்படுத்துகிறது.
பேச வேண்டும் என்று காத்திருக்க
தவிக்கவிட்டு தூங்கிடும் என்குணமோ
உன்னை வெறுத்திட வைத்திடுமோ
நான் கொண்ட அளவு கடந்த நேசத்தை
முடிந்தால் புரிந்துவிடு இன்றே
முறியாமல் நாம்பயணிக்க.

காலமெல்லாம் தோழனாக
காத்திடவே காத்திருப்பேன்
உன்வாழ்வினிலே உயர்ந்து நிற்க
பாதடியாவும் நான் இருப்பேன்
உன்வலிகளை கொட்டுகின்ற
தொட்டியாகவும் திகழ்ந்திடுவேன்
எனை பிரிந்தாலும் மறவாமல்
மண்ணிலே இருந்திடுவாய்
நான் விண்ணிலே இருந்தாலும்
என் மனதிலே நீ இருப்பாய்....

வன்னித் தமிழ் மறவன்...

# பட்டமரத்தின் புலம்பல்



கட்ட மரம் சொன்ன கதை
பாமரனும் அறியச் செய்வான்
இந்த பட்ட மரத்தின் தனிமைதனை
யார் அறிவார் இவ்வுலகில்
என்னகேடு நான் செய்தேன்
இத்தனிமை எனை நாட
என எண்ணிக் கொண்டே வாழ்கின்றேன்
இப்புவிவாழ்வுதனை

சோகங்கள் ஒரு பக்கம்
சொர்க்கமாய் தொடர்ந்திட
சோதனையும் என் முன்னே
சாதனையாய் திகழ்ந்திட
தூக்கத்தில் விழித்திடும்
குழந்தையாய் நானும்
போராடத்துணிவின்றி
தூக்கம் விட்டு எழுகின்றேன்

எத்தனையோ எண்ணங்கள்
என்னிடத்தில் இருந்தாலும்
அத்தனையும் பகல்கனவாய்
கண்விழித்தே காண்கின்றேன்
இத்தனையும் ஓர் நாளில்
நடந்துவிடலாம் என
சித்தமேதுணை என்று
சிந்தனையில் இருக்கின்றேன்.....

தேவந்தி (சயூரன்)
காரைதீவு

# நகைச்சுவையின் நாயகா!



நீ
சிரிப்புலகின்
தலைநகரம்!

தமிழ்சினிமாவுக்கு
நீ
அக்குளுக்குத்தியவன்!

படத்துக்குள்
பாடம்புகட்டிய
பேராசான்!

உன்
சிரிப்புமழையில்
நனைந்தவர்களுக்கு
வருவதில்லை
கவலைக்காய்ச்சல்!

உன்னைக்
காட்டத்தொடங்கினால்
கதாநாயகர்களைப்பற்றி
யோசிப்பதில்லை
ரசிகர்கள்!

உன்
உடல்மொழிக்கு
முன்னால்
உலகைஆளும்
ஐரோப்பியமொழிகள்
தோற்றுப்போகும்!

ஒரு
தமிழ்ப்படத்தில்
நீதான்
இரண்டாவதுகதாநாயகன்!

சின்னக்கலைவாணர்
என்கிறார்கள்
உன்பெரியநடிப்பை
ரசிக்கத்தெரியாதவர்கள்!

உன்மரணம்
கொரானாவினால்வந்தடைந்த
மற்றுமொரு
பள்ளத்தாக்கு!

தமிழ்உலகில்
நீதான்
மிஸ்டர்பீன்!

தடுப்பூசி
போட்டுக்கொண்டது
நீதான்
மயங்கிவிழுந்தது
திரையுலகம்!

நீ
ஹாஷ்யக்கடல்
உன்னில்இருந்தது
அறிவுவெள்ளம்!

நீ
பேசஆரம்பித்தால்
கடுந்தவமிருக்கும்
முனிவருக்கும்வரும்
ஒருகிலோச்சிரிப்பு!

சிரிப்புலகின்
மொத்தவியாபாரியே
உன்மறைவினால்
தேம்பிக்கிடக்கிறது
தேசம்!

ஷல்மானுல்ஹாரிஸ்



# அந்த நாள் ஞாபகம்

கையடக்கதொலைபேசி
தொலைந்துபோனது
தொல்லைதீர்ந்து
எல்லைமீறிசென்ற
காலத்தின்நகர்வுகளில்
பின்நோக்கிசென்று
மீட்டிக்கொண்ட
கலந்துரையாடலில்
மகிழ்வும் நெகிழ்வும் ஏற்பட்டது.
பத்திரிகையும், வானொலியும்
அதிககவனம் செலுத்திக் கொண்டது
எவ்வாறு பயன்படுத்தி
பயணித்தோம் என்ற புத்துணர்வும்
உள்ளுணர்வுகளில் உராசிச் சென்றது.
காகிதத்தின் கதறலில்
கடிதங்கள்பறந்து சென்று
அனுப்பிவிட்டு
ஏங்கிதவிக்கும்
பரிதவிப்பின் சுகத்தில்
அகத்தில் ஆனந்தம் பூரிப்பாகியது
பேனா நண்பன், போஸ்ட்கார்ட் என்று
கிறுக்கிக் கொண்ட எழுத்துகளும்,
தபால்காரனுக்கு கரச்சல் கொடுத்து
சந்திக்கும் போது புன்னகைத்ததும்
தவிர்க்க முடியாத குதூகலம்
புத்தகங்களின் புரட்டப்பட்ட
பக்கங்களும் நீங்காத
இடத்தை பெற்று
இன்றுவற்றிக் கொண்டு
வெற்றிக்கு வழிவகுக்காது
என்பதை உணர்ந்துகொண்டு
திரும்பிசெல்ல
மீண்டும் அந்தகாலத்தின் ஞாபகத்துடன்.

மபாஸ்






## பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட்:

# இலங்கை அணி 229/3 ஓட்டங்கள் பெற்று நிதான ஆட்டம்



பங்களாதேஷ் அணிக்கு எதிராக தனது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி 3ம் நாள் ஆட்ட நேர முடிவில் மூன்று விக்கெட்டுக் களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக அணியின் தலைவர் திமுத் கருணா ரத்ன மற்றும் லகிரு திரிமான்ன ஆகியோர் களமிறங்கி முதலாவது விக்கெட்டுக்காக 114 ஓட்டங்கள் பெற்றபோது திரிமான்ன 58 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்தார். பின்னர் தலைவர் கருணாரத்தனவுடன் இணைந்தார் ஒஷத பெர்னாண்டோ 20 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க இலங்கை அணி 2 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 43 ஓட்டங்ளை பெற்றது. பின்னர் அஞ்சலோ மெத் திவ்ஸ் 25 ஓட்டங்களுக்கு ஆட்டமி ழக்க இலங்கை அணி ஒரு கட்டத் தில் தடுமாற்றத்தை எதிர்கொண்டது பின்னர் அணியின் தலைவருடன் இணைந்தார். தனஞ்சய டி சில்வா, அணியின் தலைவர் கருணாரத்தன வும் 4 ஆவது விக்கெட்டுக்காக 39 ஓட்டங்களை பெற்றனர்.

அணியின் தலைவர் கருணாரத் தன 85 ஓட்டங்களுடனும் தனஞ் சய டி சில்வா 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ள னனர்.

இலங்கை அணி பங்களாதேஷ் அணியை விட 312 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் உள்ளது.

பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக மிராஷ்,அஹமட் மற்றும் இஸ்லாம் ஆகியோர் தலா ஒரு விக் கெட்டை பதம் பார்த்தனர்.

முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்க ளாதேஷ் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 541 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. அவ்வணி சார்பாக மூன்றாவது நாள் ஆரம்பமான போது அவ்வணி சார்பாக 3 விக்கெட்டுக்கள் இழக்கப் பட்ட வேளை பின் வரிசை வீரர்கள் சரியாக துடுப்பெடுத்தாட வில்லை அதனால் அவர்கள் குறைந்த ஓட் டங்களுக்கு ஆட்டமிழக்க லிட்டன் தாஸ் 50 ஓட்டங்களுடனும் முஸ்பி குர் ரஹீம் 68 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழக்காமல் களத்தில் இருக்க ஆட் டத்தை இடைநிறுத்தியது.

**இலங்கை அணி**

திமுத் கருணாரத்ன (தலைவர்), லஹிரு திரிமான்ன, ஓசத பெர்னாண்டோ, அஞ்செலோ மெதிவ்ஸ், பெதும் நிஸ்ஸங்க, தனன்ஜய டி சில்வா, நிரோஷன் டிக் வெல்ல, சுரங்க லக்மால், வனிந்து ஹசரங்க, லஹிரு குமார, விஷ்வ பெர்னாண்டோ

**பங்களாதேஷ் அணி**

தமிம் இக்பால், சயிப் ஹசன், நஜ்முல் ஹுசைன் செண்டோ, மொமினுல் ஹக் (தலைவர்), முஷ் பிகூர் ரஹீம், லிடன் டாஸ், மெஹிடி ஹாசன், தாஜுல் இஸ்லாம், டஸ்கின் அஹமட், அபு ஜெயட், எப்டொட் ஹுசைன்

சதத்தை கடந்திருந்த நஜ்முல் ஹுசைன் சென்டோ மற்றும் அரைச் சதம் கடந்திருந்த அணித்தலை வர் மொமினுல் ஹக் ஆகியோர் இலங்கை அணியின் பந்துவீச்சா ளர்களுக்கு ஆட்டமிழப்பு வாய்ப்பு களை கொடுக்காமல் துடுப்பெடுத் தாடினர்.

இதில், மதியபோசன இடைவே ளையின் போது, நஜ்முல் ஹுசைன் சென்டோ 150 ஓட்டங்களை கடக்க, மொமினுல் ஹக் சதத்தைப பதிவு செய்தார். பின்னர், ஆரம்பித்த பங்க ளாதேஷ் அணியின் இன்னிங்ஸில், அசைக்க முடியாத இணைப்பாட் டத்தை பகிர்ந்த நஜ்முல் ஹுசைன் சென்டோ மற்றும் மொமினுல் ஹக் ஆகியோரின் விக்கெட்டுகளை கைப்பற்றும் வாய்ப்பு இலங்கை அணிக்கு கிட்டியது.

லஹிரு குமார தன்னுடைய வேகப்பந்துவீச்சின் உதவியுடன், நஜ்முல் ஹுசைன் சென்டோவை (163) பிடியெடுத்து ஆட்டமிழக் கச்செய்ததுடன், மொமினுல் ஹக், தனன்ஜய டி சில்வாவின் பந்துவீச் சில் 127 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். இருப்பினும், இவர்கள் இருவரும் மூன்றாவது விக்கெட் டுக்காக 242 ஓட்டங்களை இணைப் பாட்டமாக பெற்றிருந்தனர்.

இவர்களையடுத்து, களமிறங்கிய முஷ்பிகூர் ரஹீம் மற்றும் லிடன் டாஸ் ஆகியோர் விக்கெட்டுக்களை விட்டுக்கொடுக்காமல் துடுப்பெ டுத்தாட, தேநீர் இடைவேளையின் போது, பங்களாதேஷ் அணி 4 விக் கெட்டுகள் இழப்புக்கு 440 ஓட்டங் களை பெற்றது.

தொடர்ந்து ஆரம்பமான இந்தப் போட்டியில், மழைக்குறுக்கிட்டது. எனினும், விரைவாக ஆரம்பித்த இந்தப்போட்டி, போதிய வெளிச் சமின்மை காரணமாக மீண்டும் நிறுத்தப்பட்டது. வெளிச்சமின்மை தொடர்ந்தமையால், இரண்டாவது நாளுக்கான ஆட்டநேரம் நடுவர்க ளால் நிறைவுக்கு கொண்டுவரப்பட் டது.

ஆட்டநேர நிறைவின் போது, பங்களாதேஷ் அணி 4 விக்கெட்டு களை இழந்து 474 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன், முஷ்பி கூர் ரஹீம் 43 ஓட்டங்களையும், லிடன் டாஸ் 25 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண் டனர். பந்துவீச்சில், விஷ்வ பெர் னாண்டோ 2 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்க, இன்றைய தினம் லஹிரு குமார மற்றும் தனன்ஜய டி சில்வா அகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அதேநேரம், பங்களாதேஷ் அணி டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில், இலங்கையில் வைத்து பெற்றுக் கொண்ட இரண்டாவது அதிகூடிய ஓட்டமாக இந்த ஓட்ட எண்ணிக்கை பதிவாகியுள்ளது. இதற்கு முன்னர் கடந்த 2013ம் ஆண்டு காலி மைதா னத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 638 ஓட்டங்களை குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டி யின் 4 ஆவது நாளாகும்.




# வலைப்பந்து போட்டியில் இராணுவ மகளிர் அணி சம்பியன்

படைப்பிரிவுகளுக்கு இடையில் (22) நடைபெற்ற உள்ளக வலைப்பந்து போட்டிக ளில் இராணுவ மகளிர் அணி சம்பியன் பட் டத்தை வென்றது.

மேற்படி போட்டியில் இலங்கை இராணு வம், பொலிஸ் படை, இலங்கை இராணுவ பொதுச் சேவை படை, இலங்கை சமிக்ஞை படை, இலங்கை இராணுவ மகளிர் படை உள்ளிட்ட 6 படையணிகளின் வலைப்பந்து அணிகள் வருடாந்த சம்பியன் பட்டத்துக்காக போட்டியிட்டனர். இதன்போது இராணுவத் தின் ஏ மற்றும் பி பிரிவு அணிகளுக்கு இடை யிலான போட்டிகளில் இலங்கை இராணுவ மகளிர் படையணி ஏ பிரிவை பிரதிநிதிதுவப் படுத்தி போட்டியிட்டதுடன் சம்பியன் பட் டத்தையும் வெற்றிகொண்டது.

அதனையடுத்து போட்டியில் வென்றவர் களுக்கான பதக்கங்களும் சான்றிதழ்களும் நிகழ்வின் பிரதம அதிதியாக அழைக்கப்பட் டிருந்த பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந் திர சில்வாவினால் வழங்கி வைக்கப்பட்டது.






# 2022 இல் 100 இலங்கை வீரர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி



இலங்கையில் தெரிவு செய்யப் பட்ட 100 விளையாட்டு வீரர்களை அடுத்த ஆண்டு முதல் தொழில் சார் ஒப்பந்தங்களில் இணைத் துக்கொள்ள நடவடிக்கை எடுக் கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

மஹேல ஜயவர்தன தலைமை யிலான தேசிய விளையாட்டு பேரவையின் மூலம் தேசிய விளை யாட்டு துறையை மேம்படுத்துவ தற்கான திட்டம் சமர்ப்பிக்கப்பட் டிருப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற அமர்வின் போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி யின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவின் கேள்விக்கு பதில் வழங்குகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்று கையில்,

பொருளாதார நெருக்கடிக்கு மத் தியில் விளையாட்டில் திறகைளை வெளிப்படுத்தி வருகின்ற வீரர் களின் எதிர்காலத்துக்காக எமது அரசாங்கம் ஒருசில முக்கிய வேலைத்திட்டங்களை முன்னெ டுத்துள்ளது. இதற்கான திட்டம் மஹேல ஜயவர்தன தலைமை யிலான தேசிய விளையாட்டுப் பேரவையினால் முன்வைக்கப்பட் டுள்ளது.

இதன் முதல் பகுதியாக 59 தொழில்சார் வீரர்களை விளை யாட்டுத்துறை அமைச்சுடன் ஒப் பந்தம் செய்வதற்கு அண்மையில் நடவடிக்கை எடுந்தோம். எனவே இரண்டாவது பகுதியில் இன்னும் 50 வீரர்களுக்கு தொழிசார் ஒப்பந் தங்களை வழங்குவதற்கு எதிர் பார்த்துள்ளோம் என அவர் தெரி வித்தார்.

பின்தங்கிய கிராமங்களில் உள்ள திறமையான வீரர்களை இனங்காண்பதற்கான பொறுப்பு விளையாட்டு சங்கங்களின் கைகளில் தான் உள்ளது. இதனால் ஒவ்வொரு விளையாட்டு சங்கங்க ளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி நாங்கள் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இதில் ஒன்று தான் நாட்டில் உள்ள விளையாட்டுப் பாடசாலை களுக்கு தரம் 8 இற்குப் பிறகு மாண வர்களை இணைத்துக்கொள்வ தும், விளையாட்டு குழாம்களுக்கு திறமையான வீரர்களைத் தெரிவு செய்வதும் ஆகும். அதேபோல, அனைத்து விளையாட்டு வசதிக ளையும் கொண்ட ஒருசில பாட சாலைகளை பெயரிட்டு அதற்காக மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். இதன்மூலம் கிராமப்புறங்களில் உள்ள வீரர் கள் முன்னணி பாடசாலைகளில் இணைந்துகொண்டு அவர்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியும் என அவர் கூறினார்.

இதனிடையே, நாட்டில் உள்ள பாடசாலைகளில் விளையாட்டுப் பயிற்சியாளர்கள் பற்றாக்குறை யாக இருப்பது தொடர்பில் அமைச் சர் கருத்து தெரிவிக்கையில்,

தகுதிபெற்ற பயிற்சியாளர்கள் இல்லாமை எமக்குள்ள முன்னால் உள்ள மிகப் பெரிய சவாலாகும். எங்களுடைய எதிர்பார்ப்பு ஒலிம் பிக் போட்டிகளில் ஒரேயொரு வீரரை மாத்திரம் அனுப்பமால் அதில் பங்கேற்கின்ற வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதா கும்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் விழாவில் பங்கேற்பதற்கான அடைவுமட் டத்தினை ஐந்து வீரர்கள் நெருங்கி யுள்ளார்கள். குறித்த வீரர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சிகளைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. இதன்மூலம் நிச்ச யம் எம்மால் ஒலிம்பிக்குக்கு தகு திபெற முடியும் என நம்புகிறேன்.

அடுத்த ஆண்டு முதல் அனைத்து விளையாட்டுக்களை யும் உள்ளடக்கிய வகையில் 100 வீரர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி களைப் பெற்றுக்கொடுக்க நடவ டிக்கை எடுப்போம் என அமைச்சர் இதன்போது பதிலளித்தார்.




# ராஜஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் பெங்களூர் அணி அபார வெற்றி!

ஐ.பி.எல். ரி20 தொடரின் 16ஆவது லீக் போட்டியில், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது. மும்பை மைதானத்தில் நேற்றுமுன் தினம் (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பை தீர்மா னித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் டுகள் இழப்புக்கு 177 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதி கப்பட்ச ஓட்டங்களாக, சிவம் டுபே 46 ஓட்டங்க ளையும் ராகுல் டிவெட் டியா 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில், சிராஜ் மற்றும் ஹர்சல் பட்டேல் 3 விக்கெட்டுகளையும் ஜேமீசன், கேன் ரிச்சட் சன் மற்றும் வொஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 178 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பெங்களூர் அணி, 16.3 ஓவர்கள் நிறைவில் எவ்வித விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இந்த வெற்றியானது ஐ.பி.எல். வரலாற் றில், சேஸிங்கில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்த மூன்றாவது சந்தர்ப்பமாகும்.

முன்னதாக 2017ஆம் ஆண்டு குஜராத் லயன்ஸ் அணிக்கெதிரான போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான கிறிஸ் லின் மற்றும் கௌதம் கம்பீர் ஆகியோர் 184 ஓட்டங்களை இணைப்பாட்டமாக கொண்டு போட்டியை நிறைவு செய்ததே முதல் சாத னையாக உள்ளது.

இதன்போது தேவ்தத் படிக்கல் ஆட்ட மிழக்காது 101 ஓட்டங்களையும் விராட் கோஹ்லி ஆட்டமிழக்காது 72 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 6 சிக்ஸர்கள் 11 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை பெற்று தனது முதல் சதத்தை பூர்த்திசெய்த தேவ்தத் படிக்கல் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.